
KALKI
11.3.84
ரூ.1.20
லாட்டரி எனும் லாகிரி
2.22 CRORES
கல்கி



FTZ என்றால் என்ன?

சென்னை தாம்பரம் பகுதியில் அரசாங்கம் ''சுதந்திர வாணிபக் கேந்திரம்'' (Free Trad϶ Zone) உருவாக்க இருக்கிறது. இதுபற்றி சில தகவல்கள்:

● ''சுதந்திர வாணிபக் கேந்திரம்'' என்றால் என்ன? அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட பகுதியை இப்படி அறிவித்து, அங்கே பலர் தம் தொழிலகத்தை அமைத்துப் பொருளுற்பத்தி செய்ய அனுமதி தரும். அவர்கள் தமக்கு வேண்டிய கச்சாப் பொருட்களையும், இயந்திரங்களையும் வரிகளே இல்லாமல் இறக்குமதி செய்து கொள்ளலாம். ஆனால் ஒரு கண்டிஷன். அங்கே உற்பத்தியாகிற பொருட்களை உள்நாட்டில் விற்பனை செய்ய முடியாது. ஏற்றுமதிக்கு மட்டுமே.

● சில பிரத்தியேக விதிகளின் கீழ் உள்நாட்டு விற்பனையையும் அரசு அனுமதிக்கிறது. ஆனால் அவை, இறக்குமதி செய்யப்படுகிற பொருளாய்க் கருதப்பட்டு, வரி விதிப்புக்குஉள்ளாகும்.

● சென்னை தாம்பரம் பகுதியில் தமிழக அரசுக்குச் சொந்தமான சுமார் 150 ஏக்கர் நிலத்தில் இப்பகுதி அமைக்கப்பட உள்ளது. இதையடுத்துள்ள சுமார் 200 ஏக்கர் நிலத்தையும் அரசாங்கமே வாங்கி, விஸ்தரிப்புக்கும் திட்டமிட்டுள்ளது.

● இந்தியாவில் தற்போது இரு சுதந்திர வாணிபக் கேந்திரங்கள் உள்ளன. ஒன்று கண்ட்லாவில் (குஜராத்) மற்றொன்று பம்பாயில்.

● பம்பாய் சுதந்திர வாணிபக் கேந்திரத்தில் எலெக்ட்ரானிக் இட்டங்கள் மட்டுமே உற்பத்தி செய்யலாம்.

● அரசாங்கமே ஒரேமாதிரியான கட்டிடங்கள் கட்டி,



பல நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விட்டுள்ளது.

● தமிழகத்தில் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் பொருட்களின் பட்டியல்: பல்வகைத்துணிமணிகள், சிறு மின்சார, சாதனங்கள், பெரியஇயந்திரங்கள், டின்களில் அடைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், கைவினைப் பொருட்கள், கம்ப்யூட்டர் சிப்ஸ், கண்டென்ஸர்கள், டெலிவிஷன், மிக்ஸி, கிரைண்டர்...

● இப்பகுதியில் இடங்கு, மின்சாரம், தண்ணீர், தபால் தந்தி, டெலக்ஸ் என்று பல வகை வசதிகள் செய்து தரப்படும். இந்தியாவின் எந்த நகருடனும், உலகின் முக்கிய நகரங்களுடன் தொடர்பு கொள்ள வசதி இருக்கும்.

● இங்கே உற்பத்தியைத் துவக்குபவர்களுக்கு முதல் 5 வருடங்களுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

● அவர்கள் ஏற்றுமதிசெய்கிற பொருட்களின் மதிப்புக்கு ஈடாக, தமது உற்பத்தியை மேலும் பெருக்கத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளலாம்.

● அங்கே மின் தட்டுப்பாடு இருக்காது.

● சென்னை சுதந்திர வாணிபக் கேந்திரத்தில் அயல் நாட்டில் வாழும் தமிழர்கள் நிறைய பேர் முதலீடு செய்ய வாய்ப்புகள் மிகுதி. வேலை வாய்ப்புக்கள் பெருகும்.

● இதற்கான பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இங்கே உற்பத்தியைத் துவக்கக் குறைந்த பட்சம் இரண்டாண்டுகளாவது ஆகும்.

● உலகில் இது போன்ற சுதந்திர வாணிபக் கேந்திரங்கள் ஜப்பான், தைவான் கொரியா, பிரான்ஸ், ஸ்பெயின், இன்னும் அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலுமாக மொத்தம் 43உள்ளன.

வி. ஜி. பன்னீர்தாஸ் சொல்ல
எஸ். சந்திரமௌலி

மனைவி: ''நாளைக்குக் கல்யாண நாள்; என்ன செய்யலாம்?''
கணவன்: ''மௌன விரதம் அனுஷ்டிப் போமே.''
—கிழை. அ. கதிர்வேல்.





லாட்டரி எனும் லாகிரி

நமது நிருபர்கள் சந்திரமௌலி, ப்ரியன் இருவரும் சென்னையிலும், மற்றும் கோவை, மதுரை நகரங்களுக்குச் சென்றும் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் எழுதப் பட்ட கட்டுரை

ஓர் உரையாடல்:

''உன் பேர் என்ன?''
''சௌகத் அலி.''
''வயது?''
''பதி மூணு.''
''படிக்கறியா?''
''இல்லே.''
''ஏன்?''
''நின்னுட்டேன். இப்ப லாட்டரி சீட்டு விக்கிறேன்.''
''ஏன்—வசதியில்லேயா?''
''பசங்களாம் லாட்டரிச் சீட்டு வித்தாங்க. நானும் விக்கிறேன். வீட்ல படிச்சது போதும்னுட்டாங்க. நான் சம்பாதிக்கறேன் இப்ப.''
''தினம் எத்தனை டிக்கெட் உன்னால விக்க முடியும்?''
''நூறு நூத்தம்பது ரூபா.''
''எவ்வளவு உனக்குக் கிடைக்கும்?''
''பத்து, இருவது.''
''வீட்ல எவ்வளோக் குடுப்ப?''
''நான் ஒண்ணு, ரெண்டு எடுத்துக்கிட்டு, மீதிய அப்பிடியே குடுத்துடுவேன்.''
''சினிமா போவியா?''
''ம்.''
''வாரம் எத்தினி போவ?''
''ஒண்ணு, ரெண்டு.''
'' 'தம்' அடிப்பியா?''
''பழக்கமில்லே'' (வெட்கத்துடன்.)
''உன் கூட இருக்கற பிரண்ட்ஸ் தம் அடிப்பாங்களா?''
''ம்'' (தயக்கத்துடன்).

அடுத்து, இன்னொரு பையன். உரையாடலின் சாரம்: பனிரெண்டு வயசுப் பையன், தினமும் தான் ஏழெட்டு ரூபாய் எடுத்துக் கொண்டு, வீட்டில் ஏழெட்டு ரூபாய் தருவான். சிகரெட் பிடிக்கும் பழக்கம் உண்டு. தினமும் சினிமா போவான். சினிமா தியேட்டருக்குள் போனாலும், அங்கேயும் டிக்கெட் விற்பான்.

இதுபோல் தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கில் சௌகத் அலிகள், ஜேம்ஸ்கள், நடராஜன்கள்.. பள்ளிக்கூடம் போகாமல்—படிக்காமல் — கையில் லாட்டரி டிக்கெட் சகிதம் கடைத் தெருவில், பஸ் ஸ்டாண்டு மற்றும் பொது இடங்களில்.

• • •

இன்னொரு உரையாடல்:

இந்த உரையாடல் லாட்டரி பிரமுகர் ஒருவருடன்:

○ எஸ். எஸ். மணியன்



○ எஸ். கமர்தீன்



○ மருதாசலம்



''ஸ்கூலுக்குப் போக வேண்டிய வயசில பிள்ளைங்க தெருவுல லாட்டரி டிக்கெட் வித்துக்கிட்டு அலையறது தப்பில்லேங்களா?''

''எப்படி சார் தப்பு? ஓட்டல்களில எத்தனை பசங்கள் டேபிள் துடைச்சு, பிளேட் கழுவறாங்க, அது தப்பில்லேயா? கடைகளில் வேலை செய்யறாங்களே! அது தப்பில்லேயா? தெருல

○ கபி, சௌகத் அலி



○ 'சார் என்கிட்ட வாங்குங்க... என் கிட்ட'





○ மயக்கும் விளம்பரங்கள்



○ 'பெரியோர்களே, தாய்மார்களே! அதிர்ஷ்டம் உங்களை அழைக்கிறது!'

லாட்டரி சீட்டு விக்கிறது தான் தப்பா?''

''எல்லாமே தப்புத் தான். ஆனால் மத்த வேலைகளுக்கும், லாட்டரி விக்கறதுக்கும் வித்தியாசமிருக்கே!''

○ கே.ஏ.எஸ். சேகர்



○ கனி



○ நாகராஜன்



''என்ன வித்தியாசம்?''

''கடை, ஓட்டல் —வேற எங்கேயானாலும் — பிளாட் பாரங்களில் அப்பாவுடன் செருப்புத் தைத்தால் கூட— இத்தனை மணிக்கு வந்து. இத்தனை மணி நேரம் வேலை செய்யணும்னு இருக்கு. ஆனா லாட்டரி வியாபாரம் — தெருவுல விக்கறது — அப்படி இல்லையே! மத்த பசங்களுக்கு இருக்கிற 'பொறுப்புணர்ச்சி' லாட்டரி விக்கிற பசங்களுக்கு இருக்காது.''

''நீங்க சொல்றது தப்பு. லாட்டரி விக்கறது ஒண்ணும் கலயமான வேலை இல்லே.''

''இருக்கலாம். ஆனாஉட லளவுல — மத்த பல வேலைகளைப் போலக் கஷ்டமில்லை இதிலே. ஜனங்களுக்கு அதிர்ஷ்டத்தின் மேலிருக்கிற நம்பிக்கை என்கிற பலவீனம்தானே இங்கே மூலதனம்? அதை வைத்துத் தானே காக பண்ணப்படுகிறது? அப்படி வளரும் பையனின் மனவளர்ச்சி எத்தகையதாய் இருக்கும்? அதனால் தான் சொல்கிறேன். இங்கே பசங்கள் கெட்டுப் போக சான்ஸ் அதிகம்.''

''லாட்டரி சீட்டு விக்கிற பையன் கெட்டுப் போவான்னு நீங்க எப்படிச் சொல்லலாம்?''

''இங்கே ஒரு சின்னப் பையனுக்குத் தேவைக்கு அதிகமா — மிக அதிகமாப் பணம் கிடைக்கிறது. இதற்குக் கணக்கு ஒன்னும் கிடையாது. இவன் கொஞ்சம் பணத்தை வீட்ல கொடுத்து விட்டு, மீதியைத் தானே வெச்சிக்கிட்டு, என்ன பண்ணறதுன்னு சரியாத் தெரியாது: ஆனாச் செலவு செய்யத் துடிப்பான்.''

''அதனால?''

''சிகரெட் பிடிப்பதில் ஆரம்பிப்பான். படிப்படியாகக் கெட்ட பழக்கங்கள் வளரும்; பிறகு... (இங்கே நடந்த உரையாடலின்பகுதி சென்சார்) இப்போ என்ன சொல்கிறீர்கள்?''

''நீங்கள் சொல்வது சரி தான். ஆனால் அதை நான் என்ன செய்து நிறுத்த முடியும்?''

எந்த மாதிரி சீட்டு வாங்குகிறார்கள்?

தினந்தோறும் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் ஏமாறுகிறார்கள். பரிசுத் தொகை கோடிரூபாயாய் இருந்தாலும், டிக்கெட்டின் விலை குறைவாய் இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். பத்து ரூபாய் டிக்கெட் ஒன்று வாங்குவதைவிட, ஒரு ரூபாய் டிக்கெட் பத்தோ, இரண்டு ரூபாய் டிக்கெட் ஐந்தோ வாங்கினால் பரிசு விழ வாய்ப்புக்கள் அதிகமென்று நினைக்கிறார்கள். மிகவும் பரபரப்பாய் விற்பனையாவது எந்த மாநிலமானாலும், வாராந்திர குலுக்கல் சீட்டுக்களே! இன்னொரு கவனிக்கப்பட வேண்டிய விஷயம்: ஐந்து ரூபாய், பத்து ரூபாய் பரிசு விழுந்தால், பரிசுத் தொகை வாங்க வருபவர்கள் பணம் வாங்கிக் கொள்வதில்லை. அதிர்ஷ்டமாய்க் கிடைத்த பணம், மேலும் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்று நம்பி, பரிசுச்சீட்டுகளாகவே வாங்கிச் சென்று விடுகிறார்கள். அப்படியின்றி ஒரு சிலர் பணம் கேட்டாலும், ஏஜெண்டுகள் அவர்களை மனம் மாற்றி, டிக்கெட்டுகளை வாங்கச் செய்து விடுகிறார்கள்! இது எவ்வளவு பெரிய அநீதி! இத்தகவல் சொன்னவர் கோவையின் லாட்டரிப் பிரமுகர் கனி.

ராஃபின் ஜாப்புகள்:

சென்னையைச் சேர்ந்த இளைஞர் சந்திரசேகரன்

(அரசு நிறுவனம் ஒன்றில் பணி புரிபவர்) சொல்வது கொஞ்சம் புதுமையானது. ''முன்பெல்லாம் அலுவலகங்களில் பத்திரிகைகளுக்குத் தான் 'ஸ்லிப்பு'கள் இருக்கும். ஆனால் இப்போது பல ஆபீஸ்களிலும் 'ராஃபிள் ஸ்லிப்புகள் முளைத்துள்ளன. ஒவ்வொருவரும், சம்பளம் வாங்கியவுடன் ஒரு குறிப்பிட்ட தொகையை மாதா மாதம் சந்தாவாய்ச் செலுத்த, அந்தப் பணத்துக்கு, பல்வேறு மாநில டிக்கெட்டுகள் வாங்கப்பட்டு, மாநில வாரியாக, டிக்கெட்டின் விவரங்கள் எல்லோருக்கும் தரப்படும். அலுவலக நேரத்தில் நிறைய நேரம் இதுபற்றிய பேச்சுத்தான் — கற்பனை தான். இதனால் மேலதிகாரிகளின் கண்டனத்துக்குள்ளாகிற சம்பவங்களும் அடிக்கடி நடக்கின்றன. ராயல் பூட்டான் லாட்டரியில் 23 பேர் கொண்ட குழுவுக்குப் பரிசு கிடைத்ததற்குப் பிறகு இந்த மேனியா அதிகமாகி விட்டது.

அதிர்ஷ்டம் வண்டியில் வருமா?

மதுரையில் மிகவும் பரபரப்பான லாட்டரிஏஜண்ட் கே. ஏ. எஸ். சேகர். இவருக்குச் சொந்தமான இரண்டு வேன்களில் லாட்டரிச் சீட்டு விற்பனை இரவு பகலாக நடைபெறுகிறது. தேர்தல் காலத்து அரசியல்வாதிகள் போல, தினமும் புறப்பட்டு, கிராமம் கிராமமாகப் போகின்றனர். மதுரை பகுதியில் இவர் வேன்களின் டயர்கள்படாத கிராமமே கிடையாது. கிராமத்து ஜனங்கள் எப்போது இந்த வேன்கள் வரும் என்று காத்திருந்து. வந்ததும், அதிர்ஷ்டதேவதையே தம்மைத் தேடி வந்திருப்பதாய் நினைத்து. விழுந்தடித்துக் கொண்டு போய்ப் பரிசுச் சீட்டுக்களை வாங்குகிறார்கள். இந்தப் பகுதியில் இன்னும் கொஞ்ச நாளில், ''கொடுக்கிற தெய்வம் வேனில் வந்து கொடுக்கும்'' என்று புதுமொழி வழக்கில் வந்தாலும் ஆச்சரியமில்லை.

● ● ●

விற்பனைத் தந்திரம்!

கைகளில் லாட்டரிச்

சில உதிரித் தகவல்கள்

- உலகில் வேறு நாடுகளிலும் லாட்டரி இருந்து வருகிறது. ஆனால் பரிசுத் திட்டமும் நடத்தும் முறையும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இந்தியாவைப் பொறுத்த வரை, ஆங்கிலேய ஆட்சியின் போதே, குறிப்பிட்ட சமூகத் திட்டங்களுக்காகவும், நிர்மாணத் திட்டங்களுக்காகவும்லாட்டரி நடத்தப்பட்டதாய்த் தெரிகிறது. ஆனால் இதுபோன்ற வாராந்திர, மாதாந்திர குலுக்கல் இடையவே கிடையாது.

- சுதந்திர இந்தியாவில் முதன் முதலில் லாட்டரியை நடத்தி ''வழிகாட்டிய'' மாநிலம் ஒரிசா. 1956-ல்.

- உத்திரப்பிரதேச அரசு மட்டும், உ.பி. ஜனதா, கங்கா – காவேரி, தனலட்சுமி, சங்கம், உ. பி. ரேஃபிள் என்று ஐந்து விதமான வாரக் குலுக்கல்களை நடத்தி வருகிறது.

- டெல்லியில் தாம்ஸன் பிரஸ், மற்றும் சிவகாசியில் உள்ள சிலலித்தோ பிரஸ்களில் தான் பல்வேறு லாட்டரிகளின் டிக்கெட்டுகள் அச்சிடப் படுகின்றன.

- ஒரு டிக்கெட் அச்சடிக்க ஆறு பைசா முதல் 10 பைசா வரை செலவாகிறது.

- பூட்டான் பரிசு சீட்டில் பரிசு விழுந்தால் வருமான வரி பிடித்தம் கிடையாதாம்!

- லாட்டரி சீட்டுகளுக்கு லட்சுமிகரமான பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. மகாலட்சுமி, அஷ்டலட்சுமி, பாக்ய லட்சுமி, தனலட்சுமி, குபேர லட்சுமி, சுபலட்சுமி, ராஜலட்சுமி (இது தவிர வேறு ஏதாவது லட்சுமியை உங்களுக்கு தெரிந்தாலும், உரக்கச் சொல்லி விடாதீர்கள். அந்தப் பெயரிலும் லாட்டரி ஆரம்பித்து விடுவார்கள்.)

- லாட்டரி சீட்டுகளில் அபார ஆர்வமிருந்தும் பல பரிசுகள் கோரப்படாமலேயே தூங்குகின்றன. கேரளாவின் 169 குலுக்கல்களில் கோரப்படாத பரிசுத் தொகையாய்ச் சேர்ந்துள்ளது ரூ. 1.62 கோடி.

- தமிழகமும் கேரளமும் மட்டுமே விற்பனையாகாதடிக்கெட்டுகளைப் பரிசுக் குலுக்கலுக்குட் படுத்துவதில்லை.

- லாட்டரி முடிவுகளை மட்டுமே தாங்கிவரும் பத்திரிகை ஒன்று வெளியாகிறது. சனிதோறும் வெளிவரும் இதுசுமார் 20,000 பிரதிகள் விற்பனையாகிறது.

சீட்டுக்களை வைத்துக் கொண்டு திரிகிற சிறுவர்கள், விற்பனைக்காக ஒரு தந்திரத்தைக் கையாளுகிறார்கள். அது என்ன? உங்களுக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டு, டிக்கெட் வாங்கிக் கொள்ளும்படி வற்புறுத்துவார்கள். நீங்கள் வாங்கிக் கொண்டால் சரி! இல்லையெனில்? திரும்பிப் போக அடியெடுத்து வைத்துக் கொண்டே, மிகத் தந்திரமாக — ரொம்பக் கேஷுவலாக, ஒரே ஒரு சீட்டை வேண்டுமென்றே, கையிலிருந்து நம் பக்கமாய் நழுவவிட்டு, ஏதோ அதிர்ஷ்டம் நாம் விரும்பா விட்டால் கூட நம்மைத் தேடி வருவது போல ஒரு பிரமையை, ஏற்படுத்திவிட்டு, மறுபடி விற்கிற முயற்சியில் ஈடுபடுவார்கள். முதல் தடவை வாங்க மறுத்தவர்களில் பலர், நப்பாசையால் இந்தத் தடவை வாங்கி விடுவதுண்டு.

கோவையில் ஒருவர்:

கோவையில் நாம் சந்தித்த இளைஞர் நாகராஜன் மில் ஒன்றில் பணிபுரிபவர். நல்ல சம்பளம் வாங்குபவர். இவர் வருத்தத்துடன் சொன்ன விஷயம்: ''ஜனங்களுக்கு லாட்டரி மோகம் ரொம்ப முற்றிப் போய் விட்டது. எங்கள் மில்லில் வேலை செய்கிற தொழிலாளிகளிடம் இதை நான் கண்கூடாகக் காண்கிறேன். பலர் வருமானத்தில் பாதிக்கு மேல் லாட்டரிச் சீட்டுக்குச் செலவழிக்கிறார்கள். ஆனால் ரொம்ப ரொம்ப சிலருக்குத் தான் பரிசு கிடைக்கிறது. அதுவும் சிறிய தொகைகள்தான். அதிலே கூட்டாளிகளுக்குப் பங்கு வேறு. சோம்பேறித்தனத்தை வளர்க்கிற லாட்டரி, ஒழிந்தால் தான் நம் நாடு உருப்படும்.

சென்னையில் ஒருவர்:

''நான் மாதாமாதம் ஐந்து ரூபாய்க்கு லாட்டரிச் சீட்டு வாங்குகிறேன். எனக்கு அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை உண்டு. ஆனால் அதற்காக மூடத்தனமாக நூற்றுக் கணக்கில் செலவழிக்க மாட்டேன். அதேசமயம் அதிர்ஷ்டமிருந்தால் பரிசு விழட்டுமே! எவ்வளவோ செலவு செய்கிறோம். அதில் இப்படி 5 ரூபாய் போனால் என்ன? என்கிறார் சென்னையைச் சேர்ந்த சந்துரு. கிட்டத்தட்ட 90 சதவீத நடுத்தரக் . குடும்பத்தினருக்கு இந்த மாதிரியான எண்ணங்கள் இருக்கின்றன.

லாட்டரியின் பிளஸ் பாயிண்டுகள் என்ன?

- விதவைகள், உடல் ஊனமுற்றவர்கள், முதியவர்கள் என்று பலதரப்பட்டவர்களும் இந்தத் தொழிலில் இருக்கிறார்கள்.
- மூன்று லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தருகிறது. அரசாங்கம் எந்த ஜென்மத்தில் இத்தனை பேர்களுக்கு வேலை தரும்?
- சிறுவர்கள் இதில் சம்பாதிக்கும் பணத்தில் படிப்பிற்கும் செலவு செய்து கொள்கிறார்கள்.
- அரசாங்கத்துக்குப் பல நல்ல காரியங்களுக்குப் பணம் கிடைக்கிறது.

மேற்கண்ட இந்த நல்ல ப்ளஸ் பாயிண்டுகள் இருப்பதால் லாட்டரிசீட்டு வரவேற்கத் தக்கதா? நன்றாக யோசித்துப் பார்த்தால், ''அல்ல' என்ற பதில் வரும். எத்தனை கோடி ஏழை எளியோரிடமிருந்து வஞ்சகமாகப் பணத்தைப் பெற்று, கிட்டத்தட்ட ஒரு நூறு பேர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது! 'முனுசாமியிடம் கொள்ளையடித்து முனியாண்டியிடம் கொடு' என்ற கதைதான். சிறிய பரிசுகளை விட்டுத் தள்ளுங்கள். ஒரு கோடி, இரண்டு கோடி என்று கொடுக்கப்படும் பரிசுத்தொகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு மனிதனிடம் இப்படி திடீரென்று கோடிக் கணக்கில் சென்று கொட்டுவது சோஷலிஸமா? அரசாங்கம் லாட்டரிச் சீட்டு விற்ற வருமானத்தில் 'இந்த நல்ல காரியங்கள் செய்தோம், அந்த நல்ல காரியங்கள் செய்தோம்' என்று எப்போதாவது பட்டியலிட்டுத் தந்திருக்கிறதா? ஒட்டுமொத்தமாய் கஜானாவில்தானே சேருகிறது? இதிலிருந்து அரசு எத்தனை வீண் செலவுகளைச் செய்கிறது! இப்போதெல்லாம் தனிப்பட்ட நிறுவனங்கள் (உ—ம் விமான விளையாட்டு மன்றம், செஞ்சிலுவை சங்கம்) கூட லாட்டரிச் சீட்டுகள் நடத்த ஆரம்பித்துள்ளன. அரசு அனுமதித்தால் தெருவுக்கு ஒருவர் லாட்டரிச் சீட்டு நடத்தும் நிலை வந்தாலும் வரும். இந்த கஷ்டகாலத்திலும் 100 ரூபாய்க்கும், 50 ரூபாய்க்கும் பரிசுச் சீட்டுக்கள் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். பலர் வீட்டில் மாதாமாதம் செலவுக்குப் பணம் இல்லாமல், கண்டபடி கடன் வாங்கும் நிலைக்கும், இருக்கும் பாத்திரங்கள், புடவைகளைக் கூட மார்வாடிக் கடைகளில் அடகு வைக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மது, மனிதனைக் கடைசி காக இருக்கும் வரை மயக்கித்தள்ளி விடுவதைப் போல, இந்த லாட்டரிச் சீட்டுக்களும் அதிர்ஷ்டம் என்னும் போதையைத் தருவதாக, இன்று பெரும்பாலான மத்தியதரக் குடும்பங்களில் விளையாடிக் கொண்டிருக்கிறது.


லாட்டரியில் மோசடி:

பல வடகிழக்கு மாகாணங்கள் லாட்டரிச் சீட்டு நடத்துவதைப் பல தனிப்பட்ட நபர்களுக்கு ஒப்பந்த முறையில் கொடுத்திருக்கின்றன. இப்படி ஒப்பந்தம் பெற்றவர்கள் ஒவ்வொரு

குலுக்கலுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்குக் கொடுத்து விட வேண்டும். மற்ற எல்லா செலவுகளையும் ஒப்பந்தம் பெற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத் தொகை, அச்சடிக்கும் செலவு, விளம்பரம், ஏஜெண்டுகள் கமிஷன் தொகை, என்று பலவகையான செலவுகளை ஒப்பந்தம் பெற்றவர்கள் செய்ய வேண்டியிருப்பதால் அரசு அனுமதிக்கும் எண்ணிக்கைக்கும் அதிகமாக (கள்ள) பரிசுச் சீட்டுக்களை அச்சடித்து விடுகிறார்கள் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இது உண்மைதானா? ஜன சேவா(!)என்ற லாட்டரியை நடத்தி வரும் மதுரையைச் சேர்ந்த திரு. எஸ். குமார் நிலைக் கேட்ட போது அவர் சொன்னார். "நீங்கள் நினைப்பது தவறு. நாங்கள் செஞ்சிலுவைச் சங்க லாட்டரிச் சீட்டு நடத்துகிறோம். ஒவ்வொரு குலுக்கலுக்கும், செஞ்சிலுவைச் சங்கத்திடமிருந்து உத்தரவு வந்தபின் தான் அச்சகத்தில் இருந்து பரிசுச் சீட்டுக்கள் வெளியாகும். பரிசுச் சீட்டுக்களுக்கு எண்களை நிர்ணயிப்பதும் அரசுதான். மேலும் அச்சகத்திலிருந்து அப்படியே நாட்டின் பல்வேறு பகுதியிலுள்ள விற்பனையாளர்களுக்கு லாட்டரி சீட்டுக்கள் அனுப்பப்படுகின்றன. எனவே ஆர்கனைஸிங் ஏஜெண்டுகள் இதில் இல்லுமல்லு செய்ய வழியில்லை."

கறுப்பை வெளுப்பாக்க உதவும் லாட்டரி:

இது பெரும்பாலும் வடக்கில் தான் நடைபெறுகிறது. ஒருவருக்குப் பரிசு விழுந்ததும் தரகர் ஒருவர் வருவார். எந்தவிதப் பிடிப்பும் இல்லாமல் பணம்தருவதாகச் சொல்லி — ஒரு லட்சம் விழுந்திருந்தால் ஒரு லட்சத்தையும் (கறுப்புப் பணம்) கொடுத்து விட்டு, டிக்கெட்டை வாங்கிக் கொண்டு சென்று விடுவார். அந்தப் பரிசுச் சீட்டை மற்றொரு கறுப்புப்பண



நீதிபதி: "இங்கே உனக்கு நீதி கிடைக்கும்னு நம்பறியா?"

குற்றவாளி: "நியாயமான விலையில் நீங்க அதைக் கொடுக்கிறதா வக்கீல் சொன்னாரே."

—கோவை. அ. கதிர்வேல்.

முதலைக்கு ஒரு லட்சத்து பத்தாயிரத்துக்கு (கறுப்புப் பணம்) விற்பார். பிறகு அந்த நபர், தனக்குப் பரிசு விழுந்ததாகச்சொல்லி அரசிடம் பணத்தைப் பெற்று, வெள்ளையாகச் செலவழிப்பார்.

தமிழர்கள் பணம் வெளி மாநிலங்களில்....

வெளி மாநிலப் பரிசுச் சீட்டுக்கள் தமிழ்நாட்டில் தான் அதிகம் என்பதாகவும், அதனால் தமிழக மக்களின் பணம் வெளி மாநிலங்களுக்குச் சென்று விடுவதாகவும் அடிக்கடி பேசப்படுகிறது. பல லட்சாதிபதிகளை உருவாக்கிய கோவை எஸ்.எஸ். மணியன் சொல்கிறார். "நாட்டின் மொத்த விற்பனையில் 30 சதவீதம் தான் தமிழ்நாட்டில் விற்பனையாகிறது. ஆனால் மொத்தப் பரிசில் பாதிக்கு மேல் தமிழ்நாட்டிற்குத் தான் விழுகிறது. அதாவது, வெளியில்போகும் பணத்திற்கும் அதிகமாகவே நமக்கு வந்து சேர்ந்து விடுகிறது!" இந்த வாதம் தவறானது என்பது சற்று யோசித்தால் புரியும். மற்ற எல்லா மாநிலங்களிலும் சேர்த்து 70 சதம் வருவதால், தமிழகத்தில் மட்டும் 30 சதம் வருவதால் என்றால் அத்தொகை எவ்வளவு அதிகமாய் இருக்கும் என்று கணிக்கலாம். இதில் சிறு பகுதி கூட திரும்பிப் பரிசாக இங்கு வராது என்பது தெளிவு. ஆனால் மக்கள் இது போன்ற வாதங்களில் ஏமாந்து போகிறார்கள்.

கோவை ஏஜெண்ட் மருதாசலம் சொல்கிறார்: "பணம் மற்ற மாநிலங்களுக்குப் போனால் என்ன வாம் தவறு... இந்தியா ஒரு நாடுதானே! நாம் எல்லோரும் இந்தியர்கள். நமக்கென்ன வேறுபாடு? 'நமது பணம் வெளி மாநிலங்களுக்குப் போகிறது. அதனால் வெளி மாநிலப்பரிசுச் சீட்டுக்கள் விற்பனை செய்வதைத் தடை செய்யவேண்டும்' என்பதெல்லாம் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரான வாதங்கள் என்பேன்" (ஆகா! என்னே தேசிய உணர்வு? ஒருமைப்பாட்டு உணர்வை லாட்டரி விஷயத்தில்தானா காண்பிக்க வேண்டும்!)

பரிசுத் தொகை மொத்தமும் கிடைக்குமா?

பரிசுச் சீட்டுக்களில் மிகப் பெரிய பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டாலும், முழுத்தொகையும் பரிசு விழுந்தவர்களுக்குக் கிடைப்பதில்லை. சமீபத்தில் 2.25 கோடி விஜயலட்சுமி லாட்டரியில் முதல் பரிசு பெற்றவருக்குக் கிடைத்த தொகை ஒரு கோடியே முப்பத்து மூன்று லட்சங்கள் தான். வருமான வரி, பாங்க் கமிஷன், மற்றும் சில செலவுகள் போக இவ்வளவுதான் கிடைத்தது. ஆனால் வெளியில் பேசப்படுவதோ "அவருக்கென்ன இரண்டேகால் கோடி ரூபாய் கிடைத்துள்ளது" என்பதுதான். அதேபோல் தமிழக அரசின் ஒருலட்சம் பரிசு விழுந்தால் கிடைப்பது 63,000 தான்.

சென்னை நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த டி. கே. ஜனனி என்பவர் 'கல்கி'க்கு எழுதிய கடிதம்:

"லாட்டரி பரிசு அறிவிப்பதில் கூட அரசு மக்களை ஏமாற்றுகிறது. முதல்பரிசு ஆறு லட்சம் என்று விளம்

பாரம் செய்கிறது. ஆனால் ஆறு வரிசைகளுக்கும் சேர்த்துத்தான் தலா ஒரு லட்சம் என்று கணக்கில் படும்படியாகக் குறிப்பிடுவது கிடையாது. மேலும் இந்த அக்கிரமங்களில் கடவுளையும் இணைத்து பல 'லட்சுமிகளின்' பெயரைப் பயன்படுத்துகிறார்கள். இப்படிச் செய்ய வேண்டாம் என்று இதுவரை ஒரு தமிழ் மதத் தலைவரோ மடாதிபதியோ கூடக் கூறவில்லையே?''

தடை செய்ய முடியுமா?

''முடியாது'' என்கிறார் தமிழக அமைச்சர் நெடுஞ்செழியன். ''தேவையானால் நம் மாநில அரசின் லாட்டரியை நாம் நிறுத்திக் கொள்ளலாம். (செய்வாரோ?) லாட்டரி மூலம் எல்லா மாநிலங்களுக்கும் செல்லும் பணத்தில், ஒரு பகுதியையாவது திரும்பப் பெற வேண்டும் என்ற கருத்தில், வரியாகப் பிடிக்கப் படுவதில் மாநிலங்களுக்கும் பங்கு தர வேண்டும் என்று கேட்கிறோம்.''

தமிழக லாட்டரிச் சீட்டின் பரிதாப நிலை...

லாட்டரி விற்பனையாளர்களால் வேண்டப்படாத விருந்தாளியாக ஏற்றுக் கொள்ளப்படுவது தமிழக அரசின் லாட்டரிச் சீட்டுக்கள்தாம்! 'கல்கி'யின் சிங்காநல்லூர் (கோவை) ஏஜெண்ட் சுப்பிரமணியம் சொல்கிறார்: ''அரசின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் கவர்ச்சியாய் இருந்தாலும் லாட்டரிச் சீட்டுக்களைப் பொறுத்தவரை அவைகளுக்குக் கவர்ச்சி கிடையாது. எத்தனையோ மைனஸ் பாயிண்டுகள். மற்ற மாநிலங்களில் பரிசு பட்டுவாடா செய்வதில் உள்ள வேகம் தமிழக அரசிடம் இல்லை. பல்வேறு விதமான பரிசுத் திட்டங்கள் மற்ற மாநிலங்களில் உள்ளன. புதிதாக இருபது சதம் வரி போடுவது ஊழலுக்குத்தான் வழி வகுக்கும்...''

தமிழக அரசின் சமீபத்திய குலுக்கல் ஒன்றில் 20 லட்சம் சீட்டுக்களில் இரண்டரை லட்சம் சீட்டுக்கள் தான் விற்றன. இப்போது வரி வேறு போட்டு இருப்பதால், ஏஜெண்டுகள் தமிழக அரசிடம் மிகவும் கோபமாக இருக்கிறார்கள். அடுத்து வரும் குலுக்கல்களுக்குத் தமிழக அரசின் சீட்டை விற்கக் கூடாது என்று முடிவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதோ ஒரு ருசிகரமான கடிதம்: சென்னையில் உள்ள 'கல்கி' வாசகர் பூபால்சிங் எழுதுகிறார்:

''சமீபத்தில் சென்னை ராஜாஜி ஹாலில் நடந்த பரிசுச் சீட்டுக் குலுக்கலுக்கு சென்றிருந்தேன். (ராஜாஜி பெயரைத் தாங்கிய மண்டபம் தவிர இவர்களுக்கு வேறு இடம் அகப்படவில்லையா?) NW வரிசையில் 10,000 ரூபாய் பரிசுக்கான சீட்டைத் தேர்ந்தெடுக்கக் குலுக்கல் நடந்த போது மூன்று முறை விற்பனையாகாத சீட்டுக்களுக்குப் பரிசு விழுந்தது. இதே போலத்தான் NZ வரிசையிலும்.

விற்பனையாகாத பரிசுச் சீட்டுகளுக்குப் பரிசு விழுந்தால் அது அரசாங்கத்துக்கு என்று சட்டம் இருந்தால் முக்கால் பகுதி பரிசுப் பணம் அரசுக்குப் போய் விடும் என்று தோன்றியது.''

அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய போது ''விற்பனையாகாத சீட்டுக்களைக் குலுக்கலுக்கு முதல் நாளே எரித்து விடுவார்கள்'' என்பது தெரிய வந்தது! ஏன் இந்த முரண்பாடு?


தமிழக அரசின் விற்பனை வரி லாட்டரி வியாபாரத்துக்குச் சாவு மணியா?

20 சதவீதம் லாட்டரிச் சீட்டுகளுக்குத் தமிழ்நாட்டில் வரி போடப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து லாட்டரி விற்பனையாளர்கள் கோர்ட்டில் வழக்குப் போட்டுள்ளனர். தற்காலிகத் தடை மறுக்கப்பட்டு விட்டது.


தமிழக அரசின் இந்த வரி விதிப்பைத் தொடர்ந்து பல முக்கிய லாட்டரி விற்பனையாளர்கள் தங்கள் வியாபார முகாமை அண்டை மாநிலங்களுக்கு மாற்றிக் கொண்டு விட்டனர். இப்போது பாண்டிச்சேரியிலும் பாலக்காட்டிலும், பெங்களூரிலும் லாட்டரி சீட்டு விற்பனை மும்முரமாய் நடைபெறுகிறது. இனி ஒரு ரூபாய் லாட்டரிச் சீட்டுக்கள் இன்னும் இருபது பைசா சேர்த்து விற்கப்பட வேண்டும். இந்த மாதிரியான நிலை, விற்பனையை குறைத்து விடும் என்கிறார்கள் விற்பனையாளர்கள்.

''விலை உயர்வால் முதலில் மக்கள் தயங்குவார்கள். பிறகு விளம்பரத்தில் மயங்குவார்கள். தானாகவே வியாபாரம் சூடுபிடிக்கும். மக்களை லாட்டரிச் சீட்டு மோகத்தில் இருந்து மீட்க முடியாது. உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்ற மனநிலை இந்த லாட்டரிச் சீட்டுக்களால் மாறி வருகிறது. இதை அறவே ஒழித்துக் கட்டுவது தான் ஒரே வழி!'' என்கிறார் பெயர் சொல்ல விரும்பாத ஒரு தொழிலதிபர். தேர்தல் நேரம் நெருங்க, நெருங்க, விற்பனை வரி உத்தரவை ரத்து செய்யும் ஒரு நிலை அரசுக்கு வரலாம் என்கிறார் கோவையைச் சேர்ந்த பிரபல ஏஜெண்ட். 'ஏன்?' என்று கேட்டதற்கு அவர் சொன்னார்: ''தேர்தல் செலவுக்கு ஆளும் கட்சிக்குப் பணம் வேண்டாமா! நுழைவு வரியை ரத்து செய்ததற்குக் கப்பம் பெற்றுக் கொண்டார்கள். இப்போது இந்த விற்பனை வரியை ரத்து செய்வதற்கும் ஒரு பேரம் நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு கோடி கேட்கிறார்களாம்'' என்றார்!

மேலட்டை வண்ணப் படம்: யோகா
புகைப்படங்கள்: லக்கி ஸ்டுடியோ, கோவை; மஹே


நான்
சொல்றபடி
கேக்கல்லேன்னு
இப்படித் தான்
படுத்துவேன்!


பொதுமக்கள் நலனுன்னு
மண்ணுன்னு!.. மொதல்லே
தமிழக இ. காங்கிரசை
சீர்திருத்தம் பண்ணிட்டுத் தான்
மறுவேலை! உடமாட்டேன்!...
ஜாக்கிரதை!



கல்கி



1984 மார்ச் 11
ருத்ரோத்காரி மாசி 28
மலர் : 42 இதழ் : 32



தேர்தல் பட்ஜெட்

“நாம் எல்லோரும் மிக முக்கியமானதாகக் கருதுகிற ஒரு எதிர்கால நிகழ்ச்சியை நான் மறக்கவில்லை என்றே கருதுகிறேன்” என்று பட்ஜெட் சொற்பொழிவின் இடையில் கூறியதன் மூலம் தாம் தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது ஒரு “தேர்தல் பட்ஜெட்” என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தியிருக்கிறார் பிரணப் முகர்ஜி.

பல நேர்முக மறைமுக வரிகளைக் குறைத்ததன் மூலம் மக்களுக்கு உற்சாகம் ஊட்ட முயன்றிருக்கிறார். சேமிப்பைப் பெருக்கவும் திட்டம் அறிவித்துள்ளார். இவை எல்லாம் வரவேற்கப்பட வேண்டியவையே. ஆனால் சோஷலிசக் கொள்கை அடிப்படையில் அரசியல் பட்ஜெட் தயாரிப்பதிலிருந்து பொருளாதார ரீதியில் பட்ஜெட் தயாரிக்கப் பிள்ளையார் சுழி போட்டதோடு சரி. பொருளாதார நோக்கு முழுமனத்துடன் செயல்பட்டிருப்பதாகக் கருதுவதற்கில்லை. காண்பிக்கப்பட்டுள்ள சலுகைகள் யானைப்பசிக்குச் சோளப் பொரியாக இருப்பதால் தேசப் பொருளாதாரத்தில் விசேஷமான அபிவிருத்தி ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

தொழில் வர்த்தக நிறுவனங்களை அபரிமித வரி விதித்துக் கொடுமைப்படுத்துவது தொடரும். விளம்பரச் செலவில் 20 சதத்துக்கு வரி விதிப்பு நீடிக்கும். பல்வேறு இனங்களில் இறக்குமதி வரி அதிகரித்துள்ளதானது தொழில்களை நவீனப்படுத்தும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும். வெள்ளைக் காகிதத்தின் மீது வரிகளைக் குறைத்துள்ள போது பத்திரிகைக் காகிதத்தின் மீதான இறக்குமதி வரியை நீக்காதது பத்திரிகைச் சுதந்திரத்தில் இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வரலாறு காணாத வகையில் பாதுகாப்புச் செலவினம் 7000 கோடிக்கு உயர்ந்துள்ளது. உலக அமைதிக்கு அறைகூவல் விடுத்து, சமாதானத்துக்கான நோபெல் பரிசையும் பெற முயற்சி செய்யும் நாம் அண்டை நாடுகளுடன் நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளவோ பாதுகாப்புச் செலவினத்தைக் குறைத்துக் கொள்ளவோ வழி தெரியாமல் திணறுகிறோம்

498 கோடிக்குப் புதிய நேர்முக, மறைமுக வரிகள் விதித்திருக்கிறார் என்பதை மறந்துவிட்டு 225 கோடிக்கு வரிகளைக் குறைத்திருக்கிறார் என்பதற்காக எல்லோரும் முகர்ஜியைப் பாராட்டுகிறார்கள். தோள் தூக்காத குறைதான். பற்றுக்குறையான 1762 கோடிக்கு நோட்டு அச்சடித்துப் புழங்கவிட, பணவீக்கம் இன்னும் அதிகரித்து விலைவாசியும் மேலும் உயரும் போது இன்றைய குதூகலம் இருந்த இடம் தெரியாமல் போகும்.

பல்வேறு அரசுத்துறை நிறுவனங்களில் முதலீடாகியிருக்கும் தொகை 80,000 கோடி. இதற்குக் குறைந்த பட்சம் பத்து சதம் லாபம் வைத்தால் கூட அரசுக்கு 8000 கோடி ஆண்டொன்றுக்குக் கிடைக்கும். அந்த அளவுக்கு வரிகளைக் குறைத்துத் தொழிலும், பொருளாதாரமும் துள்ளல், துடிப்புடன் மேம்படச் செய்யலாம். ஆனால் நஷ்டமே காண்கின்றன. ‘இதனால் மக்களுக்குத்தான் கஷ்டம்; அவை லாபம் காண வேண்டும்’ என்று உயர் மட்டத்தில் இன்று உணரப்படுவதே ஓர் ஆரோக்கியமான மாறுதல். உள்நாட்டில் பெட்ரோலியம் உற்பத்தி அதிகரித்ததும் நிதி அமைச்சருக்கு வசதி செய்திருக்கிறது. அந்நியச் செலாவணி கணிசமாக மிச்சமாக ஐ. எம். எஃப். கடனின் ஒரு தவணையை வேண்டாம் என்று மறுத்து விடவும் முடிந்திருக்கிறது.

சற்றே இறங்கி வந்திருக்கும் வேதாளம், தேர்தல் முடிந்ததும் அடுத்த பட்ஜெட்டில் மறுபடி முருங்கை மரத்தின் உச்சாணிக்கு ஏறாமலிருந்தால் சரி.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 19

அவசரத் தூதன்

நிறைவேறாத காதலை நினைத்து ஏங்குவதற்குக் கடம்பமாதேவிக்கும் குலாந்தகனுக்கும் நேரம் ஏது? அவர்களுக்கு நிறையவே வேலைகள் இருந்தன. மன்னர் அனுப்பிய ரகசிய உத்தரவைப் பெற்றுக்கொண்ட பல்வேறு கடகங்களின் பிரம்மாதிராஜர்கள் தத்தமது படை வீடுகளில் இருந்த மிகச் சிறந்த வீரர்களுள் போர்க்கலை தவிர சிற்ப சித்திரக் கலைகளிலும் இசை, கவிதை, நடனம், நாடகம் போன்றவற்றிலும் ஆர்வம் காட்டிய சிலரைப் பொறுக்கி எடுத்து அவசரமாகத் தஞ்சைக்கு அனுப்பி வைத்தனர். அப்படி வந்து சேர்ந்த சுமார் ஐந்நூறு பேர்களின் போர்த்திறனைப் பரீட்சித்துப் பார்த்தான் குலாந்தகன். ஐந்தில் ஒரு பாகத்தினரை உபயோகமில்லை என்று ஒதுக்கித் திருப்பி அனுப்பி விட்டான். மற்றவர்களைச் சிற்சில அம்சங்களில் திருத்தி அவர்கள் ஆற்றலைப் பட்டை தீட்டினான். அவர்களிலும் கூர்மதி படைத்த நால்வரைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவரும் நூறு பேருக்குத் தலைமை தாங்கச் சிறப்புப் பயிற்சி அளித்தான். ஒரு பெரும் படையின் அங்கமாக இருந்து செயல்படுவது என்பது வேறு; தனித்து நின்றோ அல்லது சிறிய அணியாகவோ விளங்கி எதிரியை வீழ்த்த முடியாவிட்டாலும் தாக்கி விட்டுத் தப்புவதும் இடையூறு களை விளைவிப்பதும் வேறு. இதனை அனைவரும் நன்கு உணருமாறு பயிற்சிகள் அமைந்தன. இதே நேரத்தில் கடம்பமாதேவி, அவர்களின் பல்வேறு கலை ஆர்வங்களையும் கணித்துக் குறுகிய காலத்தில் இயன்ற அளவில் அவரவரும் தத்தமது கலைத்திறனில் மேலும் மிளிரச் செய்தாள். பத்தே நாட்கள்தான். வீரர்க்குரிய இயல்பான குணங்களை உள்ளடக்கிக் கொண்டு முழுக்க முழுக்கக் கலைஞர்களாகவே நடிப்பது எப்படி என்று கற்றுத் தந்தாள். அதற்கேற்ப அவர்களுடைய நடை, உடை பாவனைகளை மாற்றி அமைத்தாள்.

''கல்லுளியும் கத்தியலும் ஏடும், எழுத்தாணியும், யாழும், தாளமும் ஏந்திப் பழகிய நாங்கள் வாள் பிடிக்கும் வீரர்கள் என்பதையே மறந்து விடப் போகிறோம்! அத்தனை சிறப்பாக இருக்கிறது நீங்கள் பாடம் போதிக்கும் விதம்'' என்றான் அவ்வீரர் தலைவருள் ஒருவன்.

''அதுதான் கூடாது'' என்று எச்சரித்தாள் கடம்பமாதேவி. ''ஒவ்வொரு கணமும் 'நான் மாவீரன், சோணாட்டைச் சேர்ந்தவன். அறுநூறு ஆண்டுகளாக என் தாய் நாடு அடிமைப்பட்டிருந்ததற்குப் பல்லவரைப் பழி வாங்கப் போகிறேன்' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொள்ளுங்கள். சரியான சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்து நமது திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். நினைவில் வையுங்கள்.''

''அப்படியே ஆகட்டும். உங்களுக்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம்'' என்று அவளுடைய கம்பீர எழிலால் கவரப்பட்டு நிலையழிந்து சொன்னான்.

அவனைப் பரிதாபத்துடன் பார்த்தாள் கடம்பமாதேவி. ''எனக்காக அல்ல வீரரே! ஆண்டை ஆதித்தனின் உப்பைத் தின்று வளர்ந்த அடிமை நீங்கள். அவருக்காக எப்பேர்ப்பட்ட ஆபத்தையும் எதிர்கொள்ளத் தயங்க வேண்டாம்.''

''தேவி, அவ்வளவு ஏன்? நீங்கள் கடைக்கண்ணால் இட்ட பணி எதுவானாலும் சிரமேற்கொண்டு செய்யக் காத்திருக்கிறோம் என்றாலே போதாதா?'' என்று சற்றுக்



துணிவு பெற்றவனாக அவளைப் பார்த்துக் கண்களில் மயக்கத்துடன் சொன்னான்.

''வீரரே! எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி கூட விடலாம்; ஆனால் எட்டிப் பறிக்க முயன்றால், யார் கண்டது, தடுமாறி விழுந்து கையோ, காலோ உடையக் கூடும்!''

அவன் தரையை நோக்கினான்.

''நீங்கள் ஏன் தலை குனிகின்றீர் வீரரே! வெட்கப் படவேண்டியவள் நான் தான். என் கடைக்கண்ணின் கூர்மை போலவே என் மதியும் கூர்மையானதாயின் உங்களிடம் வீரத்துடன் நாட்டுப் பற்றையும், கலைத்திறனுடன் ராஜ விசுவாசத்தையும் வளர்க்கும்; கீழ்த்தரமான காம உணர்வுகளை அல்ல.''

அபிமானவல்லி

கி.ராஜேந்திரன்




நிமிர்ந்து நோக்கி, ''தேவி மன்னியுங்கள்'' என்றான். ''அறியாமையால் தங்களைத் தவறாக எடைபோட்டு விட்டேன்.''

''உங்கள் மீதும் முழுத் தவறு இல்லை. சாதாரணமாக அரசியல் தந்திரமும் போர்த் தந்திரமும் பெண்மைக்குரிய பணிகளாகக் கருதப்படுவதில்லை. அதனால் விளைந்த தடுமாற்றம் இது.... போகட்டும். மேலே ஆக வேண்டியதைக் கவனிப்போமோ?'' என்ற கடம்பமாதேவி. நானூறு வீரரும் பகுதி பகுதியாகப் பிரிந்து பத்துப்பத்துப் பேர்களாகப் பல்லவ நாட்டின் எல்லைக்குள் நுழைய வேண்டிய திசைகள், முன்னேற வேண்டிய மார்க்கங்கள் முதலானவற்றை நிர்ணயித்தாள். அவர்கள் எங்கே ஒன்று சேரவேண்டும், எப்போது என்பனவற்றைத் திட்டமிட்டாள். ஆற்றங்கரைகளையும் ஏரிக் கரைகளையும் உடைத்து விட்டு வெள்ளம் பெருகச் செய்வது, பாலங்களைத் தகர்ப்பது, உணவுக் களஞ்சியங்களுக்குத் தீவைப்பது போன்ற காரியங்களை எளிதாகச் சாதிக்கும் வழிகளை அறிவுறுத்தினாள். குதிரைகளைத் திருடுவது எப்படி, அவை புதிய எஜமானர்களிடம் மிரளாமலிருக்க எவ்வாறு கையாளப்பட வேண்டும், ஆயுதக் கிடங்குகளின் பூட்டுக்களைத் திறவுகோலின்றியே எங்ஙனம் திறக்கலாம், அவற்றிலிருந்து ஆயுதங்களை ஓசைப் படுத்தாமல் களவாடும் வழி என்ன, யானைகள் மதம் பிடித்து ஓட வேண்டுமானால் என்ன செய்யலாம் என்பது போன்ற பல அற்பத் தனங்களுக்குப்பாடம் நடத்தினாள். இறுதியாக, ''சந்தேகம் உண்டானால் கேட்கலாம்'' என்ற போது, ''இதெல்லாம் வீரமல்லவே அநீதியாயிற்றே'' என்று ஒருவன் கேட்டான்.

''நல்ல கேள்வி. அச்சமின்றி வெளிப்படையாக' வினவியதற்காகப் பாராட்டுகிறேன்'' என்றாள் கடம்பமாதேவி. ''யுத்தம் என்று வந்து விட்டால் வீரத் திட்பம் மட்டும் போதாது. வினைச் செயல் வகையும் தேவை. படைச் செருக்கு போதாது, படை மாட்சியும் வேண்டும். புரிகிறதா? இதனால்தான் ஒற்றாடலும் ஓர் அறமாக மன்னர்களுக்கு விதிக்கப்பட்டது. பாரதப் போரின் இடையில் அசுவத்தாமன் மாண்டதாக ஏன் கூறப்பட்டது? ஒரு பெரிய லட்சியத்தை அடைவதற்காகச் சில சின்னத் தனங்களைச் செய்யத்தான் வேண்டியிருக்கிறது. இதில் நம்பிக்கை இல்லாதவர்கள் அறுநூறு ஆண்டுக்காலமாக உங்கள் மூதாதையர் பல்லவரிடம் அடிமைப்பட்டிருந்ததை எண்ணிப் பாருங்கள். அப்போதும் தெளிவு பிறக்கவில்லையென்றால் திரும்பிப் போக அனுமதி தருகிறேன்...''

வெளிப்படையாகக் கடம்பமாதேவி இவ்வாறு கூறினாளேயொழிய, மனத்துக்குள் வேறு திட்டம் வைத்திருந்தாள். ''எனக்குப் பிடிக்கவில்லை இந்த வேலை'' என்று யாரேனும் கூறுவார்களானால் போர் முடிந்த பிறகுதான் அவர்களுக்கு விடுதலை! அதுவரை காராகிரகம்தான். காரணம் இந்த ஏமாப்புப் படை பற்றிய ரகசியம் வெளியே பரவக் கூடாதல்லவா! நல்லவேளையாக யாருக்குமே மேற்கொண்டு ஐயப்பாடு ஏதும் தோன்றவில்லை. பயிற்சி முகாமுக்கு அப்பால் செல்ல அவர்களில் யாரும் அனுமதிக்கப்படவுமில்லை.

''ஞாபகமிருக்கட்டும்'' என்றாள் கடம்பமாதேவி. '' 'ஆதித்தனின் படைகள் பல்லவ ராஜ்யத்தில் புகுந்து துரிதமாக முன்னேறுகின்றன; அந்தப் படைகளைச் சந்திக்கப் பல்லவேந்திரரும் காஞ்சி நகரை விட்டுக் கிளம்பித் தெற்கே சென்று விட்டார்'



வளரும் குழந்தைகளுக்குத்




காரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான அதிக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் ஃபாரெக்ஸ்.

1. ஃபாரெக்ஸ் புரதச் சத்து நிரம்பியதாகும் —உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு இது அத்தியாவசியமாகும்.

2. ஃபாரெக்ஸ் வேறெந்த பிராண்டு செய்யப்பட்ட திட உணவைக் காட்டிலும் அதிக இரும்புச் சத்துள்ளதாகும். இது குழந்தைக்குத் தொற்றுநோய் எதிர்ப்புச் சக்தியையும் ஆரோக்கியமான இரத்தத்தையும் அளிக்கிறது.

3. ஃபாரெக்ஸில் கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ் சரியான விகிதத்தில் சேர்ந்திருக்கின்றன ஆரோக்கியமான எலும்புகளையும் திடமான பற்களையும் பெற இவை உதவுகின்றன.

4. தவிர ஃபாரெக்ஸ், குழந்தையின் மென்மையான செரிக்கும் சக்திக்கேற்றவாறு விசேஷமாக முன்கூட்டியே பக்குவம் செய்யப்பட்டதாகும்.




டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

வழங்குவோர் க்ளாக்ஸோ

CASGLF-42 183 TH



என்பது உறுதியாய்த் தெரிந்த பிறகு நீங்கள் உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள். அபராஜிதனுக்குப் பின்புறத்திலிருந்து கொண்டு நீங்கள் இப்போது பயிற்சி பெற்றுள்ள காரியங்களில் இறங்குங்கள். காஞ்சிக்கு அவன் பின்வாங்கிச் சென்று கோட்டைக்குள் பதுங்க எண்ணினால் அது சாத்தியமாகாதபடி செய்து விட வேண்டும். உதவிக்கு மேலும் படைகளையோ உணவுக்கு மேலும் தானியங்களையோ அவன் எங்கிருந்தும் தருவித்துக் கொள்ள முடியாமல் போக வேண்டும். பாலங்களைத் தகர்த்தேனும் ஏரிகளை உடைப்பெடுக்கச் செய்தேனும் உணவுக் களஞ்சியங்களுக்குத் தீவைத்தேனும் உயிரைத் தந்தேனும் இவற்றை நிறைவேற்ற வேண்டும் நீங்கள்! செய்வீர்களா?''

''நிச்சயமாக'' என்று சோணாட்டின்மீதும் மன்னர் மீதும் ஆணையிட்டனர். ''பல்லவேந்திரன் முன்னேறவும் முடியாமல் பின்வாங்கவும் இயலாமல் திணறுவான். பின்னர், மரக்கிளையில் சிக்கிய கலைமான் மீது பாயும் புலி போல அவன் படைகளைப் பின்புறமிருந்து தாக்கிச் சின்னாபின்னப்படுத்துவோம்... ஆனால்...''

''மறுபடியுமா சந்தேகம்?''

''ஐயப்பாடு. இது அறம்தானா என்றல்ல. முயல் குழிக்குள் பதுங்குவது போல் பல்லவேந்திரன் கோட்டையை விட்டு வெளியே வரவே மறுத்தால்...''

''அவன் அப்படி நடந்து கொள்வான் என்று எனக்குத் தோன்றவில்லை. முதலில் கோட்டையை விட்டு வெளியே வந்து பகைவனைச் சந்தித்து வீரம் காட்டிய பிறகு பின் வாங்கிக் கோட்டைக்குள் பதுங்கலாம்; அது போர்த் தந்திரமாகக் கருதப்படும். ஆரம்பத்திலேயே காஞ்சிக் கோட்டைக்குள் பதுங்கி வெளியே வர மறுத்தால் அது கோழைத்தனமாகவல்லவோ ஆகும்!''

இச்சமயத்தில் ஒரு பகுதி வீரருக்குக் குத்துவாள் பிரயோகம், மல்யுத்தம் ஆகியவற்றில் நுணுக்கங்களை அறிவுறுத்தி விட்டுத் திரும்பிய குலாந்தகன் அடுத்தடுத்து நெடுமூச்சுக்கள் பிரிய இடையில் கரங்களைப் பதித்து நின்றான். முத்து முத்தாய்த் தேகமெங்கும் அரும்பி நின்ற வியர்வைத்துளிகளை ஒற்றி எடுத்து அவன் களைப்பு நீக்கக் கட்டி அணைக்க வேண்டும் என்ற ஆவலைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் கடம்பமாதேவி.

''இன்னும் ஓரிரு தினங்களில் பயணம் தொடங்குகிறீர்கள். நானோ அல்லது மறுதினம் மன்னர்பிரான் நேரில் வந்து உங்களை வாழ்த்தி விடை கொடுப்பார். வெற்றியுடன் திரும்பும்போது உங்கள் அனைவருக்கும் பிரத்யேகமாகச் சிறப்புப் பரிசுகளும் விருதுகளும் காத்திருக்கின்றன'' என்ற குலாந்தகன் ''கடைசியாக உங்களிடம் ஒரு வேண்டுகோள்'' என்றான். வீரர்கள் கவனமான எதிர்பார்ப்புடன் அவனை ஏறிட்டனர். ''கோயில்களில் தெய்வத்தைத் தொழுவது போலவே தமிழ், வடமொழி பாடசாலைகளை வணங்குங்கள். பெண்களுக்கு மரியாதை காட்டுவது போலவே ஓலைச் சுவடிகளுக்கு மதிப்பளியுங்கள். பயபக்தியுடன் அவற்றைக் கையாண்டு பத்திரமாகச் சோணாட்டுக்குக் கொணர்ந்து சேர்க்க வேண்டும். குறிப்பாக மூவர் பாடிய தேவாரங்கள் நம்பியாண்டார் நம்பியின் திருமுறைத் தொகுப்புக்குத் தேவை.''

'இதென்ன படையெடுப்பா அல்லது சுவடி வேட்டையா?' என்று தனக்குள் எண்ணிச் சிரித்துக் கொண்டாள் கடம்பமாதேவி. வெளிப்படையாக ஏதும் கூறவில்லை.

மந்திராலோசனை மண்டபத்தில் பல்லவேந்திரர் கவலையை வி அதிகமாக ஏமாற்றம் படர்ந்த முகத்துடன் அமர்ந்

இருந்தார். எதிரே அமைச்சர்கள், சேனாதிபதிகள் முதலானோர் முகங்களில் கவலையுடன் அச்சமும் விரவி இருப்பதைக்காண அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''எதற்கு எல்லோரும் இப்படிக் குடி முழுகிப் போனது போல் காட்சியளிக்கிறீர்கள்? ஆதித்தன் படையெடுத்து வரப் போகிறான் என்ற செய்தியே உங்களை இப்படிக் கலக்கியது என்றால் யுத்தகளத்தில் அவனை எவ்வாறு சந்திக்கப் போகிறீர்கள்?''

''எப்படி எதிர்கொள்வது? எதைக் கொண்டு? எவ்வாறு? என்பதுதான் எங்கள் கவலை மன்னவா. ஆதித்தன் உங்கள் உற்ற நண்பன் என்றும் பல்லவ நாட்டை ஆக்கிரமிக்கும் எண்ணம் அவனுக்கு இம்மியளவும் இல்லை என்றும் கருதி வந்தோம். நமது ஒற்றர் படைத் தலைவரும் இதையே உறுதிப்படுத்தி வந்திருக்கிறார். இதனால் தான் தென் திசையில் பாதுகாப்பை அலட்சியப்படுத்தி அதனால் மிச்சமாகும் செல்வத்தை விவசாய . வளம் பெருக்குவதிலும் கலைகளை வளர்ப்பதிலும் செலவிட்டு வந்திருக்கிறோம்.''

''என்ன சசாங்கரே!'' என்று ஒற்றர் படைத் தலைவரை அழைத்து, ''இதற்கு என்ன மறுமொழி?'' என்று கர்ஜித்தான் அபராஜிதன்.

''பிரபோ!'' என்று நாத்தழுதழுக்க ஆரம்பித்தான் சசாங்கன். ''பொறுப்பு ஏற்க வேண்டியவன் நான்தான். என்னை இப்பதவியிலிருந்து விடுவித்து விட்டால் நல்லது... ஆனால் ஒன்று கூற அனுமதிக்க வேண்டும்...''

''பேசுங்கள்!''

''தஞ்சையில் உங்களது முழு நம்பிக்கைக் குரிய ஒருவரை அரண்மனை வளாகத்திலேயே வேலை பார்க்க அமர்த்தியிருப்பதாகச் சொன்னீர்கள். அவரிடமிருந்து கிடைக்கும் தகவல்களில் தவறே இராது என்பதிலும் திடமாக இருந்தீர்கள்...''

''இப்போதும் நான் அதில் உறுதியாக இருக்கிறேன்'' என்றான் பல்லவேந்திரன். ''சூது நடந்திருக்கிறது... ஆகா! நான் ஆதித்தனைப் பாயும் புலி என்றுதான் எண்ணினேன்! வஞ்சிக்கும் நரி என்பது இப்போது தான் தெரிய வருகிறது... இருக்கட்டும், நான் இன்னமும் நம்பிக்கை இழக்கவில்லை... இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா?''

''பிரபோ?''

''என்னிடம் நன்றிக் கடன் பட்டிருப்பதால் தந்தைக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாமல் ஆதித்தன் தவிப்பதாக நாம் எண்ணி வந்தோம். ஆனால் அப்படி வெளிப்படையாக நடந்து வரும்போதே மறைவாகக் கடந்த பல ஆண்டுகளாகவே போர் ஆயத்தங்களை அவன் செய்து வந்திருக்கிறான். கடைசியாக சமீபத்தில் பழையாறையில் பல்வேறு கடாரங்களைச் சேர்ந்த பிரம்மாதிராஜர்களை அழைத்துப் பல நாட்கள் ஆலோசித்துப் போர்த் திட்டமும் வகுத்திருக்கிறான். அவனுக்கு உதவ சேரமான் தாணுரவி தஞ்சை வந்துள்ளான். ஆனால் மெய்க்காவலர் தவிர படை ஏதும் இரட்டி வராததால் அவன் ஆதித்தனுடன் படையெடுப்பில் கலந்து கொள்வான் என்று தோன்றவில்லை. இச்சமயம் தென் திசையிலிருந்து சோணாட்டுக்கு ஆபத்து ஏதும் நேராமல் காப்பதாக உறுதி மொழி அளித்துச் சொல்வது மட்டுமே அவன் நோக்கமாய் இருக்க வேண்டும்...''

''ஆகா! இத்தனை விவரங்களைத் திரும்பச் சேகரித்து அனுப்பியுள்ள நம் நம்பிக்கைக் குரிய ஒற்றன் மிகுந்த சாமர்த்தியசாலி என்பதில் ஐயமில்லை. அந்த ஒற்றன் ஆதித்தனின் நரித்தனம் காரணமாகத் தொடக்கத்தில் சற்று ஏமாந்து போனதிலும் வியப்பில்லை'' என்றான் தானைத்தலைவன் துருவன்.

''அதற்காக இந்த ஓலையில் வருத்தம் தெரிவிக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல; பழையாறையில் எடுக்கப்பட்ட முடிவுகளை, வகுக்கப்பட்ட போர்த் திட்டங்களை எப்படியேனும் தெரிந்து கொண்டு விரிவாக எழுதிச் சீக்கிரமே நமக்கு அனுப்பி வைப்பதாகவும் கூறப்பட்டுள்ளது!''

''ஆ! அவ்வாறானால் நம் பணி எளிதாகிறது. சோழன் வகுக்கப் போகும் வியூகத்தை முன்கூட்டியே அறிந்தால் அதை முறியடிக்கும் மார்க்கத்தை நாம் ஆலோசித்து உருவாக்கலாம்.''

இச்சமயத்தில், ''பிரபோ! குறுக்கீட்டுக்கு மன்னிக்க வேண்டும். தஞ்சையிலிருந்து மீண்டும் அவசரச் செய்தி'' என்றான் உள்ளே வரத் துணிந்த வாயில்காப்போன்.

''ஆகா! சீக்கிரமே என்று சற்று முன் நான் கூறியபோது அது இவ்வளவு சுப சீக்கிரமாக நடக்கும் என்று எண்ணவேயில்லை'' என்று மலர்ந்த முகத்துடனும், பெருமிதத்துடனும் பேசிய பல்லவேந்திரன், தூதனை அழைத்து வருமாறு சைகை காட்டினான்.

''பிரபோ! இப்போது நமக்குக் கிடைக்கப் போகும் தகவல் மட்டும் பழையாறையில் வகுக்கப்பட்ட போர்த் திட்டமாக இருக்குமானால் தஞ்சை அரண்மனை வளாகத்தில்—புலிக் குகைக்குள்ளேயே புகுந்து அதனுடன் போராடத் துணிந்த நம்முடைய அந்த ஒற்றனுக்குக் கோயில் எடுத்துக் கும்பிடலாம்!'' என்றான் துருவன்.


புழுதியைக் களையாமலும் நெடுமூச்சுக்கள் நீங்காமலும் வந்து சேர்ந்த தூதன் பணிவாக வணங்கி ஓலையை நீட்டினான்.


(தொடரும்)

ஒரு பிரார்த்தனை: ''ஆண்டவா எனக்குப் பொறுமையைக் கொடு. சீக்கிரமாகக் கொடு: அவசரம்.

இ டெய்லி டெலிகிராப்.

—எம். எஸ்.





ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றுதான், அதன் ஒப்பற்ற 3-வழிச் செயலால் வியர்க்குருவை தடுக்கிறது, முறியடிக்கிறது.

OBM-2516/TM

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றில் தான், நிரூபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது—அது, மூன்று தீவிரமான வழிகளில் செயல் படுகிறது.

- **தடுத்தல்**
  இதன் பாக்டீரியோஸ்டாடிக் செயல், பாக்டீரியா கிருமிகள் பெருகுவதை தடுக்கிறது.
- **நிவாரணம்**
  சுகந்த மணமுள்ள ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், வியர்வையை உறிஞ்சுகிறது. இதமளித்து விரைவான நிவாரணம் தருகிறது.
- **செயல்**
  ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒப்பற்ற கெரடோலிடிக் செயல் உள்ளது; அது, பாதிக்கப்பட்ட சருமத்தை விரைவாக மாசு மருவற்றதாக்குகிறது.





குடும்பம் முழுவதற்குமான பாதுகாப்பு

Johnson & Johnson

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்- வேர்க்குருவிலிருந்து உங்களுக்கு சிறந்த பாதுகாப்பு.

9

ரமாமணிக்கு, அன்று முழுக்க அசை போட நல்ல விஷயம் கிடைத்துவிட்டது. அலுவலகத்தில், ஒருவரையும் ஒழுங்காக வேலை செய்ய விடவில்லை அவள்.

ஒவ்வொரு மேஜை முன்னும் வந்து நின்று, காதோடு காதாய் ரகசியம் பேசு கிறாள். அவள் கையில் மஞ்சள் நிறத்தில் நான்கு ஓரத்திலும் குங்குமம் இட்டிய கார்டு...

''இந்த மாதிரி அநியாயம் உண்டா? புருஷன்காரனை, போலீஸ் சல்லடை போட்டுச் சலிக்கிறது. இங்கே – பெண்டாட்டிய மணையில உட்கார்த்தி வச்சு, வளையல் காப்பு நடத்தப் போறாங்க... என்னதான் போலீஸ் ஆபீசர்னாலும் நெஞ்சு இப்படியா, துளி ஈரம் இல்லாமப் பஞ்சாலத் துடைச்சிருக்கணும்... அந்தப் பெண்ணுக்குத்தா னுகட்டும்: மணையில உட்கார மனசு எப்படி வரும்.''

தாரா, இதைக் கேட்டு ஸ்தம்பித்து நிற்கிறாள்.

'ராஜாவின் மனைவிக்கு வளைகாப்பா...'

அன்று ஜீப்பில் பார்த்த முகம், கண்முன் நிழலாடுகிறது...

அழகு முகம். குழந்தைத்தனம் ததும்பும் முகம். அந்தக் கண்களில் தான் எத்தனை சோகம்...

பாவம், இத்தனை துக்கத்தோடு, எப்படி வளையல்களை மாட்டக் கரங்களை நீட்டு வாள்...


''உங்களுக்கு இன்விடேஷன் வந்தி ருக்கா...''

அவள், ரமாமணியைக் கேட்க, அவள் பெருமிதப்பாகத் தலையை அசைக்கிறாள்.

''என் வீட்டுக்காரருக்கு, ராஜாவோட அம்மா தூரத்து உறவு. எப்படியும் தலையைக் காட்டிட்டு வரணும். ரொம்ப தர்மசங்கடமான நிலைமை. போகவும் கஷ்டமாயிருக்கு. இந்த வைபவத்துக்கு முக்கியமான கதாநாயகன் எங்கே சோத்துக்கு அலைஞ்சுட்டிருக்கானோ... அங்கே நமக்கு இலைபோட்டு சாப்பாடு வேண்டி இருக்குமோ... போகாம இருந்தா அதுவும் அவஸ்தை. அந்த மீனாட்சி அம்மா என்ன நினைப்பா.... 'பாருடா, கொலைகாரப் பிள்ளை வீட்டுக் கல்யாணம்'ன்னு எல்லாரும் ஒதுக்கிட்டா ளென்னு வருத்தப்பட மாட்டாளோ....''

ரமாமணி, தோள் பட்டையை நளினமாகக் குலுக்கி விட்டுக் கொள்கிறாள். உண்மையில், இந்தப் பத்திரிகை வந்தது முதல் அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை.. வளைகாப்பு விசாரிக்கும் சாக்கில் போய்விட்டு அந்தக் குடும்பத்தின் தற்போதையச் சூழ்நிலையை அறிய வேண்டும் என்கிற ஆவல்.. தான் அறிந்ததைக் கண் மூக்கு வைத்து– அலுவலகத்து ஊழியர்களிடம் ஒலிபரப்ப வேண்டும் என்கிற ஆவல்...

ஆனால் ராதாவுக்கோ...



கசங்கிய உடையும், புழுதிப் படர்ந்த தேகமுமாய் அன்று ராஜா அவளெதிரில் வந்து நின்ற காட்சியே கண்முன் வந்து நிற்கிறது.

'அவனுக்கு இந்த விஷயத்தை எப்படித் தெரிவிப்பது...'

'ஐயோ, மறுபடியும் அவன் என்னைப் பார்க்க வந்தால் தேவலை...'

'வரமாட்டான். எப்படி வருவான்.... நான்தான் அவனை விரட்டிவிட்டு விட்டேனே...'

'அவனைப் பார்க்க முடியாவிட்டால் போகிறது. அவன் பத்திரமாக இருக்கும் விஷயத்தையாவது அந்தப் பெண்ணிடம் சொல்ல வேண்டாமோ... இதை விடவும் பெரிய பரிசு, அவனுக்கு வேறென்ன இருக்க முடியும்...'

இந்த எண்ணம் உதித்தவுடன் அவள் பரபரத்துப் போகிறாள்.

ஏற்கெனவே – இந்தக் கொலைக்குப்பிறகு, தாராவின் போக்கே மாறிவிட்டது. முன்பிருந்த சுறுசுறுப்பு இல்லை. வேலையில் மந்தமும், ஞாபக மறதியும் அதிகமாகி விட்டது. அடிக்கடி திடுக்கிட்டாற்போல் நிற்பதும், யாராவது நாலைந்து முறை அழைத்தாலும் எங்கோ கவனமாய் இருப்பதும், ரமாமணி அவளின் தோளைத் தொட்டால் விதிர் விதிர்த்துப் போவதுமாய்...

அப்போதைக்குஅவளது இதயம் முழுவதும் வியாபித்திருந்தது ராஜாவின் மனைவிதான்.

அன்பும், பிரியமும் கொண்ட கணவனைப் பிரிந்து, அந்தப் பெண் என்ன பாடுபடுகிறாளோ...

இதே சிந்தனையுடன் வேலைய வந்தவளுக்கு- அடுத்த நாள் மாலையே விஜியைப்பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமென்று எதிர்பார்க்கவேயில்லை.

மைலாப்பூர் மாடவீதியில்...

கபாலீச்வரர் கோவிலின் கிழக்கு கோபுர வாசலில் கார் நின்று கொண்டிருந்தது. உள்ளே விஜி மட்டும். தாராவைப் பொறுத்த வரையில் அவள்தானே உமா...

காருக்குள் உட்கார்ந்திருந்ததால் –அவளின் முழு உருவமும் தெரியவில்லை. தெரிந்திருந்தால் – தாரா கொஞ்சமாவது யோசித்திருப்பாள்...



காரை ஓட்டி வந்த எத்திராஜ் —அங்கிருந்து பத்துப் பதினைந்தடி தூரத்தில் நின்றபடி சிகரெட் பிடித்துக் கொண்டிருக்க மீனாட்சி, அருகிலிருந்த வளையல் கடையில், கடைக்கார அம்மாளுடன் பேசிக் கொண்டிருக்க...

விஜி மட்டும் காரில்.

சாதாரணமாய், இது போன்ற வியாபாரங்களில் தன் மாமியை மற்றவர்கள் ஏமாற்றி விடப் போகிறார்களே என்கிற கவலையில் — மாமியுடன் ஒட்டி ஒட்டி அவனும் நடப்பான்தான்.

இன்று என்னவோ அதிலெல்லாம் மனசு ஒட்டவேயில்லை.

மகள் இல்லாமல் மாமா, மருமகளுக்கு வளைகாப்புக்கு ஏற்பாடு செய்வதில் விஜிக்குக் கொஞ்சம் கூட விருப்பமேயில்லை.

'இது என்ன வீம்பு...'

இருந்தாலும் இந்த மாமாவுக்கு இத்தனை பிடிவாதம் ஆகாது...

இந்தக் கோபத்தில் — காரை விட்டிறங்கக் கூட மனமில்லாமல் காரிலேயே உட்கார்ந்திருக்கிறான் அவன்.


உமாவின் வளைகாப்பைப் பற்றி, விஜி நிறையக் கனவுகளை வளர்த்து வைத்திருந்தான்...

இதே உமாவுக்கு நல்லபடியாக, ராஜாவின் பார்வையில் வளைகாப்பு நடந்திருந்தால்...

லாட்டரி மோகம் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் அலை மோதிக் கொண்டிருக்கும் இந்நாளில் ஒரு பழைய செய்தி.

சுசீந்திரம் வட்ட பள்ளிமடத்தில் ஒரு நூலகம் உள்ளது. 150 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட "திருவிதாங்கூர் அரசாங்க விளம்பரம்" அடங்கிய சுவடி ஒன்று இந்த நூலகத்தில் காணப்படுகிறது. சுசீந்திரம் கோவிலின் ராஜ கோபுரத் திருப்பணிக்காக ரூ. 70,000 செலவு மதிப்பிடப்பட்டு, ரூ. 50,000-க்கு லாட்டரி சீட்டுகள் வெளியிட திருவிதாங்கூர் அரசு அனுமதித்திருந்ததாக சுவடியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது!

—வழுதி திராவிடமணி.



அடடா, அந்த நினைப்பே எத்தனை சுகமாக இருக்கிறது...

உமாவின் தளிர்க் கரத்தில் பச்சையும், சிவப்பும், நீலமுமாக விஜியே வளையல்களைப் பார்த்துப் பார்த்து அடுக்குவானே....

'என் ராஜாவின் வாரிசைச் சுமந்திருக்கிறாயா பெண்ணே... அந்தச் செல்லக்கண்ணனின் சிவந்த உதடுகளை நினைவுறுத்துவதற்காக... இதோ — சிவப்பு வளைகளை அணிவிக்கிறேன்... அவனது வரவால் நம் குடும்பமே பசுமை நிரம்பியதாய்க் குதூகலிக்கிறதே... அந்தச் சந்தோஷத்தை அறிவிப்பதற்காகப் பச்சை வர்ண வளையல்களை அணிவிக்கிறேன். அந்தக் குழந்தையின் பொன்னிறத்தை நான் முன் கூட்டியே என் மனக்கண்ணால் அறிகிறேன்... இதோ பார்... இந்தப் பொன்னிற வளையலைப் போல பிரகாசமான நிறத்துடன் அவன் இருப்பான்... கண்கள் கருநீலமாய்... இதோ இந்த நீல நிற வளையலைப் போல... அவன் புகழ் ஆகாயம் வரை வியாபித்திருக்க வேண்டும்... இதற்கு அறிகுறிதான் இந்த ஊதா வர்ண வளையல்.. மனசில் கள்ளம் கபடில்லாமல் பால் போல வளர்வான் உன் பிள்ளை... இந்த சங்கு வளையலைப் போல... மாமி தன் வைர வளையலைப் போடப் போகிறாளாமே... அவசியம்தான். அவன் நம் குலத்து வைரம் இல்லையா... நாளை இந்த நாட்டின் விலை மதிக்க முடியாத பொக்கிஷம் இல்லையா... இத்தனை சிறப்பு வாய்ந்த — என் ராஜாவின் ராஜாவை வயிற்றில் சுமந்திருக்கும் பெண்ணே.... உனக்கு மற்றவர் கண்ணேறு விழக்கூடாது என்பதற்காகவே இந்தக் கருவளையல்.... இது உனக்கும், உன் பிள்ளைக்கும் காப்பு...'

விஜிக்கு மட்டும் வாயிருந்தால் — இந்த விழாவில் எத்தனை பேசியிருப்பான்... உமாவின் காதோடு... அவள் வயிற்றில் வளரும் சிசுவின் காதோடு...

உமாவின் குழந்தை அவன் குழந்தையில்லையா... அவள் வயிற்றில் பிறந்தால்தானா..

விஜி நீண்ட பெருமூச்சுடன் ஜன்னல் வழியே — தன் மாமியின் பின்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தபொழுது......

அவனது விரலின் மீது — இன்னொரு கை படுகிறது.

'சட்'டென நிமிர்ந்து பார்க்கிறான் அவன்.

'யாரிவன்...'

விஜி, விழிகளில் வினாக் குறி எழும்ப, அந்தப் புதியவனை ஏறிட்டுப் பார்க்கிறான்.

"நமஸ்காரம்..."

—அவன் கைகுவிக்க, விஜியும் பதிலுக்குக் கைகுவிக்கிறான்.

புதியவன், அவனது காதருகில் குனிகிறான்.

"நான் ராஜாவோட வேலை செய்யறேன்..."

"....."

"உங்களுக்கு வளைகாப்புன்னு கேள்விப்பட்டேன். மனசு கிடந்து அடிச்சுண்டது. எப்படியாவது உங்களைச் சந்திக்க. ஆறுதலா நாலு வார்த்தை சொல்லணும்னு.... அதிருஷ்டவசமா இன்னிக்குப் பார்த்துட்டேன்."

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®
ஒன்றில்தான்
அவர்களுக்கு
அன்றுடம் தேவைப்படும்
23 ஊட்டச் சத்துக்கள்
அடங்கியுள்ளன.

வளரும் குழந்தை-
களுக்கென்றே
சிறப்பான சில
தேவைகள்
உள்ளன—வளரும்
வயதிலே உடம்புக்குத்
தேவைப்படும்
மிகச் சிறந்த புரதம்,
22 மூலாதார
ஊட்டச் சத்துக்கள்
—அளிக்கிறது
காம்ப்ளான். மறவாதீர்கள்.
டாக்டர்களின் சிபாரிசு
பெற்ற, திட்டமிட்ட உணவு
காம்ப்ளான்.

GLC-6-2012 TH

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.

"குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு-வழிகாட்டி"
50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக :
தபால் பை நம்பர் 19118, (Comp) G-78, பம்பாய் 400 025.

திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®

குன்று தலையாகிறது!

பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் மார்கோஸ் உருவம் ஒரு குன்றிலே செதுக்கப்பட்டு வருகிறது. குன்று முழுவதுமே மார்கோஸின் தலையாகிறது. இந்தப் படத்தை நியூஸ் வீக்கில் பார்த்துவிட்டு ஒரு மணிலா (பிலிப்பைன்ஸ் தலைநகர்) வாசகர் அப்பத்திரிகைக்கு எழுதியுள்ளார்:

''புகைப்படம் பிரமிப்பை ஏற்படுத்துவது என்னவோ உண்மைதான். ஆனால் ஒரு தேசியத் தலைவருக்கு அத்தேசத்தின் வளமையும் பாதுகாப்பான நிலையுமே சிறந்த ஞாபகச் சின்னம். அப்போது கல்லிலே சிலை செதுக்க அவசியமிராது; நிரந்தரமாக மக்கள் மனங்களில், இதயங்களில் அவர் உருவம் செதுக்கப்பட்டுவிடும்!''



புதியவள், விஜியின் கன்னத்தை இரு கைகளிலும் ஏந்திக் கொள்கிறாள். விழிகளில் சமுத்திரமாய் கண்ணீர்...

''கவலைப்படாதீங்க... வளைகாப்புக்குமணையில சந்தோஷமா உட்கார முடியாவிட்டாலும், மனசு நிம்மதியோட உட்காருங்க.. உங்க புருஷன் உசிருக்கு ஒரு ஆபத்தும் இல்லே. அந்தக் கொலே நடந்ததுக்கு மறுநாள் என்னைப் பார்க்க வந்தார்.... நான்தான் போலீசுக்குப் பயந்து, அவரை விரட்டிட்டேன்... சாப்பாடு கூடப்போடலே. பாவி நான்... ஆனா ஒண்ணு... அவர் பத்திரமா இருக்கார். எப்படியும் நல்லபடியாத் திரும்பி வருவார்... அவரைப் பத்தித் தகவல் கிடைச்சா நான் உங்களுக்கு சொல்றேன்...''

அவள் வேக வேகமாய்ச் சொல்லிக் கொண்டே போக — விஜி, துடிக்கும் உதடுகளை அழுந்தக் கடித்தபடி, அவசரமாய் காரை விட்டு இறங்குகிறாள்...

புதியவள் — தாரா — அகன்ற விழிகளுடன் அவளையே ஏற இறங்கப் பார்க்கிறாள்.

இது என்ன... அடுத்த வாரம் வளைகாப்பு என்றால் — இந்தப் பெண் உருவி விட்டாற் போல நிற்கிறாளே... கொஞ்சமாவது வயிறு இருக்காதோ...

''நீ... நீங்க ...உமாதானே....''

தாரா சந்தேகத்தில் குரல் நடுங்கக்கேட்க...

''பே... பே...''

விஜி, அழுகை முட்ட ஏதோ சொல்ல முயல, தாரா, அவள் பிடியிலிருந்தக் கையை உதறிக் கொண்டு, மிரண்டுபோய் ஓடுகிறாள்.

''பே... பே...''

விஜி, தன்னை மறந்து ஒலி எழுப்ப, அவள் திரும்பிப் பார்க்காமல் விரைய....

விஜியின் கலங்கிய கண்கள் கோவில் கோபுர உச்சியையே வெறிக்கிறது....

'கடவுளே... கடவுளே... எனக்குப் பேச்சைக் கொடுக்க மனசில்லாவிட்டால் போகிறது..! கேட்கும் திறனையாவது அளித்திருக்கக் கூடாதா... நான் உனக்கு என்ன பாவம் செய்தேன்.

சத்தியமாய், அந்தப் பெண் என்ன சொன்னாள் என்றே புரியவில்லை விஜிக்கு.

ஏதோ முக்கியமான விஷயத்தைத்தான் சொல்லிவிட்டுப் போகிறாள்...

முக்கியமான விஷயம் மட்டுமில்லை. அந்தரங்கமானதும் கூட. அதனால் தான் குனிந்து, காதோடு சொல்லியிருக்கிறாள்.

அதுமட்டுமில்லை. என்னை வேறு யாரோ என்று தவறுதலாகக் கணித்திருக்கிறாள்...

கடைசியாக அவள் என்ன கேட்டாள்.

எந்த வார்த்தையும் புரியாவிட்டாலும், தாராவின் உதட்டசைவின் மூலம் 'உமா' என்கிற வார்த்தை மாத்திரம் அவளுக்குப் புரிந்தது...

உமா...

உமாவிடம் இவளுக்கு என்ன செய்தி....

உமா சம்பந்தப்பட்ட ஒரே செய்தி — ராஜாதான்...

ஐயோ — ராஜாவைப் பற்றி இவளுக்கு என்ன தெரியும்...

இவளுக்கும், ராஜாவுக்கும் என்ன சம்பந்தம்...

விஜி — அவள் சென்ற திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க.....

கீழ் கோபுர மண்டபத்து வாசலில்இரண்டு கண்கள் இவர்களையே வெறித்துக் கொண்டிருக்கின்றன.

எத்திராஜ்தான்.

அவனுள்ளும் ஆயிரம் கேள்விகள்.

இதுநாள் வரையில் இந்தப் பெண்ணை— பரந்தாமன் வீட்டில் பார்த்ததேயில்லை.

விஜிக்கு உமாவைத் தவிர நெருங்கிய சிநேகிதி யாருமில்லை என்பதும் அவனுக்குத் தெரியும்.

மாலை இருட்டில் அந்தப் பெண்ணின் முகம் தெளிவாகத் தெரியாவிட்டாலும்— அவளது ஸ்லீவ்லெஸ் ரவிக்கையும், ஒரே சீராக வெட்டி விடப்பட்ட கூந்தலும் மாத்திரம் மனத்தில் ஆழமாகப் பதிகிறது....

அவன் — வளையல் கடைக்குப் பக்கத்தில் எங்கேயோ பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த — மஃப்டியில் இருந்த போலீஸ்காரரை நோக்கி மெள்ள நடக்கிறான்.

(தொடரும்)



சிங்கப்பூர் மாமா

அன்னம்

சிங்கப்பூரிலிருந்து மாமா சிங்காரவேலன் திரும்பி வரப்போகிறார். இருபது வருஷங்களுக்கு முன் ஒரு வயதுப் பெண் குழந்தையுடன் போனவர், லட்சாதிபதியாகத் திரும்பி வருகிறார்.

சிங்காரவேலன் கெட்டிக்காரர். என்றைக்காவது ஒருநாள் தான் தம் தாய்நாட்டிற்குத் திரும்பவேண்டியிருக்கும் என்பதை முன்பே அறிந்து வைத்திருந்தார். அவ்வப்போது நம்பகமான நண்பர்கள் மூலம் பணம் அனுப்பித் தமக்கென ஒரு திரண்ட சொத்தை இந்தியாவில் உருவாக்கி வைத்திருந்தார்.


கட்டிய வேட்டியுடன் — ஒட்டிய மனைவியுடன்—ஒரு வயது நிரம்பாத பச்சைக் குழந்தையுடன் போனவர் — எல்லோரும் பிரமிக்கும் வண்ணம் திரும்புகிறார்.

ஒரே ஒரு மாற்றம். அவர் தொட்டுத் தாலி கட்டிய மனைவி அந்நிய மண்ணில் ஐக்கியமாகி விட்டாள். ஒரு வயதுப்பெண்—வாலைக்குமரியாக — அழகுப் பெட்டகமாகப் பார்ப்பவரைக் கிறங்க வைக்கும் வனப்பு ஓவியமாகத் திரும்ப இருக்கிறாள்.

சிங்காரவேலனுக்கு உறவினர்கள் என்று இரண்டு பேர் மட்டுமே உண்டு. ஒருவன் மாணிக்கம் — அவர் தங்கை மகன். அன்று அவர் ஏழையாக இருந்தபோது உதாசீனம் செய்தவருடைய மகன். ''பெண்டாட்டிக்கும் பிள்ளைக்கும் சம்பாதித்துச் சோறு போட முடியாதவனுக்கெல்லாம், எதுக்குடா கல்யாணம்?'' என்று கேட்ட மைத்துனரின் ஒரே பையன். இப்போது அவர்கள் இல்லை. பையன் மட்டும் சென்னையில் ஏதோ ஒரு வேலையில் இருந்துகொண்டு, தன் வயிற்றைக் கழுவி வந்தான்.

இரண்டாவது அவர் கரம் பிடித்தவளின் அண்ணன் மகன் முத்து. சிங்காரவேலன் தன் குடும்பத்திற்கு அரைநாள் சாப்பாட்டிற்காவது வழி காண முடிந்த அந்தநாளில், முத்துவின் அப்பாவுக்கு அதில் பாதி கூட இயலவில்லை. சொந்த மண்ணை உதறிவிட்டு வெளிநாடு போகத் துணிவும் இல்லை. இங்கேயே தங்கி விட்டார். ஆனால் முத்து சாமர்த்தியசாலி. ஏதோ வியாபாரம், ஏதோ தரகு, ஏதோ கமிஷன் என்று முன்னுக்கு வந்துவிட்டான்.

தான் இந்தியா திரும்புவது பற்றி இரண்டு பேருக்கும் சிங்காரவேலன் கடிதம் போட்டார். இரண்டு பேரிடமிருந்தும் அவருக்குப் பதில் வந்தது. நாகை அருகே, அவர் தம் சொந்த ஊருக்குப் போகுமுன், சென்னையில் தன்னுடன் சில நாட்கள் தங்க வேண்டும் என்று முத்து அழைப்பு விட்டிருந்தான். சிங்காரவேலன் — தன்னுடன் அதிகப் பொருட்களைக் கொண்டு



வந்ததால் — கப்பலில் தான் வந்தார். மாணிக்கம் அவரைச் சென்னைத் துறைமுகத்தில் சந்திப்பதாக எழுதியிருந்தான்.


கப்பல் வந்தது. இருவரும் சிங்காரவேலனை அடையாளம் கண்டுகொண்டார்கள். செயலற்று நின்றார்கள். அவர் பின்னால் ஒயிலாக வந்து நின்ற வனஜாவைப் பார்த்து அவர்கள் பிரமித்துப் போனார்கள். அழகாக இருப்பாள் என்று அவர்கள் ஊகித்ததுதான். ஆனால் இத்தனை அழகு— அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

சிங்காரவேலன் அவர்கள் இருவரையும் வனஜாவிற்கு அறிமுகம் செய்து வைத்தார். 'பளிச்' என்று மின்னும் காலணிகளும், உடலை ஒட்டிய பாண்ட் சட்டையுடன், கறுப்புக் கண்ணாடியும் ஒருதாவுமாய், தங்கப் பல் தெரியச் சிரித்துக் கொண்டு இருந்த முத்துவுக்கு வணக்கம் சொன்னாள் வனஜா. எட்டு முழ மல்வேட்டியும், ஒரு டெரி காட்டன் சட்டையும் அணிந்து கொண்டு ஒரு பக்கம் ஒதுங்கி நின்ற மாணிக்கத்தின் விழிகளை அவள் சந்தித்த போது, அவள் கன்னங்களில் நாணத்தின் செம்மை படர்ந்தது.

''வாருங்கள், மாமா!'' என முத்து அவர்களை எதிர்கொண்டு அழைத்தான்.

அவனுக்குத் துறைமுகத்தில் செல்வாக்கு உண்டு. அரை மணிக்குள் சுங்கப்பரிசோதனையை முடித்துக் கொண்டு, முத்துவால் ஏற்பாடு செய்யப்பட்ட காரில் ஏறிக்கொண்டனர். அதில் மாணிக்கத்திற்கு மட்டும் இடம் இல்லை.

''அப்புறம் — சாவகாசமாக வா!.... மாணிக்கம்!'' என்று அழைத்தார் சிங்காரவேலன்.



''சரி!'' என்று தலை அசைத்தான் மாணிக்கம்.

சிங்காரவேலனைத் தன் வீட்டில் சேர்த்த முத்து, தன் தொழிலைக் கவனிக்கப் புறப்பட்டான். இத்தனை நாட்களாக அடிமனத்தில் இருந்த திருமண ஆசை, இன்று விசுவரூபம் எடுத்து, அவனை அலைக்கழித்தது. எப்படியாவது வனஜாவைத் திருமணம் செய்து கொண்டு விட வேண்டியது. பின்னால் ஆயுள்காலத்திற்குக் கவலை இல்லை.

தன் வேலையை முடித்துக் கொண்டு முத்து வீடு திரும்பும்போது மணி ஏழு.

''என்ன மாமா!... இப்படி எங்கேயாவது வெளியே போய் வரலாமா?'' என அழைத்தான் முத்து.

''நான் வரவில்லை அப்பா!'' என்றார் சிங்காரவேலன்.

''வனஜா?''

''நான்கு மணிக்கு மாணிக்கம் வந்தான். அவனுடன் வெளியே போயிருக்கிறாள்!'' என்றார்.

''மாணிக்கம்?... யாருடன் மோதுகிறான் அவன்?'' என்று மனத்துக்குள் சீறினான் முத்து. அவன் நினைத்தால் மாணிக்கத்தை— மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் நசுக்கிவிட முடியும்!

''இப்படி உட்கார் முத்து!'' என்றார் சிங்காரவேலன்.

முத்து உட்கார்ந்தான்.

''நாகப்பட்டினம் போனதும் முதல் காரியம் என்ன தெரியுமா?'' என ஆரம்பித்தார் சிங்காரவேலன்.

''ஏதாவது பிஸினஸ் ஆரம்பிக்க வேண்டும்... அது விஷயமாகத் தான்...''

''பிஸினஸ் எல்லாம் அப்புறம்.... முதலில் வனஜாவிற்கு ஒரு கல்யாணம் செய்ய வேண்டும்... நல்ல பையனாக...''

''அதற்கென்ன மாமா... செய்து விடலாம்...''

''எனக்கு அந்தஸ்து, சொத்து, சுகம், சொந்த பந்தம் — இதெல்லாம் பெரிதில்லை. வனஜாவின் அம்மாவிற்கு என்னைப் பிடித்திருந்தது. ... நான் அவளை விரும்பினேன்... கல்யாணம் செய்து கொண்டோம்... அதே போல், வனஜா யாரை விரும்புகிறாளோ..''

கலகலவென்று சிரித்தபடி வனஜா உள்ளே வந்தாள்... கூடவே மாணிக்கமும்.

''என்னம்மா வனஜா!... அப்படி என்ன சிரிப்பு...? சொல்லேன்... நானும் சேர்ந்து கொள்கிறேன்...'' என்றார் சிங்காரவேலன்.

''ஒன்றுமில்லை அப்பா!... அவர் எப்போதும் சிரிக்கச் சிரிக்கத்தான் பேசுகிறார்...'' என்றாள் அவள்.

மாணிக்கம் தனியாக நின்றான். சிங்கார வேலன் முன் உட்காரக் கூட விரும்பவில்லை.

''மாணிக்கம்!... நான் சொன்னதைப் பற்றி யோசித்தாயா?...'' என்று கேட்டார் சிங்காரவேலன்.

முத்துவின் விழிகள் உயர்ந்தன. அதற்குள் என்ன பெரிய விஷயம்? அதுவும் யோசித்துச் சொல்லிருப்போர்....

''ஒன்றுமில்லே முத்து... உன் வியாபாரம், உன் பிஸினஸ் எல்லாவற்றையும் விட்டு விட்டு நீ என்னோடு வர முடியுமா?... அது தான் மாணிக்கத்தைக் கேட்டேன்... ஒரு மாதம் லீவு போட்டுவிட்டு வந்தாலுல், எனக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும்!''

''ஏன்!... நானே வரேனே!... அப்படி ஒன்றும் இங்கே எனக்கு...!''

''நான் லீவு போட்டுவிட்டேன்..... கொடுத்தும் விட்டார்கள்...'' என்ருன் மாணிக்கம் சட்டென்று.

''அத்தானே வரட்டும்...!'' என்ருள் வனஜா மாணிக்கத்தைப் பார்த்தபடியே....

முத்துவின் உதடுகள் துடித்தன. அவன் மூளே ஒரு திட்டத்தை உருவாக்கியது.... அதன்படி – அவன் மேல் சந்தேகம் விழாது... ஆனல் மாணிக்கம்...?

நாகப்பட்டினத்தில் சிங்காரவேலன் – தம் வீட்டில் – வாசலில் போடப்பட்டிருந்த வேனிற்பந்தலில் காற்ருட உட்கார்ந்திருந்தார். வனஜாவிற்கு மாணிக்கத்தினிடம் ஏற்பட்ட நாட்டம் அவருக்கு ஒரு திருப்தியை அளித்தது. மாணிக்கத்தையும் அவருக்கு நன்கு புரிந்திருந்தது. ''நல்ல பையன். சொத்தையும், பெண்ணேயும் காப்பாற்றுவான்'' என்ற நம்பிக்கை இருந்தது. வனஜாவை ஜாடையாக விசாரித்தார். அவளும் மறுத்துப் பேசவில்லே.

''ஸார்!'' என்று குரல் கேட்டு நிமிர்ந்தார்.

இளம்பெண் ஒருத்தி... இடுப்பில் ஆறு மாதக் குழந்தை... கையிலே ஒரு ஸூட்கேஸ்...

''இங்கே மாணிக்கம் இருக்கிருரா?'' என்று கேட்டாள் அவள்.

''இருக்கிருன்... அது சரி!... நீ யார்!''– என்று கேட்டார் அவர்.

''அவர் என் வீட்டுக்காரர்... இது எங்கள் குழந்தை!'' என்ருள் நிதானமாக.

சிங்காரவேலன் பதறினர். ''நீ என்ன சொல்கிருய்?''

''ஒரு மாதமாக வீட்டுப் பக்கம் வரவில்லே... ஆபீஸிற்கும் போகவில்லே... தாலி கட்டாமல் வாழ ஆரம்பித்துவிட்டோம்... எங்கே தவிக்க விட்டுவிடுவாரோ என்று பயம்... ஆபீஸில் விசாரித்துக் கொண்டு இங்கே வந்தேன்...'' என்ருள்.

சிங்காரவேலன் உள்ளே திரும்பி, ''மாணிக்கம்!'' என அழைத்தார்.

உள்ளேயிருந்து வந்தவனேப் பார்த்ததும் 'அத்தான்' – என அழைத்தபடி அந்தப் பெண் ஓட –

வந்தவன் மருண்டு போய் – ''சீ! இதெல்லாம் என்ன கூத்து! விடு என் கையை''– எனத் திகைத்துப் போக –

''நீ தாண்டா நாடகம் ஆடுகிருய்! அயோக்கிய ராஸ்கல்!'' என்ருர் சிங்காரவேலன். ''மனேவி வேறு... குழந்தைவேறு.. இங்கே நல்லவன் மாதிரி வேஷம்!''

சிங்காரவேலன் குரல் உயர்ந்தது. வந்தவன் நடுங்கிப் போய் நின்ருன்.

''**தி**ருமணம் நிச்சயித்து விட்டேன்.... மாப்பிள்ளே நீதான்! உடன் புறப்படு!'' என்ற தந்தியைப் பார்த்து முத்து முதலில் ஆச்சரியப்பட்டான். தன் திட்டம் இத்தனே சீக்கிரம் நிறைவேறும் என்று அவன் எண்ணவில்லே. தன் நண்பன் ஒருவன் மூலம் ஏற்பாடு செய்த நாடகம் வெற்றியடைந்துவிட்டதே!...

ரயிலே விட்டிறங்கி அவன் சிங்காரவேலன் வீட்டை அடையும்போது எல்லாமே தயாராக இருந்தது.

''போய் உடை மாற்றிக் கொண்டுவா!... முகூர்த்தத்திற்கு நேரம் ஆகிறது!'' என அவசரப்படுத்தினர் சிங்காரவேலன்.

மாணிக்கத்தைக் காணவில்லேயே! வீட்டை விட்டுத் துரத்தியிருப்பார்... அந்த எக்ஸ்டிரா நடிகை நன்ருகத்தான் நடித்திருக்கிருள். பேசிய தொகைக்கு மேல் கொஞ்சம் அதிகம் தர வேண்டும் என நிச்சயித்துக் கொண்டான் முத்து. குதூகலத்துடன் உடை உடுத்திக் கொண்டான். தயாராயிருந்த காரில் அவனேயும் ஏற்றிக்கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டார் சிங்காரவேலன்.

மாப்பிள்ளேயாக அவன் மணமேடையில் அமர்ந்து வனஜாவிற்காகக் காத்திருந்தான். மணப்பெண்ணுக வந்தவள் வனஜா அல்ல.

''நீயா!'' எனப் பதறிப் போய் எழுந்தான் முத்து.



பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாதராஜா தம் பேரனுக்கு மிட்டாய் வாங்க ஒரு மிட்டாய்க் கடைக்குச் சென்ருர். கடைக்காரர் மிட்டாயை ஒருதாளில் மடித்துக் கொடுத்தார். அந்தத் தாளில் அருமையான ஒரு தமிழ்ச் செய்யுளேப் பார்த்தார் ராஜா. இதுவரை வெளிவராத புதிய செய்யுளாக இருப்பதை உணர்ந்து தாளேக் கிழித்த நோட்டுப் புத்தகத்தைப் பெற்றுப் பார்த்தார். அருமையான வெண்பாக்கள், கலித்துறை விருத்தம், நீரோட்டக அந்தாதி முதலியன அடங்கிய தொகுதியாக இருந்தது. கவிஞருடைய பெயர் சி. ஆ.ராமசாமியா பிள்ளே. கலிவலம் வந்த நல்லூர் என்று இருந்தது. உடனே கவிஞர் ராமசாமி–பற்றிய அரிய செய்திகளேயும் அவரது படைப்புக்களேயும் திரட்டுவதில் முனேந்துவிட்டார் பன்மொழிப்புலவர்.

–ஸன். எஸ். முத்து கிருஷ்ண ராஜா



அப்பாவுக்குப் பிடித்தது — அம்மாவுக்குப் பிடிக்காது!
தாத்தாவுக்குப் பிடித்தது — பாட்டி விரும்பாதது!
அண்ணாவுக்குப் பிடித்தது — அக்காவுக்கு ஆகாது!
ஆனால்
எல்லோருக்கும் பிடித்த
ஒன்று...
நரசுஸ் காபி
அது குடும்பத்தின் தோழன்.
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ்
"தெர்மலோ" காபி!
நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007. கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2504

''ஆமாம்! நீ அனுப்பி வைத்தவன்தான்! கட்டுடா தாலியை!'' என்றார் சிங்காரவேலன். அவர் பின்னால் மாணிக்கமும் வனஜாவும் நின்று கொண்டு இருந்தனர்.

அன்று சிங்காரவேலன் பார்த்த பெண்-முத்து தன் நண்பன் மூலம் ஏற்பாடு செய்து அனுப்பிய அந்த நடிகை தப்பாகப் புரிந்து கொண்டிருந்தாள். அன்று அவள் ''மாணிக்கம்!'' என்று அழைத்தபோது உள்ளேயிருந்து வந்தது மாணிக்கம் இல்லை. அவர் புதிதாக நியமித்திருந்த வீட்டுக் கணக்குப் பிள்ளை தங்கப்பன். கிட்டத்தட்ட மாணிக்கத்தின் வயது, உயரம்.

அவன்தான் ''மாணிக்கம்'' என்று தப்பாக நினைத்து அவள் நெருங்க – தன்னை நெருங்கியவளை உதறித் தள்ளினான் தங்கப்பன்.

''இது ஏதோ மோசடி, ஐயா!... என்னை மாணிக்கம்னு கூப்பிடுது... புருஷன்னு சொல்லுது... கட்டிய புருஷன் முகம் கூடவா மறந்து போகும்?''

சிங்காரவேலனுக்கு ஒன்றுமே புரியவில்லை... ''கூப்பிடு போலீஸை!'' என்று கர்ஜித்தார்.

அந்தப் பெண் அவர் கால்களில் விழுந்து கதறினாள். தான் வயிற்றுப் பிழைப்பிற்காக அப்படிச் செய்ததாகச் சொன்னாள். யார் அனுப்பியது என்று தனக்குத் தெரியாது என்றும், கையில் ஆயிரம் ரூபாய் தந்ததாகவும் கூறினாள்.

அப்போது தான் மாணிக்கமும் வனஜாவும் உள்ளே நுழைந்தார்கள்.

''என்னைக் காப்பாற்றுங்கள் அண்ணா!'' என மாணிக்கத்தைப் பார்த்து ஓடினாள் சுமதி – அந்தப் பெண்.

எல்லா விவரங்களையும் கேட்ட மாணிக்கம் சுமதியைப் பற்றி அவர்களிடம் கூறினான். தன் நண்பனின் தங்கை – ஒருவனை நம்பி மோசம் போய்க் குழந்தையும் பிறந்தபிறகு அவன் உதறித் தள்ளிவிட – சினிமா நடிகையாக இருப்பதைக் கூறினான்.

''அந்தப் பெரிய மனிதன் யார்?'' என்று கேட்டார் சிங்காரவேலன்.

''அதெல்லாம் எதற்கு மாமா? லாபம் ஏற்படப் போவதில்லை!'' எனத் தயங்கினான் மாணிக்கம்.

''சொல்!'' என்று கர்ஜித்தார் சிங்காரவேலன்...

மாணிக்கம் சொன்னான். அந்தப்பெயரைக் கேட்டு அவளும் தலை அசைத்தாள்.

''இதெல்லாம் என்ன அக்கிரமம்!..... எவளோ ஒருத்தியைக் கூட்டி வந்து கட்டாயமாக...''

முத்து எழுந்திருக்க முயன்றான். கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரு ஸப் – இன்ஸ்பெக்டரும் இரண்டு போலீஸ்காரர்களும் நெருங்கினார்கள்.

முத்து தாலியைக் கையில் எடுத்துக் கொண்டான். கெட்டி மேளம் முழங்கியது!

செய்தி வெடிகள்



- கட்சிக்கு விரோதமாக நடந்தால் எங்களைத் தூக்கி எறியுங்கள்.
  —சிவாஜி கணேசன்.
- ★ தம்மைச் சுலபமாகத் தூக்கி எறிய முடியாது என்ற தைரியத்தில் பேசியிருக்கிறாரோ!

- செருப்புக்குள் ரூ. நாலரை லட்சம் பெறுமான தங்கத்தைக் கடத்திய ஆசாமி பிடிபட்டான். —சென்னைச்செய்தி
- ★ அவனுடைய 'லட்சாதிபதி நடையே' அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டிருக்குமே!

- வெள்ளச் சேதம் பற்றிச் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட 'வெள்ளை அறிக்கை' மீது அமைச்சர் எஸ்.டி.எஸ். பேசினார்.
  —ஒரு செய்தி.
- ★ 'வெள்ளை அறிக்கை' என்பதை விட 'வெள்ள அறிக்கை' என்றே சொல்லலாமே!


- ரூ. 2 லட்சம் முதல் பரிசு கொண்ட கஞ்சன்சங்கா லாட்டரி குலுக்கல் முடிவு அறிவிக்கப்பட்டது.
  —புதுடில்லி செய்தி.
- ★ ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் என்று மற்ற முதல் பரிசுகள் இருக்க, இந்தக் கஞ்சன்சங்கா மட்டும் ஏன் கஞ்சன் சங்காவாக இருக்க வேண்டும்?

- ரூ. 200 மதிப்புள்ள 7 கிலோ காப்பி பவுடர், 2 கிலோ பருப்பு, 2 கிலோ வெல்லம் திருடிய ஆஸ்பத்திரி சமையல்காரர் பிடிப்பட்டார். —ஒரு செய்தி.
- ★ ஏது? சகல கிலோ வல்லவனாக இருப்பான்போல் தெரிகிறதே!


- கருணாநிதிக்குச் சலவைத் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் மாலை அணிவித்தனர்.
  —சேலம் செய்தி.
- ★ சலவை கரன்ஸி நோட்டு மாலைகளாக இருந்தால் மகிழ்ச்சி அதிகமாகவே இருந்திருக்கும்.

—மகரம்

ராலி:ஃபேன் விசிறிகளின் உள்ளமைந்த மேம்பாடு.
இது காலச் சோதனைகளை வென்றது.



ராலி:ஃபேன் டிலைட் பெருமையை நாடறியும்.



தரச் சிறப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்க்கிற போது, ராலி:ஃபேன் விசிறிகளுக்கு இணையே இல்லை. ஏனெனில் காலச்சோதனைகளில் வென்று நின்றிட, ஒவ்வொரு ராலி:ஃபேன் விசிறியும் கடுமையான தரச் சோதனைக்கு உள்ளாகிறது. விசேஷ ஸிங்கிள்-பீஸ் பிளேடுகள் என்பதால், சீராக ஓடுவதோடு இரைச்சலும் இருக்காது. மிகநுணுக்கமான கியர்-பாக்ஸ் இருப்பதால், உதறல் இன்றி, சமனிலை இயக்கம் கிடைக்கிறது. மின்சார முறை வண்ணப்பூச்சு காரணமாக மெருகு நீடித்து நிற்கிறது. ஆகவே உங்களுக்குக் கிடைப்பது— இத்தனைச் சிறப்புகளும் உள்ளடங்கிய அருமையான விசிறி. தேர்ந்தெடுக்க வசதியாக பலவகை ராலி:ஃபேன் விசிறிகள். டெபொனேர், டீலக்ஸ், நியூ டிலைட், டெமாக்ரேட் மற்றும் பெடஸ்டல், வால், கேபின் விசிறிகள். ஒவ்வொன்றிலும் ஓங்கி நிற்கும் ராலி:ஃபேன் மேம்பாடு.

ராலி:ஃபேன்
தரமோங்கிய தயாரிப்புகளுக்கு

ராலீஸ்
மல்ட்டி-டெக்னாலஜி க்ரூப்

ULKA-RF-1-82 TAM

இன்டேன் ஆள், பாதிக்கப் பட்ட ட்யூபில் உள்ள ஆபத்துக்களை எங்களுக்கு காட்டிய நாள்...







நினைவிருக்கட்டும்—வெடிப்பு அல்லது இறுக்க மில்லாமல் தளர்வாக இருத்தல் ஆகியவற்றிற்காக, ரப்பர் ட்யூப் தவறாமல் சோதிக்கப்பட வேண்டும். இவற்றைக் கண்டால், உடனடியாக அது மாற்றம் செய்யப்பட வேண்டும். எப்படியும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அதை மாற்றவும். அங்கீகரிக்கப்பட்ட ட்யூபையே உபயோகிக்கவும்.

Shilpi IOCL 25/83 Tam.

Indane
இன்டேன் குக்கிங் காஸ்

பொதுமக்களின் நன்மைக்காக வெளியிட்டோர்
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்.

கோகுலம் வெகுமதி திட்டம்

உங்களுக்குப் பிடித்தமான ஏதேனும் ஒரு பள்ளிக்குக் கோகுலம் சங்களுடைய அன்பளிப்பாகக் கிடைக்கச் சந்தா அனுப்புமாறு கோரியிருந்தோம். குழந்தைக் குலத்தைக் குதூகலிக்கச் செய்யப் பின்வருவோர் முன்வந்துள்ளனர்.

(தொடர்ச்சி)

14. ஸ்ரீமதி கல்யாணி ராஜாமணி,
செம்பூர், பம்பாய்.
15. ஸ்ரீமதி சாந்தா பழனிசாமி,
கோவை.
16. ஸ்ரீமதி ஏ. சாந்தி,
மொண்டிபாளையம், பவானி.
17. கருங்கல் ஆர். ஜார்ஜ்,
கருங்கல், குமரி.
18. பி. விஜயலக்ஷ்மி,
சென்னை—23.
19. ஓர் அன்பர்,
பாண்டிச்சேரி.
20. ஏ. கோவிந்தராஜுலு,
கோபிசெட்டிப்பாளையம்.
21. பொன். செல்வம். (8 சந்தாக்கள்)



22. ஆர். வாசுதேவன்,
கோவை.
23. ஏ. வடமலை,
கீரனூர், பழனி தாலுகா.
24. டாக்டர் டி. சீனிவாசன்,
இடைப்பாடி, சேலம்.
25. மாஸ்டர் மாதவன்,
கோவை.
26. குமரி அமுதன்,
கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில்.
27. மிஸ். வி. பத்மாவதி,
சின்னகுயிலை, கோவை.
28. எம். சரவணன்,
சென்னை—26.
29. ஏ. ஆர். கணேசன்,
சென்னை—4.
30. முருகசாமி,
காரைக்குடி.
31. எம். சண்முக சுப்பிரமணியம்
தஞ்சாவூர்.
32. ராம. ஏகப்பன்
கோவை.
33. எம். ஏ. எம். காசி செட்டியார்,
திருச்சி. (2 சந்தாக்கள்)

34. ஆர். வெங்கட்ராமன்,
குல்பர்கா.
35. எஸ். ஆர். ஜி. சுந்தரம்,
சென்னை—91.
36. என்.வி. என். நாகப்ப செட்டி,
காரைக்குடி.

விவேகானந்த சரஸ்வதி சேவாசிரமம்,
சென்னை—59.
தையர் செகண்டரி ஸ்கூல்
அயனாவரம், சென்னை—70.
பாபுஜி ஆங்கிலப் பள்ளி,
பம்மல், சென்னை—75.
புனித அந்தோணியார் உயர்நிலைப்பள்ளி,
துண்டத்துவிளை, கருங்கல்.
விவேகானந்தா கான்வென்ட்,
சென்னை—23.
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
செட்டியார் பாளையம், பாண்டிச்சேரி.
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
கூவத்தூர், திருச்சி ஜில்லா.
ஸ்ரீ சங்கரா தையர் செகண்டரி ஸ்கூல்,
அடையாறு, சென்னை—20.
சாவித்திரியம்மாள் ஓரியண்டல் தையர் செகண்டரி ஸ்கூல், சென்னை—4.
செந்தாமரை வித்தியாலயம், சென்னை—4.
கோபாலபுரம் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி,
சென்னை—86.
பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, சென்னை—4.
அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
அசோக்நகர், சென்னை—83.
மாசிலாமணி முதலியார் ஹாஸ்டல்,
வாலாஜாபாத்.
தேசிய ஆங்கிலப் பள்ளி, சென்னை—86.
சிலகம்பட்டி பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளி,
சிலகம்பட்டி, பொள்ளாச்சி.
பஞ்சாயத்து யூனியன் மிடில் ஸ்கூல்,
கீரனூர், பழனி.
மௌனி ஆங்கிலப் பள்ளி,
இடைப்பாடி.
வி. எஸ். ஐ. தையர் செகண்டரி ஸ்கூல்,
கோவை.
ஸெயின்ட் ஸ்கூல்,
சென்னை—4.
ஆரம்பப்பள்ளி,
சின்னகுயிலை, கோவை.
சத்குரு நிலையப் பள்ளி,
ஆதம்பாக்கம், சென்னை—88.
திருப்பத்தூர் பஞ்சாயத்து துவக்கப்பள்ளி,
நெற்குப்பை.
நகராட்சி துவக்கப்பள்ளி
முருகேசநகர், வண்டிப்பாளையம் கடலூர்
வள்ளியம்மாள் அறம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை—40.
உயர்நிலைப்பள்ளி
கீழாநிலை, புதுக்கோட்டை.
எஸ். கே. டி. காந்தி உயர்நிலைப்பள்ளி,
ராயவரம், புதுக்கோட்டை.
எஸ். கே. டி. காந்தி ஆரம்பப் பள்ளி,
ராயவரம், புதுக்கோட்டை.
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
காவேரி நகர், புதுக்கோட்டை.
மாடர்ன் சீனியர் செகண்டரி ஸ்கூல்,
சென்னை—61.
ஜெயங்கொண்ட விநாயகர் ஆரம்பப்பள்ளி,
நாச்சியாபுரம்.

ஊருக்கு உபதேசம்



சந்தோஷமாயிருக்கிறது. ரொம்ப நாள் கழித்துத் தமிழில் கதையோடு ஒரு படம்.

ராமாயணமும் இன்ன பிற கதைகளையும் உபன்யாசிக்கிற ஒரு அப்பாவிற்கு மூன்று பிள்ளைகள். மூத்தது சாது (எஸ். வி. சேகர் — அசட்டுக் களை சொட்டும் முகத்திற்கு இன்றைய தேதிக்கு இவரை விட்டால் ஆளேது?) இரண்டாவது காதல் ஜோருடன் (சுபாகர் — லூட்டி அடிக்கும் வனிதா — காதல் காட்சிகளில் என்னமாய்ப் பின்னிப் பின்னி இரட்டைப் பாம்பு நடனமாடுகிறார்கள் — அம்மாடியோவ்!) மூன்றாவது வெளியூரில் வேலை செய்து கொண்டு லூட்டி (திலீப் — கண்களில் மட்டும் நூறு நூறு வாட் பல்புகளைப் பொருத்திக் கொண்டிருக்கிறாரோ?) என்று கதையில் அறிமுகமாகின்றனர். ஆனால் விசு கதையில் நுழைந்தவுடன் தான் அவர் தன்னாடிலும் படம் ஸ்டெடியாகிறது.

வீட்டுக்கு வந்த மூத்த மருமகளை 'ஒருமாதிரியான' இடத்தில் பார்த்ததாய்க் கடைசிப் பிள்ளை சொல்லி விட, அவளை என்னென்ன செய்து விரட்ட முடியுமோ அவ்வளவும் செய்து விரட்டி விடுகிறார்கள் குடும்பத்தினர். சித்தப்பா விசுவும், இரண்டாவது பிள்ளை சுபாகரும் எப்படி இதே தோற்றத்திலிருக்கும் அந்த 'அவளை' பம்பாய் வரை போய்க் கண்டுபிடித்து மெட்ராஸுக்கு அழைத்து வந்து ஆள் மாறாட்ட நாடகங்கள் ஆடி எல்லாவற்றையும் சுபமாக்குகிறார்கள் என்பது சுவையான பழைய நாடகக் கதை.

இடைவேளை வரை நிஜமாகவே ஜிங்ஜிங்கென்று காட்சிகள். அப்புறம் ஹைதராபாத், பம்பாய், சிவப்பு விளக்கு, கவர்ச்சி நடனம், ஆள் மாறாட்டம் என்று திக்கித் திக்கி நகர்த்துகிறார்கள். சாருஹாசனுக்கு வக்கீல் தொழில் என்று கேள்வி. அதிலேயே கவனத்தைச் செலுத்தலாமே. எதற்கு வீணாய் இந்த ஸெலுலாயிட் உலகத்திற்கு வந்து உடம்பை அலட்டிக் கொள்ள வேண்டும்?

பிடித்த விஷயங்கள் என்று எடுத்துக் கொண்டால்:


பிரதானமாய் விசுவின் பாத்திரம். அவரின் நடிப்பு.

ஊர்வசியின் மூக்கு விசிக்கும் அழுகை பாவங்கள்.

சூரிய கோஸ் ரங்காவின் வசனம். டைரக்டர் இருப்பதை 'ஸிம்பாலிக்' காட்சிகள் மூலம் சொல்லிக் கொள்ளாத எஸ். பி. எம்மின் டைரக்ஷன். அறிமுக இசையமைப்பாளரின் (விஜயானந்த்) இசையில் 'வா, வா' பாடல். பிடிக்காத விஷயங்களில் ஒன்றை மட்டும் விவரமாகவே சொல்ல வேண்டும்.

க்ளைமாக்ஸ்!

செய்த தவறுகளுக்கெல்லாம் பிராயச்சித்தமாய்த் தாலிக்கே மூன்றாவது மகன் தாலி கட்டட்டும் என்று 'கனமாய்' விஷயத்தை ஆரம்பிக்கிறார்கள். அப்புறம் அவன் 'வேண்டாம், நான் தாலிதானே' என்றதும் ஆளாளுக்கு ஒதுங்கிக்கொள்கிறார்கள். போதாததற்கு நகைச்சுவை வசனங்களையும் சேர்த்து அந்தக் காட்சியின் உயிரைச் சொட்டு ரத்தம் பாக்கியில்லாமல் உறிஞ்சி விடுகிறார்கள். பெருந்தன்மை படத்தின் பாத்திரங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். டைரக்டருக்கோ, கதாசிரியருக்கோ இருந்திருக்கலாமே. மற்றபடி இரண்டரை மணி நேரத்தில் பொழுதும்போகிறது. கொஞ்சம் திருப்தியும் இடைக்கிறது.



நூறாவது நாள்

கண்ணுக்குக் குளுமை யான லொகேஷன். கதகதப்பான போர்வைக்குள் முடங்கியிருக்கும் நளினி. அப்புறம் அவருக்கு ஒரு திகிலூட்டும் – பயங்கர கனவு. அவருடைய அக்கா ட்ரெஸ்ஸிங் டேபிள் முன் உட் கார்ந்து ஆடை பாதியுடன் அலையான கூந்தலை வார, ரெயின் கோட் போட்ட நிழலான ஆசாமி எதிரில் தோன்றி இடுப்பில் கத்தியை இறக்குகிறார். குருதி வடிய வடிய அக்கா இறந்து போகிறார். 'திடுக்' என்று நளினியுடன் நாமும் எழுந்து உட்காருகிறோம். அப்படியே 'டிட்டோ' 'டிட்டோ'வாய் நளினியின்கனவு நனவாகிறது – என்று கதையின் தொடக்கம்.

இந்து வருடங்களை ஒரு டைட்டில் கார்டில் நகர்த்தி விட்டு, கதை மறுபடியும் புதிதாய் ஆரம்பிக்கிறது.

மோகன், விஜய்காந்த் – இரட்டை நாயகம். மஹா பணக்கார மோகன், அவரது இறுக்குபுத்தி செக்ரட்டரி ஜனகராஜ். பதினைந்தாயிரம் பெறுமானமுள்ள செருப்புப் பரிசுடன்(!) தப்பான கல்யாணத்தில் நுழைந்து இருட்டு முழிமுழித்து நளினியின் கைங்கரியத்தால் உதை வாங்கும் ஸீன் – கல, கல, கல, கம.

சத்யராஜ் செய்யும் கொலையை நேரில் கனவில் கண்டபடி பார்த்துவிட்டு நளினி அலறுவதும், சத்யராஜ் அவரைத் துரத்து வதும் அமைதியான நிலை மான தேவாலயத்தில் தஞ்சம் புகுவதும் அங்கு மயிரிழையில் நளினி தப்பிப்பதும், சத்யராஜ் மேலே யிருந்து கீழே விழுவதும், நளினி மெதுவாய்க் கீழே இறங்கி அவர் அருகில் வந்து தொட்டுப்பார்க்கத் தடாலென்று சத்யராஜ் எழுந்து பிடிப்பதுமான காட்சிக் கலவைகள் – பக், பக், பக், பக்.

இளையராஜாவுக்கு ஒரே கொண்டாட்டம். கெப்பு ரோஜாக்கள், மூடு பனி அது இது என்று பல படங்களில் ட்ரம்மைக் கிழித்த அனுபவம் இங்கேயும் உதவியிருக்கிறது.

கட்டின வீட்டில் சுவரை இடித்து அதில் பிணத்தை வைத்து செங்கல் அடுக்கிப் பூசி மெழுகுவது – புதுக் கற்பனைதான். இருந்தாலுங்கூட மூலப்படமே மேல் நாட்டு சமாச்சாரம் என்கிறார்கள். இந்த விஷயங்கூட ஒருவேளை இறக்குமதியான வஸ்துதானோ என்னவோ?

அமானுஷிய சக்தி கொண்டவராய் நளினி. ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால்–கச்சிதம்.

மனோதத்துவ டாக்டராய் விஜய்காந்த். இங்கே அங்கே என்று அலைந்து நன்கொடை வசூலிக்கிறார். துப்பு துலக்கப் பார்க்கிறார். சண்டை போடுகிறார். அடிபடுகிறார். அத்தனையும் பார்த்தும் தான். மொச்சைக் கொட்டை மூன் பல்லுடன் வசனம் பேசினால் தான் கொஞ்சம். கொஞ்சம்கஷ்டமாயிருக்கிறது.

ஸேட்டுக்கு மோகன். படம் நெடுக வழிந்தாலுங்கூட, கடைசி காட்சி முக பாவங்களில் பெயரைத் தட்டிக் கொள்ளப் பார்க்கிறார்.

டைரக்டர் மணிவண்ணனுக்குச் சில வார்த்தைகள்: பாரதிராஜா அடிச்சுவட்டைப் பின்பற்றி நீங்களும் முதல் 'க்ரைம்' பிக்சர் பண்ணி விட்டீர்கள் போல. சந்தோஷம் தான். கல்யாண பரிசாக வந்தவை அத்தனையும் டெலிபோன்கள் என்கிற விஷயம் சில்ரன்ஸ் மூவியா என்ன என்று கேட்க வைக்கிறது. அங்கங்கே எலும்புக் கூடு, அதன் நீண்ட கை என்று மோன இசைப் பின்னணியுடன் காட்டினாலுங்கூட 'பெப்' கொஞ்சம் கம்மி தான். நூறு நாட்களை, படம் தொட வேண்டும் என்பதற்காக வைக்கப்பட்ட டைட்டிலோ? வளர்ந்து கொண்டே வருகிறீர்கள். இன்னும் நிறைய யோசித்து, நிதானமாய்த் திட்டமிட்டுச் செய்யுங்களேன். முன்னேறியவராவீர்கள் வருவீர்கள்.

-ஜெயமன்மதன்



20

ஜெயாவின் பேச்சை மறுத்தான் ஹரி.

''இல்லீங்க... நான் அவன் ஷர்ட்டைப் பிடிச்சுத் தூக்கினேன்.''

''என்னும்மா ஹரி தூக்கினேன்கிறானே!''

''அதெல்லாம் நான் கவனிக்கலே.''

இன்ஸ்பெக்டர் முதலியாருக்கு இந்த இடத்தில் அவன் வேண்டுமென்றே எதையோ திரித்துச் சொல்கிறான் என்று பட்டது.

''கரெக்டா சொல்லு.''

''இல்லை சார் நீங்க... திருப்பித் திருப்பிச் சொல்றேன். எனக்குக் கோவம் பொத்துக் கிளம்பி வந்துது. அந்த ஆத்திரத்திலேதான் அடிச்சேன்.''

இன்ஸ்பெக்டர் எதையோ எழுதிக்கொண்டார். நீளநீளமான வெள்ளைப் பேப்பரில் கார்பன் வைத்து மீசை இல்லாத ஒரு போலீஸ்காரர் ஒரு மணி நேரம் உட்கார்ந்து எதையோ எழுதினார். கையெழுத்து வாங்குவதற்கு முன் அதை இன்ஸ்பெக்டரிடம் கொண்டு போய்க் காட்டினார்.

கையெழுத்துப் போடுவதற்காக லாக்கப் கதவைத் திறந்து வெளியே அழைத்துப் போனார்கள். இன்ஸ்பெக்டர் மேஜையருகே போன போதுதான் தெருவில் ஒரு பெரிய கூட்டம் கூடி நிற்பது தெரிந்தது. முதலில் அவனுக்குக் கூச்சமாக இருந்தது. இவர்கள் எல்லாம் என்னென்ன கதை கட்டுவார்களோ என்று நினைக்க மிகவும் வேதனையாக இருந்தது.

ஆனால் அவன் ஒரே நிமிஷத்தில் அந்தக் கூச்சத்தையும் வேதனையையும் உதறி எறிந்தான். தலைநிமிர்ந்து கொண்டு போய்க் கையெழுத்துப் போட்டான்.

திரும்பும்போது வாசலில் ஒரு பெஞ்சின் அருகே காசியும் எஸ்தரும், கண்ணாடி போட்டுக் கொண்டு ஒரு வழுக்கைத்தலை மனிதரும் நிற்பது தெரிந்தது.

மீண்டும் அவனை லாக்கப்பில் அடைத்த போது ஒவ்வொருவராக அவனைப் பார்க்க உள்ளே இன்ஸ்பெக்டர் அனுமதியில் வந்து வந்து போனார்கள்.

முதலில் காசி வந்தான்.

''இன்னு இப்படி செஞ்சுட்டியே?'' என்று கேட்டான்.

ஜெயா அவனை நிமிர்ந்து பார்த்தான். எதற்கும் கலங்காது, தீர்க்கமாக யோசித்து மனதைத் தெளிவாக, வைத்திருப்பதைப் போன்று பார்த்தான்.

காசியின் கண்களிலிருந்து குபுகுபுவென்று கண்ணீர் அருவியாகக் கொட்டிற்று. அது அவன் கன்னத்தில் வழிந்து சட்டையிலும் மார்பிலும் தெறிவதை அவன் மௌனமாகக் கவனித்தான். காசியினால் பேச முடியவில்லை. தனக்காக இவன் ஒரு குற்றவாளியானான் என்ற எண்ணம் அவன் முகத்தின் சதை துடிப்பதில், அவன் உதடுகள் நடுங்குவதில் ஜெயாவுக்குப் புலப்பட்டது.

''ஐய... இன்னு பொம்பள மாதிரி அழுவுறே. இன்னு பொல்லாத தப்பு பண்ணிட்டேன்? அவன் கொலை பண்ண வரலாம். வாரியை ஏத்தி ஒத்தர குளோஸ் பண்ணப் பார்க்கலாம். அது ரைட்டு. அவனை நாம அடிச்சிட்டா அது தப்பா?''

'அட பைத்தியக்காரி... உனக்கு நான் கல்யாணப் பந்தலில் எவனோ ஒரு நல்லவன் தாலி கட்டுவதைப் பார்க்கத்துடித்தேனே..' என்று தனக்குள் குமுறிக்கொண்டே காசி முகத்தைத் துடைத்து விட்டு நெடுமரம் போல் நின்றான்.

அவனுக்கு அவனிடம் எதையோ தெரிவிக்கத் தோன்றியது. அதை இங்கே இந்தச் சூழ்நிலையில் சொல்வது மிகவும் குரூரமாகத் தோன்றியது.

''கடையை மூடிட்டு ஹோட்டலுக்கு வந்துடு. இட்லிக்கு மாவு குப்பிலு வந்து போட்டுக்கிறேன். சாய்ங்காலம் மளிகைக் கடைக்காரருக்கு ரூபா குடுத்துட்டேன். ட்ரங்கு பொட்டிலே பெருங்காய டப்பாவுலே பணம் வச்சிருக்கேன். சீட்டுக்கட்டின பணம் வந்துட்டுது. எட்னூத்தி எனுவத்தஞ்சு ரூபா இருக்கும். பால்காரருக்குக் காத்தாலே துட்டுக் குடுத்துடு.''

அவன் நிதானமாக விவகாரம் பேசுவது காசிக்கு நெஞ்சைப் பிளப்பது போலிருந்தது. அவன் படீரென்று நெற்றியைத் தன் உள்ளங்கையால் அறைந்து கொண்டான்.

ஜெயா நறுக்கென்று தன் பேச்சைக் கத்தரித்துக் கொண்டாள்.

''சரி... நீ போயி அக்காவை அனுப்பு'' என்று அவனுக்கு விடை கொடுத்தான்.

எஸ்தர் முகம் வெளுத்துப் போய்க் கண்களில் நீர் குளம் போல் தேங்க உள்ளே வந்தாள்.

''இன்னு அக்கா... இவ பெரிய ரவுடிப் பொண்ணுன்னு நெனைக்கறியா?''

எஸ்தர் ஒன்றும் பேசவில்லை.

''நான் பண்ணினது தப்பா...? நீ கூட அப்படி நினைக்கறியா?''

எஸ்தர் கண்களைத் துடைத்துவிட்டு இல்லை என்பது போல் தலையை ஆட்டினாள். தொண்டை கரகரக்க ''நீ ஏன் இந்த வேலையைச் செஞ்சே?'' என்று கேட்டாள்.

அவள் கேட்டவிதம் ஜெயாவின் மனசில் உலகில் வேறு எவருக்கும் சொல்லக்கூடாது என்று அவள் பூட்டி வைத்திருக்கிற பூட்டைத்

ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

தொட்டு உலுக்கிற்று. சந்தித்துச் சில நாட்கள் கூட ஆகியிராத எஸ்தரிடம் ஜெயா ஓர் அத்தியந்தமான சொந்தத்தை உணர்ந்திருந்தாள். அவளிடம் எதையும் மறைக்க வேண்டியதில்லை. குரலைத்தாழ்த்தி, ''இட்டே வாங்கக்கா வாங்கக்கா'' என்று கூப்பிட்டாள்.

எஸ்தர் நெருங்கினாள்.

மேஜை மீது குனிந்து எதையோ எழுதிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரையும் அருகில் நின்ற போலீஸ்காரர்களையும் ஒருமுறை பார்த்துக் கொண்டு ஜெயா சொன்னாள்.

''ஹரியண்ணனுக்காக இதைச் செஞ்சேன்'' என்று மெதுவாய்ச் சொன்னாள்.

''ஏன்?'' என்று எஸ்தர் புருவத்தை நெளித்துத் தலையை ஆட்டி ஒரு மௌனக் கேள்வி கேட்டாள்.

''ஹரியண்ணனுக்கு இன்னிக்கு இன்னு கோவம் எந்துது தெரியுமா? நான் அவன் தலேலே ஒலக்கையிலே போடலேன்னு அவுரே மெறிச்சுத் தொவைச்சுட்டிருப்பாரு. இத்தினி நாளு ஒரு ஈ, எறும்பு கூட நோவாம பொலேச்சுட்டு, என் விருப்புக்காக வந்தவனேத் தங்கைலே அவுரு கொலே பண்ணனுமா... அந்தப் பாவம் யாரைச் சேரும்... சொல்லுக்கா.''

எஸ்தர் பிரமித்து விட்டாள்.



என்ன பெண் இவள்? என்று அவள் கண்ணிமைகள் ஆடாமல் நின்றுவிட்டன.

''இப்ப சொல்லுக்கா... நான் பண்ணது தப்பா?'' என்று ஜெயா கேட்டதும் எஸ்தர் பெருமூச்செறிந்தாள்.

''ஒண்ணு சொல்லட்டுமா ஜெயா?'' என்று உத்தரவை எதிர்பார்ப்பது போல் கேட்டாள்.

''இன்ன அது?''

''அந்த வில்வம் மெய்யாலே ஒன்னைப் பொண்ணு கேக்கத்தாம்மா அங்கே வந்திருக்கான்'' என்று மெதுவான குரலில் கூறினாள்.

''இன்னது?'' ஜெயா வாய் திறந்து அதிசயித்து நின்றாள்.

மேம்பாலத்தில் ஒரு கந்தல் சேலையில் என்னை விட்டு விட்டுப்போன அந்தத் தாய் யார்? என்னை இந்தப் பூமியில் விழுந்து இந்த ஜங்ஷன் மண்ணில் புரளு என்று என்னைச் சபித்துவிட்ட அந்தத் தந்தை யார்? எந்த நிர்ப்பந்தம் அவர்களை இப்படி சனியனை உதறுவது போல உதறிவிட்டுப் போகச் செய்தது? அவர்கள் உயிரோடிருக்கிறார்களா? தாங்கள் கைஉதறிவிட்டுச் சென்ற ஒரு மாதக் குழந்தை என்ன வாயிற்று என்று ஒரு நாளைக்காவது அவர்கள் நினைத்துப் பார்த்திருப்பார்களா?

காசி திருப்பத்தூரில் சைக்கிள் எடுத்துக் கொண்டு சப்ஜெயிலுக்கும் அரசாங்க ஆஸ்பத்திரிக்குமாக ஒரு நாளெல்லாம் சுற்றும் போது அந்த எண்ணங்கள் தான் ஒரு தேனீக் கூட்டம் போல் அவனை மொலு மொலுவென்று மொய்த்தது. கொட்டிற்று. எத்தனை விஷக் கொடுக்குகள்... எத்தனை குடைச்சல்கள்... என்ன வலி... என்ன வேதனை.

அரசாங்க டாக்டருக்கு இவன் துடிக்கிற துடிப்பும் படுகிற வேதனையும் மனசைத் தொட்டு விட்டது.

''இந்த வில்வம் யாரு... உன் கூடப் பிறந்தவனா?''

''இல்லே.''

''பின்னே... சொந்தக்காரனா?''

''அப்பிடியும் இல்லே.''

''அப்போ சினேகிதனா?''

அவரிடம் எப்படிச் சொல்வது? காசி குழம்பினான்.

(தொடரும்)

அருள்வாக்கு

● இயற்கையாக ஒருத்தனுக்கு அந்திமத்தில் ஏதாவது கன்னாபின்னா நினைப்புக்களே வரலாம். ரொம்பப்பேருக்கு அப்படித்தான் வருகிறது — அல்லது ஸ்மரணையே தப்பிப் போய் விடலாம். ஆனால் இந்த மாதிரி ஸமயத்தில் பக்கத்தில் இருக்கிறவர்கள் பகவந்நாமாவையே கோஷித்துக் கொண்டிருந்தால் அது அவனை மற்ற நினைப்பிலிருந்து இழுத்துக் கொண்டேயிருக்கும். ஸ்மரணை ஏதோ லவலேசம் ஒட்டிக் கொண்டிருந்தால் கூட; அந்த உள் பிரக்ஞையில் ஒருவேளை ஈச்வர நாமா காதில் என்று ஒரு தைப்பு தைத்தாலும் தைக்கும். அவனுக்குத் தானாக பகவான் நினைவு வராமல் வாழ்நாள் முழுவதும் நினைத்த விஷயங்கள் தான் அந்திமத்திலும் நினைவுக்கு வந்தாலும்



மற்றவர்கள் இப்படி நாமோச்சாரணம் பண்ணி அதனால் அவனுக்கு மற்ற நினைவுகள் அமுங்கி பகவானின் நினைப்பு ஏற்படும்படி பண்ணலாம்.

நாம் எங்கேயோ ஒரு பீச்சுக்குப் போகிறோம். அல்லது ஸினிமாவுக்குப் போகிறோம். கண்டதை நினைத்துக் கொண்டு அரட்டை அடித்துக் கொண்டுதான் போகிறோம். ஆனால், போகிற வழியில் ஏதாவது ஒரு ஸத்ஸங்கத்திலிருந்து 'ஹரஹர மகாதேவா', 'ஹரே ராம ஹரே ராம ராம ஹரே ஹரே' என்கிற மாதிரி ஒரு கோஷம் வந்தால் சட்டென்று நம்முடைய கன்னாபின்னா நினைப்புப் போய் பகவந்நாமா க்ஷண காலம் மனஸுக்குள் போய் நம்மைக் கொஞ்சம் உருக்கி விடுகிறது. நாமாவுக்கு அப்படி ஒரு சக்தி இருக்கிறது. ஆனதால் வாழ்க்கைப் போராட்டத்தின் முடிவிலே ஒரு ஜீவாத்மா உயிருக்காகப் போராடிக் கொண்டு மனஸ் நாலா திசையிலும் அலைபாய்கிறபோது அல்லது ஸ்மரணை தப்பிக் கொண்டிருக்கிறபோது பக்கத்திலே இருக்கிறவர்கள் பகவந்நாமாவை கோஷித்துக்கொண்டிருந்தால் அது அந்த ஜீவாத்மாவை அதன்மூலமான பரமாத்மாவிடம் இழுப்பதற்கு ரொம்பவும் சக்திகரமான (effective) வழியாக இருக்கும்.

- ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்


ஏன் எல்லோரும்
பாம்பே டையிங் கடையை
நோக்கி ஓடுகிறார்கள்?
ஒரு டிரவுசர்லெங்த் விலையிலே ஒரு கார் கிடைக்குமே !
ஒரு சேலை வாங்கினு, ஒரு கலர் டிவியும் கிடைக்குது!
பாம்பே டையிங்
சினி ப்ளிட்ஸ்
ஸ்டார் போட்டி
ரூ. 1கோடி
க்கும் மேல் பரிசுகள்
வெல்லுங்கள்
வெல்வதற்கு 60,000
பரிசுகளுக்கும் மேல்
விரைவீர் ! விவரங்களுக்கு உங்கள் பாம்பே டையிங் சில்லறை விற்பனையாளரை அணுகுவீர்.

அன்பளிப்பு

"ஏதுக்கு மண்டையைப் போட்டுக் குழப்பிக்கிறீங்க? இந்த டில்லியை விட்டு நியூயார்க்குக்குப் போகிறோமா, என்ன? நம்ப ஊர் மெட்ராசுக்குத்தானே போகிறோம்..." என்று ஆரம்பித்தாள் என் அருமை மனைவி கமலா.

"இல்லே கமலா... சாமான் எல்லாம் பேக் பண்ணணும். பார்சல் புக் பண்ணி அனுப்பணும்... அப்புறம் மெட்ராஸில் நம்ம வீட்டில் குடியிருப்பவரைக் காலி பண்ணச் சொல்லணும். அதில் போனது வந்ததை எல்லாம் ரிப்பேர் பண்ணணும்.... எப்படி எல்லாவற்றையும் செய்யப்போறேன் என்று தெரியவில்லை...!" என்றேன்.


"கவலையை விடுங்க... நான் என் தம்பி தொச்சுவிற்கு எழுதியிருக்கிறேன். ஒரு நடை இங்கே வந்து எல்லா வேலையையும் செய்யச் சொல்லி..." என்றாள்..

விஷயம் இதுதான். நான் டில்லியிலிருந்து சென்னை வரத் தீர்மானித்து விட்டிருந்தேன். காரணம். அரசாங்க வேலையிலிருந்து தன்னிச்சையாக ரிடயர்மெண்ட் வாங்கிக் கொண்டு விட்டேன். டில்லியில் இருபது வருஷங்களுக்கு மேலாக இருந்து விட்டதால் நிறையச் சாமான்கள் சேர்ந்து விட்டன. பத்து வருஷத்துக்கு முன்பு வாங்கின 'எலக்ட்ரிக் ஹீட்டர்' கெட்டுப்போய்விட்டது. அதைத் தூக்கி எறிந்தும் ஆயிற்று. ஆனால், அதற்குத் தரப்பட்ட ஆறுமாத காரண்டி கார்டைப் பத்திரமாக வைத்திருக்கிறேன். (வைத்திருக்கிறாள் என்று எழுதினால் தான் உண்மை. ஆனால் உண்மை எப்போதும் வெல்லும் என்று சொல்ல முடியாது. இப்படி எத்தனையோ!)

நான்தான் என்னவோ இந்திய அரசாங்கத்தையே தூண் இல்லாமல் தாங்கிக் கொண்டிருப்பது போல் எண்ணிக்கொண்டு, ரிடயர் ஆகும் தேதி வரை வேலை செய்யும்படி சொல்லிவிட்டார்கள். ("நீயோ ரிடையர் ஆகப்போறே. அதுக்கு முன்னே லீவில போய்ட்டா, ஒர்க் எல்லாம் என்ன ஆகும்?")

ஆகவே ஊருக்குப் போக ஏற்பாடுகள் செய்வது பற்றிக் கவலைப்பட்டேன். அந்தக் கவலையை ஒரே செகண்டில் கமலா போக்கடித்து விட்டாள். அவள் தான் அதை விடப் பெரிய கவலையைத் தரும் செய்தியைச் சொல்லி விட்டாளே!

"தொச்சுவை எல்லாம் ஏன் வீணாகத் தொந்தரவு செய்



யறே?'' என்றேன். அந்தச் சமயம் தபால்காரர் ஒரு கார்டைக் கொடுத்தார். தொச்சுதான் எழுதியிருந்தான். ''அன்பும் பிரியமுமுள்ள அக்கா, அத்திம்பேர் சன்னதியில்...'' என்று ஆரம்பித்து, உடனே டில்லிக்குப் புறப்பட்டு வருவதாக எழுதியிருந்தான். கீழே பின்குறிப்பு ஒன்று இருந்தது. ஆம், நிஜமாகவே 'பின்' குறிப்புதான். சுருக்கென்று தைத்தது! அதில் எழுதியிருந்தது. 'ஒத்தாசைக்கு அங்கச்சியையும் குழந்தைகளையும் அழைத்து வருகிறேன்!'

''என்னது திக்பிரமை பிடிச்சதுபோல் உட்கார்ந்துட்டீங்க!... பாவம், தொச்சு தனக்கு இருக்கிற ஆயிரம் தொல்லைகளுக்கு நடுவே, இத்தனை ஆயிரம் மைல் குளிர், வெயில் பார்க்காமல் வர்றான்... கூட அவன் பெண்டாட்டி பசங்கள் வந்தால் என்ன? அதுவே உங்கவீட்டுப் பட்டாளம் வந்தால் பூர்ண கும்பம் வெச்சு வரவேற்பீங்களே. அதெப்படித்தான் உங்க அக்கா வருஷா வருஷம் தீபாவளி சமயத்திலே தற்செயலாக' இங்கே வருகிறாளோ... அவள்பேர் மிஸஸ் சரோஜா சக்ரவர்த்திக்குப்பதில் வருஷ சக்ரவர்த்தின்னு வெச்சு இருக்கணும்..... வேண்டாம் என்றால் சொல்லிவிடுங்கள். வராதேப்பா என்று எக்ஸ்பிரஸ் தந்தி கொடுத்துடறேன்'' என்றாள்.

உடனே எக்ஸ்பிரஸ் தந்தி கொடு என்று மனசு அடிச்சுச் சொன்னாலும் வெளிப்பட்டது: ''அடி அசடே... இப்போ இங்கே குளிரா இருக்குதே... பாவம், கஷ்டப்படுவானேன்னு தான் சொன்னேன்... தொச்சு வந்தால் எனக்கு யானை பலம்'' என்றேன். (யானையைக் கட்டித் தீனி போடுகிற செலவும் ஆகும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்!)

● ● ●

''என்ன அத்திம்பேரே... இது ஒரு ஊரா?... இங்கேயும் மனுஷாள் இருப்பாளா? குளிர் ஆளை அப்படியே அமுக்குகிறது.... அக்கா... அத்திம்பேர் ஸ்வெட்டர் ஏதாவது இருந்தால் கொடு... அங்கச்சிக்கும் நல்லதாய்க் கொடு... அடியே அங்கச்சி, சூடா ஒரு கப் டீ போடு...'' என்றான் தொச்சு.

''இந்தாடா ஸ்வெட்டர்...'' என்று என்னிடமிருந்த ஒரே ஒரு புதிய ஸ்வெட்டரை என் மனைவி அவனிடம் கொடுத்தாள். கர்ண பரம்பரை!

சொல்லக் கூடாது. தொச்சு சுறுசுறுப்பாக வேலையில் இறங்கினான். சாமான்களை அட்டைப் பெட்டிகளில் போட்டுக்கட்டினான்.

சுவரில் மாட்டியிருந்த பெரிய கண்ணாடியை எடுக்கத் தொச்சு மிகவும் சிரமப்பட்டான். எவ்வளவு அடித்தும் நெம்பியும் ஆணிகள் வரவில்லை. கடைசியில் ஆணிகளை எடுத்தபோது – எடுக்கவே தேவை இல்லாதபடி ஆகிவிட்டது. காரணம், கண்ணாடி. 'இவ்வளவு தொட்டால் சிணுங்கியாக இருக்கும்' என்று அவன் எதிர்பார்க்காததால், சுத்தி பட்டதும் தன் கற்புக்குக் களங்கம் வந்து விட்டதாக எண்ணி உயிரை விட்டு விட்டது. சில நூறு துண்டுகளாக!

மரப்பெட்டிகளில் பாத்திரங்களை எல்லாம் போட்டு ஆணி அடித்தான். தொல்லை பண்ணிய அவனது வானரங்களை அவ்வப்போது முதுகில் அடித்தான்.

மரப்பெட்டி, ஆணி, அட்டைப்பெட்டி, கயிறு ஆகியவை வாங்கிய செலவு இவைகளை வாங்கி வர போய் வந்த செலவு, போன இடத்தில் 'லேட்'டாக டிபன் காபி சாப்பிட்ட செலவு என்று நிறைய பில்களைக் கொடுத்தான் தொச்சு.

நாலணாவிற்கு ஆணி வாங்கினால் அதற்கு நூறு ரூபாய் ஓவர்–ஹெட் செலவு செய்தான் தொச்சு என்றால், அவன் மனைவி அங்கச்சி சமையலறையில் 'அக்கா'விற்கு உதவுகிறேன் பேர்வழி என்று யாகம் செய்து கொண்டிருந்தாள். அதாவது அடுப்பில் பால், நெய், எண்ணெய் முதலியவைகளைப் பொங்கி வழியவிட்டுப் பாழடித்தாள். அவள் இருந்த எல்லா நாட்களும் எங்கள் வீட்டில் பொங்கல்தான். (பால் பொங்கிற்று என்று யாரும் கேட்க வேண்டிய அவசியமில்லாதபடி, ஊரெல்லாம் பால் மணம் பரப்பிவிட்டாள் அங்கச்சி.) அவள் யாகத்திற்கு நான் பல நிபாட்...



அகஸ்தியன்

செய்ய வேண்டியிருந்தது. ''அக்கா... நீங்க உக்காருங்க... நான் எல்லா வேலேயும் செஞ்சுடறேன்... அரைபே அரை கப் ஹார்லிக்ஸ் கரைச்சிக் கொடுக்கட்டுமா?'' என்று என் மனேவிக்கு அவள் உபசரித்தாள். ஏதோ தோசை மாவைக் கரைப்பதைப் போல் ஹார்லிக்ஸைக் கரைத்து ''பசங் களுக்கு அரைவாய்'' என்று சொல்லித்தன் புத்திரசிகாமணிகளுக்கும் கொடுத்தாள்.

போதாததற்கு ஊரிலிருந்து என் அருமை மாமியார் ஒரு கார்டு எழுதிவிட்டாள்.... ''உன் பசங்கள் எல்லாம் எலும்பும் தோலு மாக இருக்கிறுங்க... டில்லியில் காய்கறி, பழம், பால், நெய், வெண்ணெய் எல்லாம் கிடைக்கும்.பணத்தைப் பார்க்காமல் வாங்கிக் கொடு'' என்று எழுதியிருந்தாள்.

திடீரென்று ஐடியா வந்ததைப் போல் ஒருநாள் தொச்சு... ''அத்திம்பேரே, இவ்வளவு தூரம் வந்துட்டோம். காஷ்மீர் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேமே!'' என்றுன். ஏதோ கரோல்பாக் போய் வரு வது மாதிரி.

''ஆமான்னு... அவன்தான் எங்கே போறுன்? அவனுக்கு டயமே கிடையாது..'' என்றுள் என் மனேவி. (நன்ருக ஒத்திகை பார்த்திருக்கிருர்கள்.)

''இந்தக் குளிரிலேயா காஷ்மீர் போவார்கள்?'' என்றேன்.

''குளிரைப் பார்த்தால் முடியுமா? இனிமேல் இதற்கென்று வர முடியுமா....? பேசாமல் எல்லோருக்கும் டிக்கெட் ரிசர்வ் பண்ணுங்கள்'' என்றுள் கமலா.

'பேசாமல்' பண்ணினேன்.

காஷ்மீர் போய்விட்டு வந்த உடன் தொச்சு. ''அத்திம்பேரே, நாங்க ஊருக்குப் போகிறேம். லாரி எல்லாம் ஏற்பாடுபண்ணி இருக்கிறேன். எல்லாம் கரெக்டா லோட் பண்ணிடுவாங்க... நான் மெட்ராஸ் போய் நம்ப வீட்டைச் சரி பண்றேன். அந்த டெனன்ட் காலி பண்ணலேயே இன்னும். நம்ப லிட்டா லிட்டே சொல்லி முதலிலே அவனே வெகேட் பண்ணச் சொல் றேன்'' என்றுன்.

அவன், இருபது நாள் தான் இருந்தான் என்றுலும் இருபது வருஷம் இருந்தது போல எனக்கு அலுப்பு ஏற்பட்டது. ஆகவே ''சரி... செய்யப்பா நீ வந்ததிலே எனக்கு வேலேயே இல்லாமல் போய்ட்டுது ..' என் றேன்.

தொச்சு அண்ட் கோ கிட்டத்தட்ட ஒரு லாரிச் சாமான்களுடன் (என் செலவில் அவர்களுக்காக வாங்கிக் கொண்டவை.) ஊருக்குப் புறப்பட்டார்கள்.

''அத்திம்பேருக்கு. நம்ப டெனன்ட் பெரிய மலேமுழுங்கி மகாதேவனுக இருப் பான் போலிருக்கிறது. வீட்டைக் காலி பண்ணறதுக்குத் தகராறு பண்றுன்.... சாம, பேத, தானம், தண்டம் முறைகளே டிரை பண்ணிக் கொண்டிருக்கிறேன். ஒரு ஐநூ றுக்கு டிராஃப்ட் அனுப்புங்க... லிட்டா லிட்டே கொடுத்து, ஆளேக் கிளப்பச் சொல் றேன்'' என்று தொச்சு எழுதியிருந்தான்.

டிராஃப்ட் வாங்கி அனுப்பினேன். கண் ணுல் காணுத தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்துவது போல, நான் பார்த்தறியாத லிட்டாவிற்குத்தொச்சுவின் மூலம் காணிக்கை அனுப்பிக் கொண்டே இருந்தேன். ரென்ட் கன்ட்ரோலர், ஜப்தி, அமீனு என்று ஏதேதோ வார்த்தைகளே அவ்வப்போது போட்டு என்னேக் குழப்பி, பணத்தைக்கறந் தான்.

''வீடு காலியாகி விட்டது'' என்று ஒரு நாள் எக்ஸ்பிரஸ் தந்தி அடித்தான்.

செய்த செலவெல்லாம் இந்தக் குஷியான செய்தியில் பறந்து போயிற்று. ஆனுல் அடுத்த நாள் தொச்சுவிடமிருந்து வந்த கடி தத்தில், பழைய பல்லவி, அனுபல்லவி, சரணம் எல்லாம் இருந்தன. பணம் கேட் டிருந்தான்: வீட்டில் ஏகப்பட்ட ரிப்பேராம், அனுப்பினேன்.


ஒருவாறுக சென்னே வந்து சேர்ந்தேன். முதல் ஷாக், வீடு சமீபத்தில் இடி விழுந்து, பூகம்பத்தில் அடிபட்டு, வெள்ளத்தில் மூழ்கி எழுந்த 'வீடு' மாதிரி இருந்தது.

அடுத்த ஷாக், தொச்சு 'பேக்' செய்த பெட்டிகளில் பாதிக்கு மேல் பாதி பாதியாக வந்தன. பீங்கான் கப், பிளேட்டுகள் எல்லாம் நைஸாக, மாவாக வந்து சேர்ந் தன. (லாரி கம்பெனிக்காரர் முன்னுள் பாங்கிமலே பேபி ஜல்லி கான்ட்ராக்டராக வாவது அல்லது மாவு மிஷின் சொந்தக்கார ராகவாவது இருந்திருக்க வேண்டும்.)

இந்த இரண்டு ஷாக்கையும் தூக்கி அடித்தது மூன்றுவது ஷாக்: தொச்சு புதி தாக டி. வி. எஸ்.– 50 வாங்கியிருந்தான். அதன்மேல் 'அன்பளிப்பு: அகஸ்தியன்' என்று எழுத என் கை துடித்தது.

நாம் பதினேந்து காசு செலவழித்து வாங்கும் ஒரு தபால் கார்டை உரிய விலாசத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க தபால் இலாகாவிற்கு எவ்வளவு செலவாகிறது தெரியுமா? 42 பைசா! இதனுல் மட்டும் வருடமொன்றிற்கு முப்பத்தேழுகோடி ரூபாய் நஷ்ட மாகிறதாம்.

—தெய்வயானே.



இளமையும் அழகும்

மீ.ப.சோமு

'இளையாய்' என்று முருகனுடைய இளமையைப் பாடுகிறது கல்வித்தமிழ்! 'அழகியாய்' என்று அவனுடைய அழகைப் பாடுகிறது அழகுத் தமிழ்! தமிழ்க் கடவுள் என்று அவனை வணங்குகிறது தமிழ் கூறும் நல்லுலகம்! அந்த முருகன் கோவில் கொண்டுள்ள ஒரு திருத்தலமே வல்லக்கோட்டை!

இந்தப் பழைமையான முருகன் கோவிலை அண்மையில்தான் நான் காண நேர்ந்தது. எப்பேர்ப்பட்ட கோவில்! எத்தனை அழகான மூர்த்தி! ஆனால் இன்று அந்தக் கோவில் இருக்கிற நிலை மனத்தை வேதனைப்படுத்துகிறது.

ஸ்ரீபெரும்புதூருக்குப் பத்து கிலோ மீட்டர் தொலைவில், சிங்கப் பெருமாள் கோவிலுக்குச் செல்லுகிற பாதையிலே இருக்கிறது வல்லக் கோட்டை! அதன் பழைய பெயர் கோடைநகர்!

'கோடை நகரை மறந்தனையோ?' என்று அருணகிரிநாதரின் கனவிலே கேட்டதாகவும், அந்த விழிப்பிலே ஏற்பட்ட மன எழுச்சியில் எட்டுத் திருப்புகழ்ப் பாடல்களை அருணகிரியார் அருளினார் என்றும் வரலாறு!

கோடைநகர் முருகனுக்கு அருணகிரியார் கட்டிய திருப்புகழ் என்னும் அந்தச் சொற்கோவில் நன்னிலையில் இருக்கிறது. ஆனால் கற்கோவில் தான் இடிந்தும் சிதைந்தும் கிடக்கிறது!

வல்லக்கோட்டையை அணுகும்போதே வயல்களும் சோலைகளும், "கோடையிலே இளைப் பாற்றிக் கொள்ளப்" பசுமையான குளிர் தருக்களும் வற்றாத தண்ணீர் நிரம்பிய தாமரைக்குளமும், கண்ணை நிரப்புகின்றன! சென்னையில் கிடைக்காத சோலைக் குளிர்காற்று உள்ளத்துக்குள் புகுந்து வீசுகிறது! அந்த அழகான தாமரைக் குளத்தின் எதிரிலே முருகன் ஆலயம்! கோடை நகர் உண்மையிலேயே கோடைக்கு உரிய நகர்!

இந்த அழகான சூழலிலே அழகு மூர்த்தி முருகன் கம்பீரமாக நிற்கிறான்! கம்பீரம் என்றால்



எப்படி? அந்தச் சிலையின் உயரமே ஏழு அடி! இரு மருங்கிலும் வள்ளியும், தெய்வயானையும்! 'நான் குறிஞ்சிக் கடவுள் மட்டுமில்லை, மருதக் கடவுளாகவும் காட்சி தருவேன்!' என்று புன்முறுவல் தவழும் முகப்பொலிவோடு, தங்க வேலருக, மலையிலிருந்து இறங்கி வந்து வயல் நடுவிலே நிற்கிறான் இந்த ஏழடி எம்பெருமான்! அவனுடைய எழிலோ தனிச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

நலிந்த நிலையிலுள்ள இந்தக் கோவிலைச் சுற்றியிருக்கும் கிராமத்து மக்கள் தமிழ்ப் பண்பாட்டின் வடிவமாக, அன்பும், ஆர்வமும் பொங்குகிற மனத்தோடு, கோவிலைப் புதுப்பிக்கும் முயற்சியில் முனைந்து நிற்கிறார்கள். ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அவர்களின் திட்டப்படி இந்த வல்லக்கோட்டை முருகனின் கோவில் புதுப்பிக்கப்பட்டு, மீண்டும் இந்தக் கோவில் தனது பழைய சிறப்பை அடையுமானால், சென்னை மக்களுக்கு மட்டுமல்லாமல், தூரத்தொலைவிலிருந்து வருகிற பயணிகளுக்குமே ஒரு பக்திச் சுற்றுலா மையமாக இவ்வூர் அமையும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குரிய எல்லாத் தகுதிகளும் இயற்கையாகவே இங்கே அமைந்துள்ளன.

'வல்லக் கோட்டைக்கு வாருங்கள்' என்று ஒரே ஒரு தடவை தான் கூப்பிட வேண்டும். பிறகு அந்தச் சோலைகளும், வயல் வெளியும், தாமரைக் குளமும், வள்ளி, தெய்வயானையுடன் கூடிய அந்த ஏழடி அழகுத் திருமேனியும் மீண்டும் மீண்டும் அங்கே ஈர்த்து இழுக்கும்! அத்தனை வல்லமை பெற்ற வல்லக் கோட்டைதான் கோடை நகர், எந்தக் கோடைக்கும் நிழலும் நீரும் தருகிற கோடைநகர்! இந்தத் திருப்பணிக்குச் செல்வந்தர்கள் செய்கிற உதவியானது நிழலும் நீருமாக நிலையாக நின்று பயன் தரும்!

• • •

திருமண மண்டபங்கள் சென்னை போன்ற பெருநகரங்களில் நல்ல முதலீடாய்த் திகழ்வதாகவே

○ வல்லக்கோட்டை முருகன்



''விஷயம்'' அறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்கிறார்கள்!

நாளொன்றுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் அதற்கு மேலும் வாடகை! பல நிதி நிறுவனங்கள் பல சௌகரியங்களுக்காக இந்த முதலீட்டில் ஈடுபடுவதாகக் கேள்வி! இவற்றுக்கு நடுவிலே திருக்கோவில்களின் கலியாண மண்டபங்களும், வீட்டு வசதி வாரியம் போன்ற பொது அமைப்புக்களின் மண்டபங்களும், போட்டி போட்டுக் கொண்டு வாடகை கேட்பது, சமுதாய சேவை யாகுமா? பெரிய உணவு விடுதிகளிலே உள்ள திருமண மண்டபங்களுக்கும் பொது அமைப்புக்களுக்கும் வாடகையிலே வித்தியாசம் இல்லாவிட்டால் நடுத்தர மக்களின் நிலைமை என்ன ஆவது? பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுவது என்ற பிரச்னை, மணப் பிரச்னையில்லை, உண்மையில் பணப் பிரச்னை என்ற அளவுக்குக்கொடுமையாகியிருக்கிறது! தினந்தோறும் செய்தித் தாள்களைப் பிரித்தால் வரதட்சிணைக் கொடுமைக்கு உள்ளாகி நமது தாய்க்குலம் தவிக்கிற தவிப்பும், அநியாயமான, அக்கிரமமான மரணங்களைப்பற்றிய செய்திகளும் மனத்தைக் குத்துகின்றன! எத்தனையோ ஆர்வத்துடன் வரதட்சிணைக் கொடுமையை எதிர்த்து, மைய அரசும் மாநில அரசுகளும் இருபது அம்சத்திட்டங்களைச் செயற்படுத்திய போதிலும், மக்களிடையே, அதிலும் படித்த மக்களிடையே, போதிய ஒத்துழைப்புக் கிடைக்காவிட்டால் என்ன செய்வது? கொடுமைக்கு எதிராகக் கொடுமையான நடவடிக்கைகளை எடுப்பதா? இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பெற்றோர்கள் தவிக்கிற தவிப்புக்கு நடுவிலே, மண்டபப் பிரச்னையும் தனது மண்டபப் படியை நடத்தினால் எப்படி?

சத்திரங்கள் கட்டியும் திருமணத்துக்குரிய எல்லாவிதமான உதவிகளைச் செய்தும், அறம் வளர்த்துப் புண்ணிய உணர்வை நாட்டிலே பரப்பிய ஒரு பெரிய பாரம்பரியம் நமக்கு உண்டு! பண்பாடு என்றால் அதிலே இந்தப் புண்ணிய மரபுகளும் ஓர் பெரிய அங்கமே அல்லவா? எல்லாத் தரும மரபுகளையும் காற்றிலே பறக்க விட்டுவிட்டால், பிறகு பண்பாடு என்று நாம் பெருமையடிப்பதற்கு என்ன தான் மிஞ்சும்? சட்டங்களை மட்டும் நம்பியே மனிதகுலம் வாழ முடியுமா?

இட்டங்களின் அம்சங்களிலே வரதட்சிணைக் கொடுமையைச் சேர்த்தாயிற்று. திருமண மண்டபமும் ஒரு புதிய வரதட்சிணையாக முளைக்கும் போது, இந்தப் புதிய வரதட்சிணைக் கொடுமையையும் அதில் சேர்ப்பதா?

ஒன்று முதலில் செய்யலாம்: பெரிய கோவில்களிலும், அரசாங்கத்தின் கண்காணிப்பிலும் மேற்பார்வையிலும் இயங்குகிற பொது அமைப்புக்களிலும் திருமண மண்டபங்களுக்கு மிகவும் மலிவான வாடகைகளை நிர்ணயம் செய்யலாம். வெளியார்கள் எவ்வளவு வாடகை கேட்க வேண்டும் என்பதற்கு வரம்பைத் தீர்மானிப்பதில் பல சிக்கல்கள் உண்டு. ஆனால் பொது அமைப்புக்களிலே இந்தச் சலுகையை உடனே கொண்டு வருவது அரசாங்கத்துக்கு எளிது. அவசர ஆரம்பமாக இதைச் செய்யத் தொடங்கினாலே போதும். வெளி வாடகைகளும் இறங்க ஆரம்பித்து விடும்!

● ● ●

'சுவற்றில்', 'கோர்வை' என்ற இரண்டு வார்த்தைகளைப் பற்றி மயிலை நேயர் ராமச்சந்திரன் என்பவர் கேட்டிருக்கிறார். 'சுவற்றில்' என்று எழுதுவது பிழையே. 'சுவரில்' என்றுதான் எழுத வேண்டும்; இவ்வாறே 'கோர்வை' என்பது பிழை. 'கோவை' என்பதே சரி. இன்னொரு பிழையையும் இங்கே குறிப்பிட வேண்டும். மாட்சி, ஆட்சி, காட்சி ஆகிய சொற்கள் தமிழ்ச் சொற்களே! வடமொழி தெரியாதவர்கள் இந்தச் சொற்களை வடமொழிச் சொற்கள் என்று தவறாக நினைத்துக் கொண்டு மாக்ஷி, ஆக்ஷி, காக்ஷி என்று எழுதுகிறார்கள். மாண்பு, மாட்சி, ஆள்வது ஆட்சி.; காண்பது காட்சி!



16.2.1984 அன்று காலம் தவறிய மழை கடுமையாகக் கொட்டுகிறது. மாலை அலுவலகத்தை விட்டு மீனம்பாக்கம் திரும்பும் போது மழையின் கொடுமையால் மின்சார வண்டிசைதாப்பேட்டையை தாண்ட மறுக்கிறது. பஸ் நிற்க மனமிருந்தும் இடமில்லாமல் ஓடுகிறது. மணியோ இரவு 8.30. என்னோடு இன்னும் 5 பெண்கள். டாக்ஸி ஒன்று வந்து நின்றது. 'ஏர்போர்ட்'டுக்கு யார்



வருகிறீர்கள்?' என்ற குரல் கேட்டது. சற்றும் தாமதியாமல், நானும் என்னுடன் இருந்த மற்றவர்களும் ஏறிக்கொண்டோம். 'ஏர்போர்ட்டில்' வண்டி நின்றது. இறங்கிப் பணம் கொடுத்தோம். எங்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ''அம்மா எனக்குப் பணம் வேண்டாம். ஏதோ இந்தக் கடுமையான மழையில் என்னால் முடிந்த சிறிய உதவி, மன்னியுங்கள்!'' என்றார். எங்களுக்கு இருந்த பதற்றத்தில் அந்த நல்லவரின் பெயரைக் கூடக் கேட்க மறந்து விட்டேன். அவர் இருக்கும் திக்கிற்கு என் நமஸ்காரங்கள்.
சென்னை—61 வி. கமலம்.

பாலாவுக்கு அஞ்சலி கட்டுரையை எங்கள் குடும்பத்தார் எல்லோருமாகச் சேர்ந்து நேற்று நடந்த இறுதிச் சடங்குகளின் இடையில் படித்தோம். படிக்கப் படிக்க, ஆயாசமா, பெருமிதத்துடன் கூடிய ஆனந்தமா என்று புரியாத அளவில் கண்ணீர் வெள்ளம் பெருகியது.

ஒரு சிறு திருத்தம். கல்கியையும், டி.கே.சி.யையும் நீங்கள் குறிப்பிட்டது சரி; ஆனால் திரு. க. இருஷ்ணையரிடம் எங்கள் குடும்பத்துக்கு எவ்விதமான தொடர்பும் கிடையாது. அவர் பாலாவின் முன்னேற்றத்துக்கு உதவினார் என்று சிலர் நினைத்துக் கொண்டிருப்பது முற்றிலும் தவறு.
சென்னை—4 த. சங்கரன்.

பொள்ளாச்சி என். ஜி. எம். கல்லூரி வெள்ளிவிழாவில் நாதசுரத்தில் அபத்தமாக தேசிய கீதம் வாசித்ததாக எழுதியிருந்தீர்கள். அதைக் கண்டு வருந்தினேன். நாதசுரத்தில் தேசிய கீதத்தை இசைத்தட்டாகவே அளித்த முதல் பெருமை திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளையையே சாரும். அகில இந்திய ரேடியோவினர் அதை ஒலிபரப்பினால் மற்றையோருக்கு இது முன்மாதிரியாக இருக்கும்.
பழமார்னேரி,
சுந்தரராமன்.

இந்த வாரம் ''மாணவர் பக்கங்களில்'' சிகரெட்டைத் தாக்கி (இருட்டு



சிகரெட், எரியும் இதயங்களே) ஒரு கதையும், கவிதையும் இன்றைய இளைய தலைமுறைகளின் மனத்தைப் புரிய வைத்தது.
சாண்டில்யதாசன்,
ப. வடுகபாளையம்.

ஈராறு வருடங்களுக்கு ஒரு முறைதான் பூக்கும் என்றாலும் குறிஞ்சிமலருக்கு எவ்வளவு சிறப்புக்களோ அதுபோல நாலு வருடத்துக்கு ஒருமுறை பிறந்த தினத்தைக்கொண்டாடும் திருமதி ருக்மிணி தேவி எத்தகைய சிறப்பு வாய்ந்தவர் என்பதை அழகாக எடுத்துக் காட்டிய விதம் பாராட்டத்தக்கது.
மதுரை—1 வி.சந்திரசேகரன்

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி எந்த அளவு மோசமாய்ப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது என்பதைத் தொழிலதிபர் ஸ்ரீ



நாராயணஸ்வாமி நன்றாக விளக்கியுள்ளார். நமது அரசியல்வாதிகள் சுயவிளம்பரத்தைத் தேடிக்கொள்வதில்தான் குறியாய் இருக்கின்றனர். பொது நோக்கு என்பது அவர்களிடம் சிறிதும் இல்லை.
கல்பாக்கம், சி. பி. ராஜூ.

வேலைக்கு விண்ணப்பபாரம் 11.1.84—ல் சென்னையை விட்டுப் புறப்பட்டதாகத் தபால் முத்திரை சொல்லியது. அது கோவையில் உள்ள என் வீட்டை 23.1.84—ல் வந்தடைந்தது. விண்ணப்பம் அலுவலகத்தைச் சென்று அடையக் கடைசி நாள் 21.1.84. தபால் இலாக்காவின் தாமதத்தால் வேலைக்கான ஒரு பரீக்ஷை எழுதக் கிடைத்த சந்தர்ப்பத்தை இழந்தான் என் மகன்.
கோவை—11.
க. மாரியப்பன்.

[கடைசிக்கடிதம் பரிசு பெறுகிறது]

இப்படியும் ஓர் (இன்ப) அதிர்ச்சி



○ பிட்ஸ்பர்க் வேங்கடேஸ்வரர் ஆலயம்

அமெரிக்காவில் இந்தியர்கள்

வாஸந்தி

18

'இந்தியாவிற்குத் திரும்பும் எண்ணமில்லையா உங்களுக்கு? உங்களது வேர்களுக்குத் திரும்ப வேண்டும் என்கிற ஆதங்கம் ஏற்படுவதில்லையா?'' என்று திரு.ராமானுஜத்தைக் கேட்டேன்.

''ஆதங்கம் இருக்கத்தான் இருக்கும். அடிக்கடி இந்தியாவுக்கு வருகிறேனே? எனக்கு என்னுடைய வேலை முக்கியம். என்னுடைய வேலை தடங்கலில்லாமல் நடப்பதற்கு இங்கிருக்கும் சூழல் ரொம்ப சௌகரியமாயிருக்கிறது. ஒரு தொந்தரவும் இல்லை. நமது திறமையை உடனடியாக ரசிக்க ஒரு வாசகர் வட்டம் இருக்கிறது. இந்தியாவில் எல்லாவற்றிலும் அரசியல் புகுந்து விடுகிறது!''

''இங்கு இல்லையா?''

''நிச்சயம் இல்லை!''

''இங்கு ஏற்படக் கூடிய கலாச்சார முரண்பாடுகள் உங்களைப் பாதிப்பதில்லையா? குழந்தைகள் இருப்பவர்களுக்கு அது ஒரு பிரச்னையாகப் போகக் கூடியதில்லையா?''

''அது ஒரு கவலை தரும் விஷயம்தான். பெற்றோர் நடந்து கொள்வதையும் பொறுத்திருக்கிறது அது. எனக்குக் கல்லூரியில் படிக்கும் பெண்ணும், பிள்ளையும் இருக்கிறார்கள். பூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறோம். அமெரிக்கக் குழந்தைகளாகவே தான் வளர்த்திருக்கிறோர்கள். ஆனால் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்யாத அளவுக்கு ஒரு கட்டுப்பாடு அவர்களிடம் இருக்கிறது. செக்ஸ் விஷயத்தில் அமெரிக்க இளைஞர் உலகத்தில் கட்டுப்பாடே கிடையாது. அந்த மாதிரி என் குழந்தைகள் இருந்திருந்தால் எனக்கும் என் மனைவிக்கும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும். நல்லவேளை எங்குழந்தைகள் எங்கள் இந்தியப் பண்பைப் போற்றி வருகிறார்கள்!'' என்று ராமானுஜம் சிரித்தார்.

''வளர்ந்து வரும் எந்த சமுதாயத்திலும் முரண்பாடுகள் இல்லாமல் இருக்குமா? இந்தியாவிலேயே பழைய தலைமுறைக்கும், இந்தத் தலைமுறைக்கும் எத்தனை வித்தியாசம்! மகா ஆசாரக் குடும்பத்தில் நான் பிறந்தேன். என் தந்தை வாழ்ந்த வாழ்க்கையை நான் துளிக்கூடக் கடைப்பிடிக்கவில்லை. நேர் எதிராக இருக்கிறேன். வேறு மொழி வகுப்புப் பெண்ணை மணந்து கொண்டேன்!''

நான் சிரித்தேன்.

''ஆனால் ஆழ்வார்களை ஆராதிக்கிறீர்கள்! அவர்களது பாசுரங்களை பக்திப் பரவசத்துடன் உங்கள் சொந்தக் கவனம் போன்ற நயத்துடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறீர்கள்!''


''ஆமாம்'' என்று ராமானுஜம் நகைத்தார்.

''அதுதான் எனக்கும் எனது பாரம்பரியத்துக்கும் இடையே இருக்கும்பாலம்!''

''உங்களுக்கு அமெரிக்கா எப்படித் தோன்றுகிறது? ஐரோப்பா எப்படி இருக்கிறது?'' என்றார்.

''ஐரோப்பிய தேசங்களும் இங்கிலாந்தும் என்னை அதிகமாகக் கவர்ந்தன'' என்றேன். ''அங்கிருக்கும் பலமான கலாச்சார வேர்கள் காரணமாக இருக்க வேண்டும். அதற்கு ஒரு உலகம் தழுவிய சர்ப்புச் சக்தி இருப்பதாகத் தோன்றுகிறது. நல்ல சங்கீதத்துக்கும், ஓவியத்துக்கும், சிற்பத்துக்கும் இருக்கிற மாதிரி. அங்கு ஒரு அடக்கமான அழகு. கவிதை அழகு இருப்பது போல் பட்டது. அமெரிக்காவை நான் இன்னும் சரியாகப் பார்க்கவில்லை அபிப்பிராயம் சொல்லுமளவுக்கு. இங்கு வந்ததும் பளீரென்று கண்ணில் படுவது இதன் பிரும்மாண்டம். ''இந்தப் பிரும்மாண்டம் என்னை அசத்துகிறது.'' என்றேன்.

''எங்களுக்கு அது பழகி விட்டது. அந்த மாதிரி உணர்வும் நல்லது தான். நாம் மிகவும் சிறியவர்கள் என்கிற பிரக்ஞையுடன் இருப்போம்! Fall பருவ மரங்களைப் பார்த்தீர்களா? எத்தனை அற்புத நிறங்கள்? இன்னும் ஒரு வாரத்தில் எல்லா மரங்களும் மொட்டையாய் நிற்கும். இந்த இலையுதிர் காலம்



மனிதனுக்கு ஒரு ஞாபகப் படுத்தல்—வாழ்வு அநித்தியமானது என்பதற்கு! இந்த நிறங்கள் என்னைப் பரவசப் படுத்துவதில்லை. சோகப் படுத்துகின்றன...!''

ஒரு காப்பி ரெஸ்டாரண்டில் அவருடன் பேசிக் கொண்டிருந்த நான் எழுந்து விடைபெற்றேன், அவருடைய எளிமையைக்கண்ட நெகிழ்வுடன்.

அங்கிருந்து நடக்கும் தூரத்தில் இருந்த ஆர்ட் இன்ஸ்டிடியூட் எனப்படும் மியூஸியத்தைப் பார்க்கச் சென்றேன். ஐரோப்பாவில் மிக அருமையான மியூஸியம்களைப் பார்த்திருந்த எனக்கு இது மிகச் சாதாரணமாகப்பட்டது.



○ ஸியர்ஸ் கட்டிடம்


அங்கிருந்து நடந்தே சிகாகோவில் பிரசித்தமான புத்தகக் கடைகளுக்குச் சென்று ஆசைதீர ஒரு சுற்றுச் சுற்றி (இங்கும் நல்ல கூட்டம்) உலகத்திலேயே உயரமான ஸியர்ஸ் கட்டிடத்தைப் பார்க்கச் சென்றேன்.

ஸ்கைஸ்க்ரேப்பர்ஸ் எனப்படும் இந்த அடுக்கு மாடிக் கட்டிடங்கள் சிகாகோவில் ஏராளம். ஸியர்ஸ் கட்டிடத்தின் முன்னால் கீழே நின்று பார்க்கும் போது அதன் உச்சி கண்ணுக்கே தெரியவில்லை! 1,454 அடி உயரம். 103 மாடிகள்:. மேல் மாடிக்குப் போவதற்குக் கட்டணம் வாங்கிக் கொள்கிறார்கள். லிஃப்ட் (அமெரிக்காவில் எலிவேட்டர் என்கிறார்கள்.) ஒரு பெரிய அறை போல் இருக்கிறது. 103 என்ற பெரிய எழுத்துக்களில் மேலே செல்லச் செல்லக் கீழிருந்து மேல் வரை வெளிச்சம் ஏறிக் கொண்டு போவது நூதனமாக இருக்கிறது. முக்கால் உயரம் போவதற்குள் தலைசுற்றி விட்டது எனக்கு. 103 அடைந்து வெளித் தாழ்வாரத்துக்குவருவதற்குள் காற்றின் வேகத்தில் கட்டிடம் ஆடுவது போல் பிரமையேற்பட்டது. மனிதனின் இன்ஜினியரிங் சாதனை என்பதனைத் தவிர வேறு விதத்தில் இந்தக் கட்டிடம் என்னைக் கவரவில்லை. ஏதோ பிளேனிலிருந்து கீழேபார்ப்பது போல் கீழே காட்சியளிக்கிறது. சிகாகோவின் சுறுசுறுப்பான தெருக்களில் நிறைய ஜனநடமாட்டமும் போக்குவரத்தும் இருந்தன. நகரம் அவ்வளவு துப்புரவாகத் தெரியவில்லை. நிறைய கருப்பர்கள் இருந்தார்கள். நான் சிறிது நேரம் தெருக்களில் சுற்றி விட்டு மறுபடி யூனியன் ஸ்டேஷனுக்கு வந்து டிரெயின் பிடித்து லிபர்டிவில்லுக்குத் திரும்பினேன்.

மறுநாள் அங்கிருந்து ஆன் ஆர்பருக்குத் திரும்பிய ஒரு மணி நேரத்திற்குள் எல்லோருமாகப் பிட்ஸ்பர்க்கிற்குக் கிளம்பினோம்காரில். உயர்தரமான சாலைகளில் நூறு மைல் வேகத்தில் கார் பறப்பதே தெரியாமல் வழுக்கிக் கொண்டு போவது சுகமாக இருந்தது. ஜனசஞ்சாரமே அதிகமில்லாத காலி ஊர்கள். சித்திரத்தின் அழகாய் சுத்தமான வீடுகள். வழியைக் கோட்டை விட்டால் பல மைல்களுக்குப் பிறகே திருப்பம் கிடைக்கும். ஒன்வேஉள்ள ஹைவேக்கள். பாதி இடங்களில் இந்தப் பெரிய சாலைகள் 'அம்போ' என்று தனிமையாக நிற்கின்றன. 'கவனத்தைக் கவரப் பாதையில் எதுவும் இல்லாத காரணத்தால் சில சமயங்களில் கார் ஓட்டுபவர்களுக்குத் தூக்கம் வந்து அதனால் விபத்துக்கள்நேர்கின்றன' என்று ஒருவர் சொன்னார்.

பிட்ஸ்பர்கின் கிழக்கில் பென்ஹில்ஸ் என்னுமிடத்தில் அமெரிக்காவில் வசிக்கும் ஆறாயிரம் ஹிந்துக்களின் முயற்சியால்திருப்பதி தேவஸ்தானத்தின் அமைப்பில் வேங்கடேச்வரர் ஆலயம் எழும்பியிருக்கிறது. முத்தில் செதுக்கப்பட்டாற் போல் பரிசுத்த அழகாய் இயற்கை எழிலுடன் ஒன்றியிருப்பதில் ஒரு கம்பீரம் தெரிகிறது. கோவிலுக்குள் நவீன வசதிகளுடன், பூஜைகள் கிரமப்படி நடக்கின்றன. தலைமை அர்ச்சகர் திரு. மணவாள அய்யங்கார் மிகுந்த அன்புடன் வரவேற்றார். அவருடைய

○ நயாகரா நீர்வீழ்ச்சி



மகள் 'என்னுடைய விசிறி' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு மிகப்பரிவுடன் பேசியது மகிழ்ச்சி தந்தது. மணவாள அய்யங்காரின் மனைவியைச் சந்திக்க அவரது குவார்ட்டர்ஸுக்குச் சென்றேன். மின்சார அடுப்பும் குழாயில் சுடு நீருமாகச் சௌகர்யமான வீடு.

''இந்தியாவிலிருந்து இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வித்தியாசமாக இல்லையா? உங்களது ஆசார அனுஷ்டானத்துக்கு இங்கு இடைஞ்சலுண்டா?'' என்று கேட்டேன்.

அவருக்கு ஒரு வித்தியாசமும் தெரியவில்லையாம். ''வீட்டுக்குள்ளேயே தானே இருக்கேன். வெளியில் போவதேயில்லையே!'' என்றார். ''இந்தியாவைவிட இங்கு சௌகர்யமாக ஆசாரத்துக்குத் தடையில்லாமல் இருக்க முடிகிறது!'' என்று கீழே உட்கார்ந்தபடி தேங்காயைத் துருவிக் கொண்டே சொன்னார்.

கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்த எழிலான அரங்கம் கட்டியிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து பல கலைஞர்களை வரவழைக்கிறார்கள். இங்கு குழந்தைகளுக்காக தமிழ், கன்னடம், தெலுங்கு வகுப்பு நடத்துகிறார்கள். இந்து மதத்தைப் பற்றியும் வகுப்புகள் உண்டு.

கோவிலில் நிறைய இந்தியர்களைப் பார்த்தேன்.

தென்னிந்திய பாஷைகளிலும் ஹிந்தியிலும் வேங்டேசா சுப்ரபாதத்தை அச்சிட்டிருக்கிறார்கள். அவரவருக்கு வேண்டியதை எடுத்து சுப்ரபாதத்தின் போது படித்து விட்டுத் திருப்பி வைக்கிறார்கள். சுவாரஸ்யமாய் இருக்கிறது பார்க்க — கோவிலுக்கென்று பட்டுப் பாவாடை சட்டை அணிந்த சிறுமிகள், சுத்தமான அமெரிக்க உச்சரிப்புடன் ஆங்கிலம் பேசிக் கொண்டு... தங்கள் குழந்தைகள் முன் தங்களது இந்திய உச்சரிப்பு ஆங்கிலத்தைக் காட்ட வெட்கப்படும், வேஷ்டி பட்டுப் புடவை அணிந்த பெற்றோர்கள்.... கஷ்டப்பட்டு 'ஃபாஸ்ட்' 'லாஸ்ட்' (fast last) எனும் வார்த்தைகளை Yankee style இல் உச்சரித்தபடி வரும் பிரதட்சணங்கள்... ஒரு பக்கம் டி. வி. யில் நாமகிரிப் பேட்டை நாதசுர இசையின் வீடியோ டேப்... இன்னொரு டி. வி. யில் ரஜனீஷ் ஆசிரமத்தின் ஆங்கில ராமாயணம். செம்பட்டை மயிரும், நீலவிழிகளுமாக மந்தரை கைகேயியின் மனத்தைக் கலைக்கிறாள்.... கோவில் ரெஸ்டாரண்டில் புளியோதரையும் (பிட்ஸ்பர்கிலும் ஏகக் காரம்!) காபியும் சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்த போது குளிர் நடுக்கிற்று. ஒரு மாய சிருஷ்டியில் இருந்ததைநினைவூட்டுகிற மாதிரி...


பிட்ஸ்பர்க் அருகில் இருக்கும் ஆக்ரானில் ஒன்றுவிட்ட சகோதரனுடன் ஒரு இரவு தங்கி நயாகரா ஃபால்ஸ் பார்க்கப் பயணமானேன். The grey hound bus service என்று மிக நல்ல பஸ் ஸர்வீஸ் இருக்கிறது அங்கு. அமெரிக்காவில் எந்த பாகத்துக்கு வேண்டுமானாலும் போகலாம். கிட்டத்தட்ட ஆறு மணி நேரப் பயணம் சிரமமாகவே தெரியவில்லை. பஸ்ஸில் ஏறியதும் டிரைவர் மைக்கில் எல்லோரையும் வரவேற்று வணக்கம் தெரிவிக்கிறார். ''டிரான்ஸிஸ்டர் ரேடியோ உபயோகிப்பவர்கள் (தங்களுக்கு மட்டும் கேட்கும்படி) ஹெட்போன் அவசியம் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்கிறார். ''புகைப்பிடிப்பவர்களுக்கு என்று தனியான பகுதியில் தவிர வேறு எங்கும் புகைப்பிடிக்கக் கூடாது. பஸ்ஸின் பின் பகுதியில் கழிவறை உங்கள் சௌகரியத்துக்கு இருக்கிறது.'' ஒரு விஷயத்தை நான் வெளிநாடுகளில் மிகவும் ரசித்தேன்— அவர்களது Civic sense பொது நல உணர்வு. மற்றவர்களுக்குத் தொந்தரவாகக் கூடிய எந்த சத்தத்தையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. நமது தேசத்தில் இப்படி ஒரு சட்டம் வந்தால் எத்தனை நன்றாயிருக்கும்! காரணமே இல்லாமல், விவஸ்தையில்லாமல் அலறும் ஒலி பெருக்கிகளின் ஆபாச அநாகரீகத்தை வேறு எப்படித் தடுக்க முடியும்? புகைப்பதிலும் நாகரீகம்

இந்தியர்களது ஐக்யூ

டாக்டர் ஸ்மித் செளடியன்ட் நோபல் பரிசு பெற்றவர். அவர் இந்தியர்களது கூர் அறிவு மற்றவர்களைக் காட்டிலும் மிகச் சிறந்தது என குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கர்களுடையதை விடவும் நுண்ணறிவு மிக்கவர்கள் இந்தியர்கள். ஆனால் ஆய்வு செய்து தங்களது திறமைகளை வெளிக்காட்ட இந்தியாவில் இடமில்லை எனக் குறைப்படுகிறார். பெரும்பாலும் அறிவாளிகள், விஞ்ஞானிகள் அதனால் தான் அயல்நாட்டை நாடுகின்றனர்.

—வ. பொன்னம்பலம்.

ஆதாரம்: புகாம்பமஷன் ஸக்ஸஸ்.



இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!

கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது.
உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!





இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.

Godrej
பவுடர் ஹேர்-டை கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

தெரிகிறது இங்கு. பஸ்ஸில் தனிப் பகுதிகள், ரயிலில் தனிப் பெட்டிகள். எல்லா இடத்திலும் எல்லோரும் புகைக்க முடியாது.

நயாகரா நீர் வீழ்ச்சியைப் பார்க்க அதற்கு வெகு அருகில் இருக்கும் பஃபெல்லோவுக்குச் சென்று இறங்கியதும் அங்கிருக்கும் என் ஒன்றுவிட்ட சகோதரி சந்திரலேகா பெரிய ஆரவாரத்துடன் வரவேற்றாள்.

பஃபெல்லோவில் காலை வைத்ததுமே எக்கச்சக்கமாய்க் குளிர்ந்து.

சதா சிரிக்கச் சிரிக்கப் பேசும் சந்திரலேகா படு சுவாரஸ்யமான ஆள். சரியான அமெரிக்கனைப்போல் பாண்ட்டையும் ஷர்ட்டையும் போட்டுக் கொண்டு அசல் தஞ்சாவூர் தமிழில் 'விட்' அடிப்பது தமாஷாக இருக்கும். "நாளைக்கு நயாகரா பார்க்கப் போகும் போது நாசமாப் போற மழை பிடிக்காம இருக்கணுமே" என்று கவலைப்பட்டாள்.

மழை நன்றாகப் பிடித்து விட்டது. அடாது மழை பெய்தாலும் விடாது நயாகராவைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நான் இருந்தேன். மறு நாளைக்கே நான் ஆன் ஆர்பருக்குத் திரும்ப வேண்டியிருந்தது.

கனடாவின் எல்லையிலிருந்து நீர்வீழ்ச்சியைப் பார்ப்பது அதிக சுவாரஸ்யத்துடன் இருக்கும் என்ற காரணத்தால் அங்குசெல்ல விசா வாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. சாதாரணமாக விசா கிடைப்பது கஷ்டமாம். என்னுடைய பாஸ்போர்ட்டில் ஃப்ரெஞ்ச் விசா இருந்ததும் நான் அந்த அரசாங்க விருந்தினராகச் சென்ற விவரமும் கைகொடுத்தன.

அரை மணி நேரத்தில் விசா ஆபீஸில் விசா கிடைத்து விட்டது.

"நீங்கள் மிக நன்றாக ஆங்கிலம் பேசுகிறீர்கள்!" என்ற பாராட்டுடன்!

நயாகரா நீர்வீழ்ச்சியின் அற்புத அழகை நல்லமழையில், நடுக்கும் குளிரில் பார்க்க நேர்ந்தது என்னுடைய துரதிர்ஷ்டம். குளிர் தாங்க முடியாததில் சரியாக ரசிக்க முடியவில்லை. இரவில் நல்ல வேளையாக மழை நின்று மேகம் விலகிற்று. நீர்வீழ்ச்சியின்மேல் அடிக்கப்படும் கலர் லைட்டுக்கள் மாயாஜாலம் செய்தன. மறக்க முடியாத காட்சி அது.

என்னைப் பிறகு சந்தித்த உறவினர்கள் எல்லாம் 'நயாகரா பார்த்தியா? அற்புதமாக இல்லே?' என்று துளைத்தெடுத்து விட்டார்கள்.

கஞ்சன் ஜங்கா மலைச்சிகரத்தைப் பார்த்த போது எனக்கேற்பட்ட பரவசம் (தெய்வ தரிசனம் ஆனாற் போல்!) நாயகராவைப் பார்த்த போது ஏற்படவில்லை என்று சொன்னால் அவர்கள் ஏமாற்றமடைவார்கள் என்கிற பயத்தில், 'ஆமாம் மகா அற்புதம்!' என்றேன்.

ஆன் ஆர்பருக்குத்திரும்பியதும் தெற்கில் டல்லாஸிலும் ஹூஸ்டனிலும் இருக்கும் திரு. சங்கர்ரமணியையும், டாக்டர் உதயமூர்த்தியையும் போன் மூலம் தொடர்பு கொண்டேன். இருவரும் மிக்கப் பிரியத்துடன் 'டல்லாஸுக்கு வாருங்களேன்' என்றார்கள்.

"நீங்கள் அமெரிக்காவுக்கு வந்து விட்டு நாங்கள் உங்களைப் பார்க்காமல் இருப்பதா?" என்றார் திரு. உதயமூர்த்தி அன்புடன். நான் தயங்கினேன். எனக்கு சமயமிருக்கவில்லை. ஆன் ஆர்பரிலிருந்து டல்லாஸ் ரொம்ப தூரம். அமெரிக்காவில் பயணம் செய்வது மிகச் செலவாகும் விஷயம். நியூயார்க் வேறு போக வேண்டியிருந்தது.

என் தயக்கத்தைப் புரிந்து கொண்டுவிட்டார் உளவியல் நிபுணர் உதயமூர்த்தி.

"உங்களை நாங்கள் பார்த்தே ஆகவேண்டும். உங்களுக்கு நாங்கள் டல்லாஸுக்கு வர டிக்கெட் அனுப்புகிறோம் வந்து சேருங்கள்" என்று போன் செய்தார்.

அவர்களது அன்பைக் கண்டு நான் நெகிழ்ந்து உணர்ச்சிவசப்பட்டுப் போனேன்!

(தொடரும்)



இதைப் படித்து வைத்துக் கொள்ளுங்கள்

(சென்னை பட்டதாரிகளின் தொகுதியில் இரண்டு பேர்களைத் தேர்ந்தெடுக்க மார்ச் 18-ல் தேர்தல் நடைபெறுகிறது. 22 பேர்கள் போட்டி யிடுகிறார்கள். சிலரைப்பற்றி...)

ஹெச். வி. ஹண்டே: சென்ற முறை பட்டதாரித் தொகுதியில் சுமார் 45,000 வாக்காளர்களே



வரதராஜன்

இருந்தனர். இத்தடவை 85,000 ஆக உயர்ந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் ஹண்டே என்று சொல்லலாம். கடந்த மூன்று மாதங்களாகவே சுமார் அரை டஜன் பேர்கள் ஹண்டேக்காக இந்தத் தேர்தல் வேலையில் இறங்கியுள்ளார்கள். சென்ற முறை வாக்காளர்களாக இல்லாத பட்டதாரிகளைத் தேடிச்



ஹெச். வி. ஹண்டே

சென்று கையில் மனுவைக் கொடுத்து வாக்காளராக்கி உள்ளார் ஹண்டே. சக மந்திரிகளும், அ. தி. மு. க. தலைவர்களும் மும்முரமாக இவருடைய வெற்றிக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். படித்த மக்கள் மத்தியிலும் அ. தி. மு. க. வுக்கு ஆதரவு இருக்கிறது என்பதை நிரூபிப்பதற்காக ஹண்டேயை இந்தத் தொகுதியில் நிறுத்தியிருக்கிறாராம் எம். ஜி. ஆர்.

டபிள்யூ. எம். வரதராஜன்: எல்லோரும் வாயாலேயே முற்போக்குக் கருத்துக்களை அள்ளி வீசி விடுவார்கள். செயலிலும் காட்டியுள்ளார் வரதராஜன். முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த இவர் விவாகரத்து செய்து கொண்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்ணை மணந்து கொண்டிருக்கிறார். கிரின்லேஸ் வங்கியின் ஊழியர் தலைவரான வரத



கணேசன்

ராஜன், தொழிற்சங்கப் பணிக்காக வேலையை விட்டு விட்டவர். வேலையை விட்டபிறகே கிரின்லேஸ் வங்கியின் தலைவராகப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசும் வரதராஜன், இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். 1968-லிருந்தே கதர் அணிந்து வரும் இவர் ஒரு காலத்தில் ம. பொ. சி. யின் உதவியாளராகப் பணியாற்றியவர்.

பட்டதாரி தொகுதியைப் பற்றியும் தேர்தல் முறை பற்றியும்

- சமுதாயத்தில், முக்கியமான துறைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மேல்சபையில் பதவி வகிக்க வேண்டும் என்ற விதிமுறைகள் அரசியல் நிர்ணயச் சட்டத்திலேயே இருக்கின்றன.

- அரசியல்வாதிகள் இன்று இந்தப் பட்டதாரித்தொகுதியில் போட்டியிடலாம். இது கூடாது என்பதற்காக உயர்நீதி மன்றத்தில் ஒருவர் வழக்குப் போட்டிருக்கிறாராம்.

- இந்தத் தேர்தலில் வோட்டு போடும் முறையும் எண்ணிக்கை முறைகளும் சற்று வித்தியாசமானவை. ஒற்றை மாற்று வோட்டு (Single Transferable Vot·)) முறை பயன்படுத்தப் படுகிறது. தனக்குப் பிடித்தவர்களை வரிசையாக ஓட்டுச் சீட்டில் குறிப்பிட வாக்காளருக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இரண்டே வேட்பாளர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுவதால், தனக்குப் பிடித்த இரண்டு பேர்களைக் குறிப்பிட்டால் போதும். எண்ணிக்கையின் போது குறைந்த பட்ச முதல் ஓட்டைப் பெற்றவர்கள் வரிசையாக ஒதுக்கப்படுவார்கள். ஆனால் ஒவ்வொருவருக்கும் போடப்பட்ட இரண்டாவது வாக்கும், வெற்றிப்பாதைக்கு வழிவகுக்கும். உதாரணமாக, 'ஏ' என்பவர் 10 முதல் ஓட்டுக்களும், 'பி' என்

நாராயணராவ்: பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர். லயன்ஸ் கிளப்பின் தென் சென்னை மாவட்டத் தலைவராகப் பணியாற்றி சிறந்த தலைவர் என்று விருது பெற்றுள்ளார். தாம்பரத்திலுள்ள தேசிய உயர்நிலைப்பள்ளியின் நிர்வாகக் கமிட்டியின் செயலாளராகக்



○ டி. எஸ். சந்தானம்

கடந்த ஆறு வருடங்களாக இருந்து பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்தியுள்ளார். சில வருடங்களுக்கு முன்பு வரை வேறு எங்கேயும் இடம் இல்லாவிட்டால் தேசிய உயர்நிலைப்பள்ளியில் சேருவார்களாம். இப்போது நிலைமை தலைகீழாகமாறி விட்டதாம். அரசியலில் சேவை மனப்பான்மையுடன் இறங்கியிருப்பதாகச் சொல்லும் இவர் தாம்பரம் பகுதியில் மலையில் கல்லுடைக்கும் தொழிற்சாலை ஒன்று நடத்தி வருகிறார்.

டி. என். குமாரசாமி: பல்கலைக் கழகப் பதிவாளராக இருந்து சமீபத்தில் தாமாகவே ஓய்வு பெற்றிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு வரை, பல்கலைக் கழக சிமெண்ட் விவகாரத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டவர். இவர் வேட்பாளர் மனுவைத் தாக்கல் செய்த போது பல கல்



○ நாராயணராவ்

லூரி மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று இவருக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

ஆர். கணேசன்: தி. மு. க. வட்டாரத்தில் பலகணேசன்கள் இருப்பதால் இந்த கணேசனை 'மிசா' கணேசன் என்றால்தான் பலருக்குத் தெரியும்; நெருக்கடி நிலை காலத்தில் 1 வருடம் ஏழு நாட்கள் சிறையில் இருந்த வழக்கறிஞர். சிறையில் முதல் மூன்று மாதத்தில் இவர்மீது உபயோகிக்கப்பட்ட அடக்குமுறையால் சற்றும்மனம் தளராமல் கட்சிக்கு விசுவாசமாக இருந்திருக்கிறார். அந்த ஒரு வருட காலத்தில் ஒரு முறை கூட பரோலில் வெளியே வந்தது கிடையாதாம்.

டி. எஸ். சந்தானம்: "ராஜாஜியிடம் அரசியல் பள்ளியில் பயின்றவன்" என்று பெருமையாகக் கூறிக் கொள்ளும் சந்தானம் ஒரு அச்சக அதிபர். "பல முக்கியமான பிரச்சினைகளை, கட்சி நலன் பாராமல் நாட்டு நன்மையையே மனத்தில் இருத்திப்பேச, என்னைப் போன்று ஒரு



○ டி. என். குமாரசாமி

பாரபட்சமற்ற மனிதர் மேல்சபையில் தேவை" என்கிறார் சந்தானம். சுதந்திராக் கட்சியிலும் பின்னால், ஜனதாக் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளராகவும் பணியாற்றியவர். "ராஜாஜி வோட்டுக்கள்" பிரிந்துவிடக் கூடாது என்பதற்காக இவர் வாபஸ் பெறுமாறு வற்புறுத்தப்பட்டாராம்!

பவர் 9 முதல் ஓட்டுக்களும், 'சி' என்பவர் 8 முதல் ஓட்டுக்களும் 'டி' என்பவர் 5 முதல் ஓட்டுக்களும் வாங்கியுள்ளார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஏ, பி, சி, ஆகிய மூவருக்கும் முதல் ஓட்டைப் போட்டவர்கள் 'டி'—க்கு இரண்டாவது ஓட்டைப் போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஆக, டி., 27 இரண்டாவது ஓட்டுக்கள் பெறுவார். 'டி' பெற்ற முதல் ஓட்டான ஐந்துடன், இந்த 27 இரண்டாவது ஓட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் (என்ன! தலை சுற்றுகிறதா?) ஒரு சின்ன மாறுதலுடன். அதாவது, எண்ணப்படும் ஒவ்வொரு இரண்டாவது ஓட்டுக்கும், முதல் ஓட்டைவிட மதிப்பு சற்றுக் குறைவு தான். (இது எந்த விதத்தில் குறையும் என்று பலரை விசாரித்த போது தெளிவான பதில் கிடைக்கவில்லை.)

● இந்தப் பட்டதாரி தொகுதியில், 1936—ல் சென்னை ராஜதானியில், மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ராஜாஜி.

● இந்த தொகுதியில் 'கல்வியாளர்' ஒருவர்தான் போட்டியிட வேண்டுமா? அப்படி அவசியமில்லை. எந்தத் துறையில் இருக்கிறாரோ அதில் சிறப்புப் பெற்றவராக இருந்தால்போதும். பட்டதாரியாக இருக்க வேண்டிய அவசியம் கூட இல்லை! வாக்காளர்தாம் பட்டதாரிகளாய் இருந்தாக வேண்டும்!

—நமது நிருபர்

சுய தரிசனம்

ம. ஸ்ரீதரன்



வார்த்தைகள் தடுமாறின. நாக்குத் இடல் 'தாண்ட வழி தேடின.

முடியுமா? தெளிவாக நான் என்ன நினைக்கிறேன் என்பதை இந்தப் புத்தம்புதியவளுக்கு எடுத்துச் சொல்ல முடியுமா? எனக்கே மையம் மட்டும் தான் தெளிவு! எப்படி எடுத்துக் கொள்வாள்? எனக்குள் நான் தடுமாறினேன். ''சாதிக்க விரும்பினால் எங்கேயாவது ஆரம்பி'' என்று எதிலேயோ படித்தது ஞாபகம் வந்தது. துவங்கினேன்.

''இதோ பார் சனு! நீ கோயிலுக்குப் போயிட்டு வா, நான் வேண்டாங்கல. அது உன்னோட சொந்த விஷயம். ஆனால் நான் வராமல் இருக்க ஆசைப்படறதும் இது போலத்தான்னு புரிஞ்சிக்கயேன்'' அப்பாடி! விஷயத்துக்கு வராமலேயே நழுவி விட்டேன். வேண்டாம். என் கருத்தை அவளுள் திணிக்க வேண்டாம். முடிந்தால் யோசிக்கட்டும்.

கோயிலுக்குப் போவதற்காகக் கையில் வைத்திருந்த பையைக் கீழே வைத்தாள். உள்ளிருந்த தேங்காய் தரையில் பட்டு 'நச்' 'என்றது.

''உங்க கருத்தைச் சொல்லுங்க. அதை ஏத்துக்கறதும் ஏத்துக்காததும் என்னோட சொந்தப் பிரச்னை. உங்களுக்குச் சொல்லலாம்னு தோணினா சொல்லலாம். என் புது வாழ்க்கைத் துணையின் யோசனைகளை — ஐடியாக்களை — தெரிஞ்சுக்க விரும்பறேன்.'' அழகாக முன்னாலேயே யோசித்து வைத்தது போல் பேசினாள். எனக்கு சந்தோஷமாக இருந்தது. பிடித்த பூனைக்கு மூன்றே கால் என்று இல்லாமல் என்னையும் புரிந்து கொள்ள முன் வருகிறாளே!

''சனு! நீ இப்படிக் கேட்டதில எனக்கு... ஒரு பரிமாணமில்லாத சந்தோஷம்.'' வேண்டுமென்றே என் வார்த்தைப் பிரயோகத்தை அவள் எப்படி மதிக்கிறாள் என்று அறிந்து கொள்ள நிறுத்தினேன்.

முதுகு வளையாமல், முட்டியை மடக்கிக் கீழே அமர்ந்து கையில் பையை எடுத்துக் கொண்டு மெல்ல நடந்து வந்து எதிர் நாற்காலியில் அமர்ந்தாள்.

''மனசில இருக்கிறதை நல்லா எக்ஸ்பிரஸ் பண்ணுங்க'' என்றாள்.

நான் மெல்லச் சிரித்தேன். தொடர்ந்தேன்.

''ம்... நீ கோயிலுக்கு எதுக்காகப் போறே? கோயிலுக்குப் போகணும்ங்கற ஆசையினால மட்டுமா? அப்படின்னா ஆசை ஏன் வந்தது?''

''ஒரு நிமிடம், எல்லாத்தையும் மறந்துட்டு, எதிரே இருக்கிறது தெய்வமா? கல்லா? பூசாரியா? கற்பூர தீபமா? குத்து விளக்கான்னு எதுவும் தோணாமல் ,இருக்கிறதுகள்ள இல்லாததைப் பாக்கறதுக்கு. அல்லது பார்க்க முயற்சி செய்யறதுக்கு.'' மீண்டும் எனக்குள் அதே சந்தேகம் வந்தது. இவள் முதலிலேயே யோசித்து...

அடுத்த கேள்வியை வேண்டுமென்றே என் கருத்துக் களுக்கு ஒத்துப் போவது போல்



அவளே இழுக்கத் தூண்டிலாகப் பயன்படுத்தினேன். மாட்டுமா?

''எதற்காக அந்த நிலைமை. சிலதை மறக்கறதுக்காகவா?''

யோசித்தான். மாட்டுமா?

''ம். அப்படியும் வெச்சிக்கலாம்.''மாட்டிக் கொண்டது.

''சிலதுன்னு...?''

''சில குறைபாடுகள்; இழிவுகள்; பிரச்சினைகள்.''

''ஹேய்! என்ன பைத்... ஸாரி! என்ன இது? பிரச்சினை, குறைபாடு, இழிவு எல்லாத்தையும் மறந்துட்டா?... தீர்ந்திடுமா? கோயிலுக்குப் போய் மறந்துட்டா வீட்டுக்கு வந்து தானே ஆகணும்?''

''எக்ஸாக்ட்லி! ஆனா நான் ஒரே ஒரு கேள்வி கேக்கணும்...'' சொல்லிக்கொண்டே எழுந்து வந்து என்னருகில் அமர்ந்தான்.



''ஏங்க, உங்களால எல்லாப் பிரச்சினையையும் தீர்த்திட முடியுமா?''

''அஃப் கோர்ஸ் நாட்.! ஆனால் அடுத்த முறை பிரச்சினை வராமல் இருக்க, குறைந்த பட்சம் அதை அனுபவித்துப் புரிஞ்சிப்பேன். இந்த மாதிரி மறக்க முயற்சி பண்ண மாட்டேன்.'' மனம் துள்ளியது. என்ன சொல்லப் போகிறான்?

''பிரச்சினையை மறக்கறது தீர்வு இல்லேங்கறீங்க? ம்? தீர்வு என்றால் என்ன? ஒன்றை முற்றுப் புள்ளியோட நிறுத்தறது தான் தீர்வா? அதுக்குன்னு சில துணை விளைவுகள் இருக்குல்ல? அதையும் முழுக்கத் தீர்க்கணுமே?''

என் புருவம் நெறிக்கப்பட்டது.

''எல்லாத் தீர்வுமே இன்னொண்ணோட முந்தைய அத்தியாயம் தான். முடிவில்லாத தொடர்கதை.'' நாடகத்துக்குப் பேர் வைக்கலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

''ஸோ, அந்த அத்தியாயத்துக்கு முற்றுப் புள்ளி வெச்சாப் போறுமே!''

''போதும்.''

''அப்படின்னா மறக்கிறது தீர்வாயிடுதே!''

''எப்படி? மோர் ஓவர், வேறே தீர்வில்லையா?''

''இல்லாத போது?''

''இல்லேன்னு எப்படித் தெரியும்? எதையும் முயற்சி செய்யாமலேயே முடிவுக்கு வந்துடற சில ஆட்களுக்குத் தான் மறக்கிறது தீர்வாக முடியும்.'' பேச்சில் சூடு பிடித்தது. இரண்டு பேருக்குமே!

''முயற்சியின் தரம் ஆளுக்கு ஆள் மாறுபட்டு, முயற்சியே இல்லாத ஒருத்தனில் கொண்டு முடியும் போது, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தேவைப்படும் முயற்சியின் அளவும், பிரச்சினைக்குப் பிரச்சினை மாறுபட்டுக் கடைசியில் தீர்வில்லாத பிரச்சினையில் முடியலாமில்லையா?''

''புரியலே.''

''முயற்சியே இல்லாத மனிதனிருக்கும் போது, தீர்வே இல்லாத பிரச்னை ஏன் இருக்கக் கூடாது?''

· என்னைப் பிடித்து விட்டான். நகர முடியவில்லை. அந்தச் சாலையின் முடிவில் மாட்டிக்கொண்டேன். திரும்பிப் போக முடியாது. இடறென்று இளைப் பாதையைக் கண்டுபிடித்தேன்!

''ஓ. கே! இருக்கட்டும், ஆனா, சம்பாஷணையின் ஆரம்பம் வேறென்னு நினைக்கிறேன். நௌ கம் ஸ்ட்ரெய்ட் டு த பாய்ண்ட்! இந்தப் பிரச்னைகளை — நீ முடிவோ, தீர்வோ இல்லாத பிரச்னைகளை மறக்கக் கோயிலுக்குத்தான் போகணுமா? இங்கே இருக்கிற நிலையில, இருக்கறதுல இல்லாததைப் பார்க்க முடியுமா, முடியாதா?''

''தேர் யுவார்! எல்லா எடத்துலயும் முடியும். நான் சொன்னேனே அந்த நிலைமை மனசிலேயே அடியில இருக்கு. சில இடத்துல தான் அதை மேலே கொண்டு வர என்னால் முடியும். கோயிலும் ஒன்று. அங்கே எல்லாம் ஏறி வர ஏணி இருக்கிறதா உணர்றேன்.''

எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. ஆனால் என் மனம் இக்கருத்தைச் சுத்தமாக ஒத்துக் கொள்ளவில்லை. அருமையான ஓட்டைகள் இருக்கின்றன. ஆனால் கண் தெரியவில்லை — கண்ணுக்குத் தெரியவில்லை.

''சனு! இதை வெற்றியாய் நெனைக்கறியா?''

''பெரிய தோல்வியா கருதறேன். வாள் வீச்சில தப்புப் பண்ணிட்டேன். எதிராளி கையில வாள் இருக்கற வரைக்கும்தான் சண்டை போட முடியும். இப்ப வெற்றியும் பெற முடியாது. தோல்வியும் நிச்சயிக்கப்படலே.''

''ஓ. கே! நீ கோயிலுக்குப் போயிட்டு வா!''

''வர்றேங்க'' செருப்பில் காலை நுழைத்துக் கொண்டே சொல்லிவிட்டுப் படியிறங்கிப் போனாள்.

''சனு! பையை மறந்துட்டே!''

''ஓ! தேங்க்யூ!'' அவள் கண்களைக் கவனித்தேன். முதலில் ஒரு உணர்ச்சியும் தெரியவில்லை. பின்பு,' ஒரு எதிர்பார்ப்பும், ஏக்கமும் தெரிந்தது. அல்லது, தெரிந்தது போலிருந்தது.

பால்கனியில் நின்று கொண்டேன். மனம் ஒரு மாதிரி இருந்தது. இப்படி எதற்கெடுத்தாலும் விவாதம் பண்ணணுமா? அப்பத்தான் புரிஞ்சிக்க முடியுமா? பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ''ரீடர்ஸ் டைஜஸ்ட்'' படிக்க ஆரம்பித்த போது கன்னத்து சொரசொரப்பை உணர்ந்தேன். செல்ஃப் ஷேவிங் செய்து கொள்ள வெறுப்பாய் இருந்ததாலும், கொஞ்சம் காலாற நடந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றியதாலும் வெளியே கிளம்பினேன்.

கதவைப் பூட்டும் போது சாவியை எங்கே வைப்பது என்று தெரியவில்லை. பக்கத்து வீட்டில் கொடுக்கலாமா? அது தெரியாமல் அவள் வந்து காத்துக் கொண்டிருந்தால்? வேறு வழியில்லாததால்? பக்கத்து வீட்டை அணுகினேன். வாசலில் நிரஞ்சனா — சனு — நின்றிருந்தாள்.



''என்ன சனு?''

''ஒன்னுமில்ல, மாமியும் வர்றேன்னுங்க...''

''சரி, நான் பார்பர் ஷாப் வரைக்கும் போய் ஷேவ் பண்ணிட்டு வந்துடறேன்.''

''சரி, போயிட்டுச் சீக்கிரம் வந்திடுங்க.''

மெல்ல நடந்தேன். மாலை என்பதே சுகம். எல்லாமே சுகமாக ஆகாவிட்டாலும், சுகமெல்லாம் சுகமாகவே தெரிகின்றது. அது போதும்.

''அப்போலோ ஹேர் டிரஸ்ஸர்ஸ்'' ஒரு சின்ன முகப்பில் ஆரம்பித்து, ஒருகனச் செவ்வகத்தில் அமைந்திருக்கும். அதன் முதலாளியை எனக்குத் தெரியும். பேர்: நீலகண்டன், சடை முடியோன்!

தூரத்திலிருந்தே நீலக்கண்ணாடியமைத்த பக்கத் தடுப்புக்களும், ஸ்பிரிங் கதவும் தெரிந்தது. கதவில் ஒரு பெண் குளித்துக்கொண்டிருந்தாள். ஏன் இந்த ரஸனை? கலையா? சத்தியமாய் அந்த போஸிலிருந்து எனக்குக் கலை சம்பந்தமாக எதுவும் புலப்படவில்லை. அனாவசிய கைதூக்கல்!

உள்ளே போனேன். அங்கிருந்த இரண்டு சீட்டுகளிலும் இரண்டு பேர் அமர்ந்திருக்க, மூன்றாவதாய் ஒரு இருபது வயதுப் பையனும் நான்காவதாக நானும் பெஞ்சில் அமர்ந்தோம்.

முடி வெட்டிக்கொள்ள இங்கே சிலமுறை வந்திருக்கிறேன். ஆனால் இப்போதுதான் 'இவைகளை'ச் சரியாகக் கவனித்தேன். சுவர் முழுக்க காலண்டர்கள், இடைவெளியில்லாமல் எவ்வளவு? எப்படிச் சேர்ந்திருக்கும்? 'காமாட்சி வெல்டிங் ஒர்க்ஸ்'ஸின் காலண்டரில் ஒரு பெண் பருத்திப் புடவையை — வெள்ளை — நனைத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். இப்படியே நிறைய, படுத்துக் கொண்டு, நிமிர்ந்து கொண்டு, கையைத் தூக்கிக் கொண்டு, திரும்பிக் கொண்டு.... எனக்கு அருவருப்பாய் இருந்தது. கொஞ்சம் கோபம் வந்தது. நீலகண்டனோ, தான் ஷேவ் செய்பவருக்கு, தன் முகத்தை 'மாடல்' ஆக்கிக் கொண்டு கர்ம சிரத்தையாய் இருந்தார்.

மீண்டும் பார்வை அலைந்தது.

எங்குமே இதென்ன சோதனை. சட்! கண்ணாடிகள் இருப்பதையே பிரதிபலித்தன. பார்வை மீண்டும் மீண்டும் ஓடியது. ஒரு வெளிநாட்டு 'போஸ்டரி'ல் ஒரு பெண் பைக்கில் ஷூ கிளாஸ்களும், ஹெட்லைட்டும் மட்டும் மறைக்க அழுத்திக் கொண்டு கண்ணடித்தாள். எனக்குச் சற்று வியர்த்தது.

ஒரு ஆள் எழுந்து கொள்ள, அந்த வாலிபன் போய் அமர்ந்தான்.

பேப்பரில், ''நடிகை ராதா தற்கொலை!'' என்று போட்டு, ''இந்தக் காட்சி அண்மையில்...'' என்று சினிமா பகுதி வெளியிட்டிருந்தது. நாட்டு நடப்பு இன்னும் ஆபாசமாய்த் தோன்றியது.

அடுத்த ஆளும் எழுந்ததால், நான்போய் நீலகண்டனிடம் அமர்ந்தேன். சின்ன

வாரம் ஒரு புத்தகம்



தமிழகம் தந்த பாகவதம்

ஸ்ரீ நைமிசாரண்யத்தில் சூதமகரிஷியைப் பார்த்து முனிவர்கள் 'நூல்களின் சாரத்தைத் திரட்டி எங்களுக்கு நீர் கூற வேண்டும்' என்று கூறுகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு அ.லெ. நடராஜன் அவர்களும் பாகவத சாரத்தைத்திரட்டி அளித்திருக்கிறார்.

''பாகவதம் பாண்டிய நாட்டில் வைகைக் கரையில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூலாகும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்'' என்று தமது முகவுரையில் குறிப்பிடுகிறார் ஆசிரியர். இந்த ஆராய்ச்சியாளரின் கருத்து உண்மையாக இருந்தால் (?) தமிழ் மக்களாகிய நாம் இவ்வளவு அருமையான தொகுநூலை வடமொழிக்குத் தந்தோமென்று பெருமைப்படலாம்!

நூல் அழகாக அச்சிடப்பட்டுப் படிக்க எளிதாக இருப்பதுடன் நன்றாகப் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் நிறைய அச்சுப் பிழைகள் இருக்கின்றன. தவிர்த்திருக்கலாம்.

தக்ஷ பிரஜாபதியின் கதையை ஆசிரியர் கூறியிருக்கும் முறை மிக அழகாகவும், எளிதில் புரியும் படியும் இருக்கிறது. துருவன், அஜாமிளன், பிருது சக்கரவர்த்தி இவர்களின் கதையும் ஜடபரதரின் உள்ளத்தை உருக்கும் கதையும் சிறுவர்களும் படிக்கும்படியாகக் கூறப்பட்டுள்ளன. உபதேசக் கருத்துக்களை அதிகமாக வளர்த்தாமல் அதேசமயம் விட்டு விடாமல் கூறிக்கொண்டு போகிறார் ஆசிரியர்.

மறுபதிப்பு வெளியிடும் போது பெயர்க் குறிப்பு அகராதியொன்று சேர்த்தால் மிகவும் உபயோகமாக இருக்கும். யார் எவர் என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

நாவலந் தீவில் ஒன்பது நாடுகள் இருக்கின்றன என்று சுகர் பரீக்ஷித்து மகாராஜனிடம் கூறுகிறார். அவை மங்கோலியா மஞ்சூரியா, ருஷ்யா, திபெத், சீனம், அரேபியா, பாரசீகம், துருக்கி முதலிய நாடுகள் என்ற முடிவுக்கு ஆசிரியர் வந்தது எப்படி என்று முகவுரையில் விளக்கியிருக்கலாம்.

சுகப் பிரும்மரிஷி கூறியது மனத்துக்கு மிகவும் ஆறுதல் அளிக்கிறது:

''பாரத நாட்டில் மனிதராகப் பிறந்தவர்கள் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள். அவர்களிடம் திருமால் அருள் பாலிக்கிறார். மானிட தேகம் பெற்றவர்களால் தான் பகவானுக்குத் தொண்டு செய்ய முடியும். ஆகவே, பாரத வர்ஷத்தில் பிறப்பதை நாங்கள் விரும்புகிறோம்... அற்ப ஆயுள் இருப்பினும் பாரத நாட்டில் பிறப்பதே மேலானது. ஏனெனில் கர்ம பூமியில் பிறந்தவர்கள் மோட்சம் அடைவதற்கான மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வாய்ப்புக்கள் உண்டு.''

பாகவதத்தின் சாரத்தை எடுத்துக் கூறியுள்ள ஆசிரியர் கோபிகா கீதத்தை அடியோடு விட்டு விட்டது வியப்பளிக்கிறது. பெண்களை போகப் பொருளாகக் கருதி வந்த சமுதாயத்தில் பெண்களும் பக்தி செய்து முக்தி பெறலாம் என்று பக்தி மார்க்கத்தில் சம உரிமை அளித்த நூல் பாகவதம்.

—ஆனந்தி

சமுதாயம் பிரசுராலயம்,
கோவை-15

விலை ரூ. 40

துண்டைத் தோளில் போட்டு, பள்ளிக்குப் போகும் மகனுக்குத் தலைவாரி விடும் தாயைப் போல முகவாயைப் பிடித்தான்.

நீலகண்டன் தன் வசதிக்காக சேரைக் கொஞ்சம் சுழற்றினான். அப்போதுதான் கவனித்தேன்.. ஒரு பிரேம் செய்த படம். நான் அமர்ந்திருந்த இடத்தின் மேல் மாட்டியிருந்ததால் இப்போது தான் தெரிந்தது. நீலகண்டனின் அம்மாவாக இருக்கவேண்டும். கண்ணை மூடி மாலை போட்டுக்கொண்டிருக்க மேலே ஒரு ஸீரோ வாட்ஸ் பல்ப் கெப்பாய் ஒளிர்ந்தது. இந்த 'காலண்டர்கள் இருக்குமிடத்தில் இதுவும் எப்படி? யோசித்தேன். ஓ! க்ரேட்! மற்றவை மற்றவர்க்கு; இதுமட்டும் அவருக்கு மட்டும். மெல்ல அவர் முகத்தைப் பார்த்தேன்.

''என்ன சார்?''

''ஒண்ணுமில்லப்பா, இங்க கொஞ்சம் சொரசொரக்குது பார்.''

''இரு ஸார், இன்னும் முழுசா முடியலையே?''

''சரிப்பா.''

நான் மீண்டும் போட்டோவைப் பார்த்தேன். அதை எடுத்த போட்டோ கிராபர் ஸ்டூலின் மேல் நிற்பதைத் துல்லியமாய்க் கற்பனை செய்ய முடிந்தது. இந்தப் புகைப் படத்தை எடுத்த பிரம்மனே! நீ இங்கு இல்லாவிட்டாலும், இதிலிருந்தே உன்னை.... சட்டென மனம் அதிர்ந்து. மெல்ல... ரொம்ப மெல்ல... எதையோ புரிந்து கொள்ள ஆரம்பித்தது. எதை? யோசித்தேன்.... யோசனையின் நடுவில் கோயிலோடு சனும் தோன்றினான்.

ம. ஸ்ரீதரன்,
இளங்கலை வேதியியல் முதலாம் ஆண்டு,
அ. மா. ஜெயின் கல்லூரி,
மீனம்பாக்கம், சென்னை

சிவாஜி நடத்திய மாநாடு

"தமிழ் நாட்டு அரசியலில் என் பலம் என்ன என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் இந்த சிவாஜி ரசிகர்கள் மாநாடு நடைபெறுகிறது" என்றார் சிவாஜி கணேசன். அவருக்கு ஏன் இந்த அவசியம்? அவர் கோபம் யார் மீது? சந்தேகமே இல்லை; அவர்கோபம் மூப்பனார், மற்றும் தமிழ் நாட்டுத் தலைவர் பழனியாண்டி மீதுதான். சில மாதங்களுக்கு முன் இந்திராவின் தலைமையில் தென் மாநில காங்கிரஸ் மாநாடு சென்னையில் நடந்ததே. அப்போதுதான் தகராறு ஆரம்பமானது. அந்த மாநாட்டில், சிவாஜியும் அவரது ஆதரவாளரும் சரியான முக்கியத்துவம் பெறாமல் ஒதுக்கப்பட்டார்கள். பிறகு, சிவாஜி ஆதரவாளரின் தளபதி சண்முகம், ராஜசேகரன் போன்றவர்கள் 'தமிழ்நாடு காங்கிரஸ் தூங்கிக் கொண்டிருக்கிறது; சிவாஜி தலைவராக வந்தால் தான் விமோசனம்' என்பதுபோல் பேசத் துவங்கியவுடன் புகைந்து வந்த விவகாரம் குபுக்கென்று பற்றிக் கொள்ள ஆரம்பித்தது!

"இந்த மூப்பனாரையும், பழனியாண்டியையும் மக்களுக்குத் தெரியுமா என்ன? அவர்கள் பேசினால், காங்கிரஸுக்குக் கூடுகிற கூட்டம் கூடக் கலைந்து போய் விடும். இவர்களை விட்டு வைத்தால் காங்கிரஸ் தேறாது" என்றார் சிவாஜி மன்றத் தலைவர்களில் ஒருவர்.

செலவு யாருடையது?

சிவாஜி ரசிகர்களின் இந்த இரண்டு நாள் மகாநாட்டின் செலவு யாருடையது? "இதுவரை தேசியப் பாதுகாப்பு நிதி, வெள்ள நிவாரணம் போன்றவற்றுக்குத்தான் சிவாஜி பணம் கொடுத்துள்ளார். தமது அரசியல் லாபத்திற்காகப் பணத்தைச் செலவிட்டதில்லை. இந்த முறைதான் கிட்டத்தட்ட 20 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறார்" என்றார் எதிர் கோஷ்டியைச் சேர்ந்த இளைஞர் காங்கிரஸ் (இ) தலைவர் ஒருவர். சென்னை கண்ணப்பர் திடலிலிருந்து



○ என் பலம் என்ன என்பதை உணர்த்தவே இந்த மாநாடு" சிவாஜி வெள்ளிப் போர் வாளுடன்

ராஜா அண்ணாமலைபுரம் வரை கிட்டத்தட்ட 200-க்கு மேற்பட்ட அலங்கார வளைவுகள் போடப்பட்டிருந்தன. இவற்றுள் ஒன்று விழுந்து ஒரு ஆட்டோ ரிக்ஷாவைப் பதம் பார்த்ததில் நல்ல வேளையாக டிரைவரும் பயணியும் உயிர் தப்பினர். ஒரு வளைவுக்கு சுமார் 500 ரூபாய் செலவழித்து இருந்தால் கூட, வளைவுகளே ஒரு லட்சத்தை விழுங்கி இருக்கும். பிறகு மாநாட்டுப் பந்தலின் முகப்பில் இரண்டு கோபுரங்கள் போல் செய்ததற்கு கிட்டத்தட்ட 50,000 ரூபாய் செலவானதாம். ஒரு பர்லாங் நீளமும் அரை பர்லாங் அகலமும் இருந்த மாநாட்டுத் திடலில் 2000 டியூப் லைட்டுகள் போடப்பட்டிருந்தன. பந்தல் அமைப்பதற்கே இரண்டு லட்சம் செலவாகியிருக்கும் என்றார் பந்தல் அமைப்பாளர் ஒருவர். மேடை 10 அடி உயரத்தில் நாற்பது அடி நீள அகலத்தில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதன் செலவு 5 ,000 இருக்கும் என்கிறார்கள். பிறகு போஸ்டர்கள். சென்னையில் உள்ள ஒரு வித்தோ பிரஸ்ஸுக்குக் கொள்ளை லாபம். மூன்று விதமான கலர் போஸ்டர்கள் ஐந்து லட்சம் செலவில் அச்சடிக்கப்பட்டனவாம். பிறகு வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்கள், மின்சாரச் செலவு போன்றவை இரண்டு லட்சம் வரை இருக்கலாம். இந்தச் செலவுகளைப் பற்றி விசாரிக்கலாம் என்றால் மாநாடு முடிந்த பிறகும் ஏக பிஸியாக இருந்தார்கள் சிவாஜி மன்றத் தலைவர்கள். கிட்டத்தட்ட 500 லாரிகள் மற்றும் பஸ்கள் வெளி மாவட்டங்களிலிருந்து வந்தன. இவற்றில் செலவழிந்த டீஸல்எண்ணெயின் மதிப்பே பல லட்சத்திற்கு இருக்கும். 'இது எவ்வளவு கிரிமினல் வேஸ்ட்' என்றார் ஒருவர். இந்த மாநாடு நடத்தப்படுவதற்கு முன் சிவாஜி மன்றத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஊர், ஊராகச் சென்று மாநாட்டிற்கும் ரசிகர்களை அழைத்துவிட்டு, செலவுக்குப் பணத்தையும் கொடுத்து விட்டு வந்ததாகப் பரவலாகப் பேச்சு.



ஊர்வலம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று சொல்லி விட்டு, மதியம்வரைஊர்வலத்தைத் துவங்காமல் வைத்து, சரியான 'பிளி' சமயத்தில் ஊர்வலத்தை நடத்தி, போக்குவரத்தைக் கன்னு பின்னுவென்று திசைதிருப்ப வைத்து வயிற்றெரிச்சலை வாங்கிக் கட்டிக் கொண்டார்கள் ரஸிகர்கள்.

ஏன் நான் தலைவராகக் கூடாது?

''கிட்டத்தட்ட முப்பது ஆண்டுக் காலம் காங்கிரஸுக்கு உழைத்த எனக்கு சரியான மதிப்பு தரப்படவில்லை. ('எந்த காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலாவது எனக்குக் காப்பியாவது தந்திருக்கிறார்களா' என்றார் நடிகர் திலகம்.) என் பிள்ளைகள் (இப்போது ரஸிகர்களை இதயங்களே! என்று அழைக்கிறார்.) எனக்குப் பதவி தர வேண்டும் என்று கேட்டது தவறா? நான் ஏதோ தனிக்கட்சி ஆரம்பிக்கப் போவதாய் அன்னை இந்திராவிடம் சொல்லியிருக்கிறார்கள், பொறாமைப் பிடித்தவர்கள்! அன்னை இந்திராவுக்கு என்னைப்பற்றி நன்றாகத் தெரியும்'' என்று கூறி இந்திராவிடம் தமக்கு உள்ள பிடிப்பைப் பலமுறை தெரிவித்துக் கொண்டார் சிவாஜி. மாநாட்டில் இறுதியில் பேசும் போது நான்கு பக்க அறிக்கையை வைத்துக் கொண்டு ''இதுதான் என் ஸ்டேட்மெண்ட்'' என்று படிக்க ஆரம்பித்த சிவாஜி, அந்த அறிக்கை முடிந்தவுடன் மீண்டும் அரைமணி நேரம் பேசினார். பின்னால் பேசியவற்றில்தான் கோபமும், உணர்ச்சியும் இருந்தன. பத்திரிகைக்காரர்கள் படித்ததை விட்டுவிட்டுப் பேசியதைத்தான் எடுத்துக் கொண்டார்கள்.

இளைஞர் காங்கிரஸ் மாநாட்டைப் புறக்கணித்ததற்கு ஒரே காரணம்: எம். பி. சுப்பிரமணியமும் சிவாஜி கோஷ்டியில் இருந்தது தான். மூப்பனாரையும் பழனியாண்டியையும், அவர்கள் கோஷ்டியைச் சேர்ந்தவர்களையும் கலந்து கொள்ளுங்கள் என்று இந்திரா கூறியும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. சிவாஜி கோஷ்டிக்கு ஆர்.வி. தான் வழிகாட்டி.

சிவாஜி மகாநாட்டில் எம். ஜி. ஆரின் பங்கு

''தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக சிவாஜி இருந்தால் தமக்கு உதவியாக இருக்கும். பழனியாண்டியோ அல்லது வேறு மக்கள் தொடர்பு இல்லாத தலைவர்களோ, தலைவராக இருந்தால் வரும் தேர்தலில், காங்கிரஸ்—அ.தி.மு.க கூட்டணி பிரச்சாரம் சரியாகச் செய்ய முடியாது'' என்று சொல்கிறாராம் எம். ஜி. ஆர். இந்திராவிடமும், ராஜீவ் காந்தியிடமும் சிவாஜி தலைமைக்குப் பலமாகச் சிபாரிசு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அரைகுறை ஏற்பாடுகள்:

சென்னைக்கு மாநாடு கருதி அழைத்து வரப்பட்டவர்கள் இங்கே அம்போ என்று விடப்படவே எழும்பூர் ரயில் நிலையத்தில் ஒரே ரயில் ஏற முற்பட்டு ஏக ரகளை.

ஆகமொத்தம் சிவாஜி நடத்திய மாநாடு அவரது கிராமிய நடனத்துடனும் தொண்டர்களின் பல் உடைப்பு கைங்கர்யத்துடனும் ஜாம் ஜாம்மென்று நடந்தேறியது. சிவாஜி ரசிகர்கள் பலர் வள்ளுவர் கோட்டம் பார்க்க வந்த இடத்தில் திபுதிபுவென்று பாக்கியராஜைப் பார்க்க ஓடியது கண்கொள்ளாக் காட்சி!

-நமது நிருபர்

படங்கள்: சுபா

''என் இதயங்களே!''





நீங்கள் கேட்டவை

○ கமாலி, மேலப்பாளையம்.★

? சென்னி மலையில் இரு காளைகள் வண்டியையும் இழுத்துக் கொண்டு படிகளை ஏறினவே?

! ஏதோ கனவு வந்தது... காளைகளைக் கடவுளுக்குச் சமர்ப்பிக்க உத்தரவு வந்தது என்றெல்லாம் கூறப்படுகிறது. எனக் கென்னவோ அது வாயில்லா ஜீவன்களைச் சித்திரவதை செய்த நிகழ்ச்சியாகவேதோன்று கிறது. முருகன் இதனை விரும்ப மாட்டான் என்றே நம்புகிறேன்.

○ இர. சாமிராம், ஜமீன் இளம் பள்ளி.

? அண்மையில் திரைப்படக் கலைஞர்கள் எம். ஜி. ஆருக்கு நடத்திய பாராட்டு விழா வில் பானு மகேந்திரா புறக்கணிக்கப் பட்டது உண் மையா?

உண்மையாயின் நல்ல வேளை தப்பினேன் என்று பானுமகேந்திரா நிம்மதிப் பெருமூச்சு விட்டிருப்பார்.

○ பி. பாலமுருகன், புலிவலம்.

? தமிழ்நாடு திரைப்படச்செய்தி நிறுவனம் முழுக்க முழுக்க எம். ஜி. ஆர். ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகள், திறப்பு விழாக் களையே காட்டிக் கொண் டிருக்கிறதே. கவனித் தீர்களா?

! ஓர் அரசு இலாக்கா வாகச் செயல்படும் செய்தித் துறையிட மிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? அ. இ. ரே. டீ. வி., மத்திய மாநில அரசு களின் திரைப்படப் பிரிவுகள் , எல்லாமே ஜால்ராக்களாகத் தான் இயங்கும். அதனால் தான் இவை சுதந்திர கார்ப்பரேஷன்க ளாக வேண்டும் என்பது.

○ சுதந்திரமாணிக்கம் பாண்டிச் சேரி.

? மக்கள் ரசனையைப் புரிந்து கொண்டவர்கள் பத்திரிகைக்காரர்களா? சினிமாக்காரர்களா? அந்தரசனையை உயர்த்த கொஞ்சம் முயற்சி செய்தால் என்ன

! நீங்க ஒன்னு... விஷயம் புரியாம... மக்கள் ரசனை வளர்ந்து விட் டால் இவர்கள்பிழைப்பு நடத்துவது எப்படி? இவர்கள் ரசனை இவ் வளவுதான். இவர்க ளால் உயர முடியாத போது மக்கள் ரசனை உயர்ந்து விட்டால் இவர்கள்கதி என்னவது!

○ எம். ஜே. புகாரீன், நெம்பரம்.

? காந்திய வழியில் நடப்ப தாக ராஜீவ் கூறி யிருக்கிறாரே?



○ புதுக்கட்டி

! உண்மைதான் இந்திரா காந்திய வழியில்.

○ ஆர். சுப்பராம் திருக்கோவி லூர்.

? சேலத்தில் கூடிய இந்து மகாநாடு குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தைக் கடுமை யாகத் தாக்குகிறதே?

! கு. க. வைத் தாக்குவது தேசபக்தி உள்ளவன் செய்வதல்ல. ஆனால் கு. க. அமல் படுத்தப் படும் முறையைத்தாக்க லாம். இதில் எல்லா மதத்தினரும் சமமாகக் கருதப்படாவிட் டால் ஐயப்பாடுகள், எதிர்காலக் கவலைகள் எழுவது இயல்பே.

○ மோகனராஜ், பங்களூர்.

? எத்தனையோ பிரச்னைகள் மக்களை வாட்டிக் கொண் டிருக்க ஒரு டைரக்டரின் இரண்டாம் கல்யாணத்தை நடத்தி வைக்கச் சென்ற முதல்வரை புரோக்கர் என்று அழைத்ததில் தவ றென்ன? கலைஞர் கூற்றை அநாகரிகம் என்கிறீர்களே?

! எத்தனையோ பிரச்னைகள் எனக்கு இருப்பதால் என் நண்பன் திருமணத் துக்கு நான் போகாமல் இருக்க மாட்டேன். நீங்களும்அப்படித்தான். பாக்கியராஜ் திருமணத் துக்கு எம். ஜி. ஆர். போகாமலிருந் தால் தமிழகத்தின் பிரச்னைகள் எல்லாம் தீர்ந்து விடப்போவ தில்லை. போலீஸ் பாது காப்பு தந்தது தவறு என்று ஒரு குற்றச் சாட்டு. அசம்பாவிதம் ஏதாவது நடந்திருந் தால் போதிய பாது காப்பு தரத் தவறி விட்டதாகக் குற்றம் சாட்டுவார்கள். இதுபோன்ற அல்பக் குற்றச் சாட்டுக்களை விட் டொழிப்போம். ஆட்சி நடத்தும் விதத்தில், கொள்கைகளில், கொண்டு வரும் சட்டங் களில் தவறு கண்டால் கண்டிப்போம்.



○ டூப்ள ஏது?

○ பி. ஆர். பார்த்தசாரதி, மன் னார்குடி.

? சென்னாரெட்டி புதுக் கட்சி ஆரம்பித்துள்ளாரே?

! அகில இந்தியக் கட்சி என்கிறார். இ. காங் கிரஸ் மோசமானது. அதை விட இந்திரா காந்தி படுமோசமான வர் என்று இவருக்குத் திடீர் ஞானோதயம் உண்டாகியுள்ளது. இந்தக் கட்சியால் என். டி. ஆர். பெரு

புரோக்கர் என்று

மளவு பாதிக்கப்படா விட்டாலும் ஓரளவு ஆதாயம் இ. காங்கிரஸுக்குத் தான். இது ஒருபுறமிருக்க, ஆந்திராவில் இன்று பெரிய ஆபத்து இ. காங்கிரஸின் ஆந்திரத் தலைவர்களே ஆந்திராவை இரண்டாகப் பிளக்க வேண்டும் என்று தற்போது செய்து வரும் கிளர்ச்சி. விஷமத்தனமான பிரிவினை வாதம் இது. முன்பு தெலுங்கானா பிரிவினை கூடாது என்று வாதாடிய இ. காங்கிரஸ் இன்று ராயலசீமா பிரிவினைக்கு வித்திட்டு நீர் வார்த்து வருகிறது. இதற்குஇடம் தந்தால் மகாராஷ்டிரம், குஜராத், உத்தரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்கம் போன்ற வேறு பல மாநிலங்களிலும் பிரிவினை வாதம் எழும்.



○ வாசுகி

○ எம். தெம்பரம், சென்னை 4.


? அழகில் நடிப்பில் நடனத்தில் பத்மினிக்கு அடுத்த படியாக ஸ்ரீதேவி, ஜெயப்பிரதா, மாதவி, அம்பிகா, ராதா இவர்களில் யாரைச் சொல்லலாம்?

! இணையாக யாரும் இல்லாத போது அடுத்த படியாக யாரை வேணுமானாலும் சொல்லலாம்.

○ கல்யாணசுந்தரம், கும்பகோணம்.

? ஒரு ரூபாய்க்கும் தட்டுப்பாடு உள்ளதால் பிளாட்ஃபாரம் டிக்கெட்டைப் பத்து ரூபாய்க்கு உயர்த்தி விடுவாரா ரயில்வே அமைச்சர்?

! சந்தேகம் வேண்டாம். ரூபாயின் மதிப்பு இப்போதுள்ள 20 பைசாவிலிருந்து சீக்கிரமே 10 பைசாவாகக்குறையும் போது பிளாட்ஃபாரம் டிக்கெட் விலை 10 ரூபாயாக இருக்கும். அப்போது பத்து ரூபாய் நோட்டுக்கும் தட்டுப்பாடு ஏற்படும். ஏனென்றால் பத்து ரூபாய்



○ உயர்த்திடுவார்

நோட்டை அச்சடிக்க ஆகும் செலவு பத்து ரூபாயை விட அதிகமாய் இருக்கும்!

○ எஸ். ராமநாதன், அருப்புக்கோட்டை.

? அடுத்த தமிழக முதல்வராக சிவாஜிகணேசன் வரும் வாய்ப்பினைத் தமிழக மக்கள் ஏற்படுத்திக்கொடுப்பார்களா?

! ஆசையைப் பார்! அதற்கெல்லாம் ஜெயலலிதா விட்டுக் கொடுப்பாரா என்ன? அல்லது தமிழக மக்கள் தான் எம். ஜி. ஆரின் வாரிசைக் கைவிட்டு விடுவார்களா?

○ ஜி. ருக்மிணி, திருச்சி.

? ஆபாசம் புரையோடிப்போன தமிழ்த் திரைப்பட உலகை இனித் திருத்தவே முடியாதா?

! நாம் அனுபவிக்கும் சுதந்திரத்துக்கு விலையாகச் சில விரும்பத்தகாத விஷயங்களைச் சகித்துக் கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. சினிமாவை மட்டும் கூறுவானேன். பாரம்பரியப் பெருமை மிக்க இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி பத்திரிகையின் சமீபத்திய ஓர் இதழைப் பாருங்கள். (பார்க்காதீர்கள்!) ஆறு பக்கங்களுக்குக் கலை, அழகுணர்ச்சி என்ற பெயரில் பெண்களின் முழு நிர்வாணப் படங்கள்தான். தமிழ்ப் பத்திரிகை உலகும் சீர் கெட்டுத்தான் வருகிறது. ஆனால் இதையெல்லாம் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை அரசிடம் தந்தோமானால் அது அந்த அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து கருத்துச் சுதந்திரத்தையே நசுக்கும் அபாயமும் இருக்கிறது. இது தொடர்பாக ஒரு கம்யூனிஸ்ட் சீன செய்தி: "ஆபாசத்தை விலை பேசிய ஒருவன் கண்டுபிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான்." ஆக, பத்திரிகை சுதந்திரமே இல்லாத சீனாவிலும்ஆபாசம் இருக்கிறது – அண்டர் கிரவுண்டில்; ரகசியமாக. அது கடும்தண்டனைக்கும் அஞ்சவில்லை! மக்களின் பலவீனங்களைப் பயன்படுத்திப் பல விதங்களிலும் (மது, லாட்டரி, போதை மருந்து, ஆபாசம் இத்யாதி) பணம் சம்பாதிக்க எண்ணுகிறவர்கள் எங்கும் இருக்கவேசெய்வார்கள். நாம் இவற்றால் விளையும் தீமைகளை எடுத்துரைத்து ஆக்கபூர்வமாகச் செயலாற்றி மன, உடல் ஆரோக்கியங்களை வளர்க்கப் பாடுபடுவோமே.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
கமானி,
மேலப்பாலையூர்,
ருடவாசல்வழி 612 601.

அழைத்ததில் தவறென்ன?



கிணறு தோண்டக் கிளம்பிய பூதம்

● கிணறு ஒன்றைத் தோண்டப் போகக் கருப்பாய் ஒரு பூதம் கிளம்பியது...

● இந்தக் கருப்புப் பூதத்துக்கு இப்போது வயது முப்பத்தைந்து.

● கிணறு தோண்டிய விவசாயி ஜம்புலிங்க முதலியார் அப்போது பூதத்தைப் பார்த்து மிரண்டு போயிருந்தால் இன்று நெய்வேலியில் முந்திரி மட்டுமே விளைந்து கொண்டிருக்கும்....

● அரசாங்கத்துக்குத் தெரிவித்தார். ஆராய்ச்சிகள் நடந்தன. பூதக் குழந்தைக்குப் பழுப்பு நிலக்கரி என்று பேரிட்டார்கள். ரோஜா மன்னன் நேருஜி கையால் கருப்புத் தங்கச் சுரங்கத்துக்குக் கால்கோள் நடந்தது.


● மண், களி, பாறை அடுக்குகளை 85 மீட்டர் சுரண்டினால் தான் பழுப்புக் கரியே பார்வையில் படுகிறது.

● நான்கு அடுக்கு மணல் உமியை அள்ளிக் குவிப்பதால் புதிய மலைகள் தினமும் வளர்கின்றன. ஜனவரியில் அகற்றப்பட்ட இந்த மேல் மண் எவ்வளவு தெரியுமா? 37 லட்சம் கன மீட்டர்கள்.

● ஐந்தாம் அடுக்கில் லிக்னைட் கரியின் கனம் சராசரியாய்ப் பதினைந்து மீட்டர். அதிகப்பட்சம் இருபத்தைந்து மீட்டர்கள்.

● நெடிதுயர்ந்த புகைக் கோபுரங்கள், குளிர்மாடங்கள் (Cooling Towers) என்று அனல்மின் நிலையமும் பிறந்தது.

● மின் நிலையக் குழந்தைக்குத் தாய்ப்பாலாகப் பழுப்பு நிலக்கரியே பயன்படுகிறது. இதோ முந்திரிக் காட்டில் அடுத்த குழந்தையும் பிறந்து விட்டது. இரண்டாம் மின் நிலையக் குழந்தையும் அடுத்த ஆண்டில் 'நடக்கப்' போகிறது.



○ ஆசியாவிலுள்ள ஒரே திறந்தவெளிச் சுரங்கம் நெய்வேலிதான்

● பருவ காலம் தவறிப் போனாலும் நெய்வேலியின் அனல் மின்சாரம் ஈடு கொடுக்கும்.

● முதல் நிலையத்தின் 600 மெகாவாட் திறன் தமிழகத் தேவையில் பாதிக்கு மேல் கைகொடுக்கிறது.

● இரண்டாம் நிலையம்... 1470 மெகாவாட் இரண்டு கட்டங்களில் உருவாகிறது. முதல் கட்டம் 630.மெ.வா 1985—இல், இரண்டாம் கட்டம் 840 மெ. வா. 1987—ல் என்பது திட்ட ஏற்பாடு.

● ராட்சத இயந்திரங்களின் உறுமல் கேட்டுக் கொண்டே இருக்கிறது. நான்கு அடுக்கு மண். பாறைப் படுகைகளை இயந்திரங்கள் சுரண்டி, அகற்றி, ஆழப்படுத்துவதை மனிதர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். மண்ணைச் சுமப்பது கூட மனிதர்களில்லை. 'கன்வேயர் பெல்ட்டுகள்' என்னும் நகரும் சுமைதாங்கிகள் தான்.

● நிலக்கரிச் சுமையை அனல் நிலையத்துக்கு எடுத்துப் போகும் எட்டு கிலோ மீட்டர் தூரம் இதே கன்வேயர் பெல்ட்டுகள்தான்.

● குறுக்கும் நெடுக்கும் சிலந்தி வலையாய்ப் படரும் இந்த பெல்ட்டுகள், சுரண்டிய மணலை மலையாய்க் குவிக்கின்றன. இயந்திர வேகம். யானையைச் சிறு கொசு இயக்க முடியுமோ? இயந்திர பூதங்களை இயக்கும் மனிதர்கள் எங்கோ... எங்கோ... மூலைக்கு ஒருவராய்...

● சுரண்டும் இயந்திரங்கள் ஜெர்மனியில் பிறந்தவை. அதன் தாய் வீட்டு மண் மென்மையானது. முந்திரி மண்ணின் உறுதியைத் தாக்குப் பிடிக்கும் வகையில் 'பக்கெட் வீல்' என்னும் சக்கர வாளிகள் மாற்றியமைக்கப்பட்டனவாம்.

● பழுப்புக்கரியின் அழுத்தத்தின் கீழே பிரளயவெள்ளமாய்ப் பீறிடும் தண்ணீர்... இதை அகற்றுவதே இங்கே பெரிய வேலைதான்... ஆனாலும் இதுவும் ஒருநாள் சென்னைக்கு வந்து தாகம் தணித்ததே!

● பழுப்புக்கரியின் முதல் களப் பரப்பு 15 சதுர கிலோ மீட்டர்... இரண்டாம்களம் 26 சதுர கிலோ மீட்டர். கண்ணுக்கெட்டிய தூரம் எல்லாம் சுரங்கம் தெரிகிறது.

● உற்பத்தித் திறன் ஆண்டான 1982–இல் தேசிய உற்பத்தித் திறன் குழுவின் சாதனை விருது 'நெய்வேலி'க்கே கிடைத்தது. நெய்வேலி அனுபவமும் தொழில் நுட்பத் திறனும் இப்போது வெளியேயும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. குஜராத், ராஜஸ்தான் அரசுகள் விசாகப்பட்டினம் துறைமுக டிரஸ்ட், இந்திய சிமெண்ட் கார்ப்பரேஷன், வெஸ்டர்ன் கோல் ஃபீல்ட்ஸ் இத்யாதி.

● ''இரண்டுக்குப் பிறகு வேண்டவே வேண்டாம்'' — நெய்வேலியில் மீறப்படுகிறது. மூன்றும் சுரங்கமும் வெட்டப்படும். 1500



''உங்க பிறந்த நாளுக்கு என்ன பரிசு வேணும், கேளுங்க தர்றேன்னு என் கணவர் கிட்டே சொன்னது ரொம்பத் தப்பாப் போச்சு.''

''ஏன்?''


''சுதந்திரம் வேணுங்கிறார்!''

-சுப்புலட்சுமி செயபாலன்

மெகாவாட் திறனுடன் மூன்றும் அனல் மின்நிலையமும் திட்ட வரைவில் உள்ளது.

● பொதுத் துறை நிறுவனத்தில் லாபம் வருமா என்று புருவம் உயர்த்தால்...? நெய்வேலியின் நிகர லாபம் சென்ற ஆண்டில் 47.44 கோடி ரூபாய்.

■ இரண்டாம் அனல் மின்நிலையம் உருவாகிறது



● தமிழகம், ஆந்திரா நெல் விளைச்சலுக்கு நெய்வேலி யூரியா கைகொடுக்கிறது.

● பழுப்புக் கரியின் ஈரப் பசையைப் பாதி போக்கிப் பக்குவப்படுத்தினால் — கார்பாலிக் அமிலம் முதல், தார் வரை எல்லாம் கிடைக்கின்றன. அப்புறம் மிஞ்சுவது 'லீக்கோ'க்கரி தான்.

● அடுப்பெரிக்க என்று லீக்கோவை அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் இப்போது கேலி பண்ணுகிறார்கள். 'அடுப்பெரிக்கத் தேக்கு மரத்தைப் பயன்படுத்தலாமா' என்று கேட்பவர் நிர்வாகத் தலைவர் ஜி. எல். தாண்டன். காரணம்?

● லீக்கோவின் வெப்பம் அதிகமானது... தொழிலகங்களுக்கே மிகவும் ஏற்றது... அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தி எரிபொருள் சிக்கனத்துக்கு உதவக் கூடியது... பலன் கண்டிருப்பவர்கள் மதுரை சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ், சென்னை ஆல்காலி கெமிக்கல் கார்ப்பொரேஷன்... இவர்கள் தங்கள் தொழிலகங்களின் பாய்லர்களை லீக்கோவுக்கு ஏற்றதாய் மாற்றி விட்டார்கள்.

● இரண்டாம் மின் நிலையத்துக்குப் பாய்லர்கள் ஹங்கேரியிலிருந்து வாங்கப்பட்டிருக்கின்றன. சர்வதேச டெண்டர் என்னும் உலக ஒப்பந்தப் புள்ளியில் வென்றவர் ஹங்கேரியர். தோற்றவர் நம்முடைய பாரத் ஹெவி எலக்ட்ரிகல் நிறுவனம், பி. எச். இ. எல். பாய்லர் விலை கூடுதல் என்கிறார்கள். 'இந்தியனாக இரு: இந்தியப் பொருள்களையே வாங்கு' என்கிற விளம்பரம் இங்கே இடறுகிறதே!

—சுப்ரபாலன்

எந்த பட்ஜெட் பொல்லாத பட்ஜெட்?

முப்பதாண்டுகளுக்கு மேல் அரசு ஊழியராகப் பல்வேறு உயர் பதவிகளை வகித்து ஓய்வு பெற்றுள்ள ஒருவர், 26-2-84 கல்கி இதழில் வெளியான 'எந்த பட்ஜெட் நல்ல பட்ஜெட்' கட்டுரைக்கு மறுபுறத்தைக் காண்கிறார். முதிர்ந்த அனுபவ ஞானம் பேசுகிறது:


நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த ஓய்வு பெறும் ஊழியர்களின் இடத்தில் புதிதாகப் பிறரை நியமிக்காமல் இருக்க வேண்டும் என்று நிபுணர் கூறுவது ஒரு 'நெகடிவ்' யோசனை. வேலையற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டும், வேலைவாய்ப்புக்கள் குறைந்து கொண்டும் வருகிற இந்நாட்களில் அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது அறிவற்றது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. அரசு அலுவலகங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இருந்தால் அவர்கள் அனைவரையும் சமூகத்துக்குச் சிறந்த உபயோகமான பணியாற்றும்படி செய்ய வேண்டுமே தவிர வேறு விதமாக யோசிக்கக் கூடாது. எல்லாத் துறைகளிலும் தேவைக்கு மேலான ஊழியர்கள் உள்ளனர் என்று சொல்வதற்கில்லை. உதாரணமாகக் காவல் துறையில் தேவைக்கும் குறைவான ஊழியர்களே உள்ளனர். இத்துறையில் ஊழியர்களைக் குறைப்பது என்பது சிந்திக்க முடியாத ஒன்று.

கடைநிலை ஊழியர்களைத் தவிர்க்க வேண்டும் என்பது நெடு காலத்திலிருந்து பேசப்பட்டு வருகிறது. நமது சமுதாயம் இதை அங்கீகரிக்கும் அளவிற்கு இன்னும் முதிர்ச்சியடையவில்லை. மேலும் இக்கடைநிலை ஊழியர்கள் தங்கள் பணிகளைச் சரிவரச் செய்யாமல் இருப்பது அவர்களது மேலதிகாரிகளின் கையால் ஆகாத தனத்தையே காட்டுகிறது. வரி செலுத்துகிற ஆனால் நுண் அறிவுப் பயிற்சி இல்லாத பெரும்பான்மையினருக்கும் அரசு ஊழியங்களில் பங்கு தர வேண்டும் என்ற கருத்து தர்ம நியாயமானது. அரசு ஆஸ்பத்திரிகளிலிருந்து மருந்துகள் திருடப்படுகின்றன என்று கூறியிருக்கிறார் நிபுணர். அவர் சொல்லாமல் விட்டது: கிராமப்புற மருத்துவமனைகளுக்கு அளிக்கப்படும் மருந்துகள் ஆறு மாதங்களுக்குக் கூடப் போதுமானதாய் இராது என்பது. இந்த ஏற்றத் தாழ்வைச் சரிக்கட்ட வேண்டும்.

செலவுகளைக் கட்டுப்படுத்த யோசனைகள் கூற இதுவரை எவ்வளவோ கமிஷன்களை நிறுவியாயிற்று. அரசியல் மற்றும் அலுவலக நிலைகளில் வீண் செலவுகளையும் ஆடம்பரங்களையும் தவிர்க்க ஆட்சியில் இருப்போர் உறுதி பூண்டு விட்டால் எந்தக் கமிஷன் தான் என்ன செய்ய முடியும்? கமிஷன் சிபாரிசுகளால் என்ன பலன் விளையும்?

வீண் செலவுகளும், காலம் தவறிய திட்டங்களும் அமெரிக்காவிலும் உண்டு. இதற்குத் தலைசிறந்த உதாரணம் அந்நாட்டின் பல்வேறு அணுமின் நிலையங்கள். அமெரிக்காவுடன் இந்தியாவை ஒப்பிடுவது முறையல்ல. அந்தத் தேசத்தில் முதலாளித்துவம் அரசியலில் மட்டுமல்ல, மக்களின் மனப்பான்மையிலும் உண்டு. இந்தியாவிலோ அரசியல் கொள்கை தீவிர இடதுசாரியிலிருந்து தீவிர வலதுசாரி வரை பரந்து கிடக்கிறது.

இந்தியாவைப் போலன்றி அமெரிக்காவில் ஆட்சிக்கு வருபவர்கள் நிர்வாகத்தில் அனுபவம் உள்ளவர்கள். அமெரிக்கப் பொது மக்களும் இந்தியர்களைக் காட்டிலும் விஷய ஞானம்



உள்ளவர்கள். அரசு எடுக்கும் முக்கியமான முடிவுகளை ஆதரித்தும் எதிர்த்தும் தீவிர விவாதங்கள் பத்திரிகைகள், டி. வி. மூலமாக நடக்கும். அமெரிக்காவில்தான் ஒரு வாட்டர்கேட் ஊழலும் நடக்கும்; அங்கேதான் சர்வ வல்லமை பெற்ற ஒரு ஜனாதிபதியைப் பதவி நீக்கமும் செய்ய முடியும்.

ஒவ்வொரு நாட்டிலும் அனைத்துக் கட்சிகளும் அங்கீகரிக்கும் சில விஷயங்கள் உண்டு — பொருளாதார ரீதியில் பின்தங்கியவரை உயர்த்துதல், ஜாதிப் பிரிவுகளை ஒழித்தல் ஆகியன இந்தியாவில் எல்லாக் கட்சிகளாலும் அங்கீகரிக்கப்பட்டவை. அதே போல் ஒவ்வொரு நாட்டிலும் சில தவறான திட்டங்கள் வகுக்கப்பட்டுத் திருத்த முடியாத நிரந்தரத் தவறுகளாகி விடுகின்றன. சத்துணவுத் திட்டமும், பின் தங்கிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்தலும் இந்த ரகத்தைச் சேர்ந்தவை.


சிறந்த பட்ஜெட் என்பது வரவையும் செலவையும் சரிகட்டுதல் மட்டும் அல்ல. அதன் நோக்கங்களாக இருக்க வேண்டியவை:

1) உற்பத்தியைப் பெருக்குதல்.

2) உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளில் அதிக வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்.

3) கிராமப் புறங்களின் அடிப்படைத் தேவைகளை வழங்குதல்.

4) திட்டங்கள் உருவாவதிலும், அங்கீகரிக்கப்படுவதிலும், அமுல்படுத்தப் படுவதிலும் தற்போது உள்ள தாமதங்களை அடியோடு ஒழித்தல்.



கோப்புகள் நத்தை வேகத்தில் பல நிலைகளிலுள்ள அதிகாரிகளின் மேஜைகளைக் கடந்து நிதானமாக அமைச்சரை அடைந்து ஒரு வழியாக முதலமைச்சரின் கரங்களை எட்டுகின்றன. இது போன்ற காலதாமதமே ஒரு திட்டத்தின் செலவை அதிகரிக்கிறது. ஒரு திட்டத்தைத் தாமதப்படுத்துவதைக் காட்டிலும் அங்கீகாரம் அளிக்காமல் விட்டுவிடுவதே மேல். தாமதத்தைப் பற்றித்துளிக்கூடக் கவலைப்படாமல் இருக்கும் இன்றைய நிலை மாறவேண்டும். கடைநிலையிலிருந்து அதி உயர்நிலை வரை அரசில் உள்ள அத்தனைபேரும் தாமதத்துக்குத் தக்க காரணம் அளிக்கும்படி தட்டிக் கேட்கப்பட வேண்டும்.

நான் சொல்வது எல்லாம் முந்தைய கட்டுரையில் வல்லுனர் கூறியதைப் போலவே நடைமுறைக்கு ஏற்றதல்ல என்கிறீர்களா.. இருக்கலாம். ஆனால் ஒரு வித்தியாசம். என்னுடையது பாசிடிவ் அணுகுமுறை: அவர் கூறியுள்ளவை நெகடிவ் அணுகுமுறை: இந்த வித்தியாசத்தை ஒரு குட்டிக்கதை மூலம் விளக்குகிறேன்:

வனமஹோத்ஸவ விழாவில் ஒருவர் பேசினார்: ''மரக் கன்றுகளின் பரம எதிரி ஆடுகள் தான். அவற்றை அடியோடு ஒழித்து விட்டால் வனமஹோத்ஸவம் வெற்றி பெற்று விடும்!'' அதற்குப் பதில் கூறினார் மற்றொருவர்: ''ஆடுகளை ஒழிப்பது நடைமுறையில் சாத்தியமல்ல. சரியுமல்ல. அதனுடன் ஆடுகளைக் கட்டுப்படுத்தி



மரங்களைச் செழிக்கச்செய்ய வேண்டும்.''

தேர்தல் மூலம் பதவிக்கு வந்து அதிகாரம் பெற்றவர்கள் வீண் செலவுகளுக்ும் பயனற்ற திட்டங்களுக்கும் வழிவகுத்துக்கொண்டுதான் இருப்பர். அரசாங்க நிர்வாகிகளும், நிபுணர்களும் கற்றறிந்த பொது மக்களும்தான் செலவாகும் ஒவ்வொரு பைசாவுக்கும் பன் மடங்கு பலன் கிட்டுகிறதா என்று சதா கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். தேர்தல் மூலம் ஆட்சிக்கு வரும் அரசியல் தலைவர்கள் ஆக்க ரீதியில் சிந்தித்துச் செயல்படுமாறு இவர்கள் செய்ய வேண்டும்.

பட்ஜெட் என்பது வரவையும், செலவையும் மட்டும் சரிக்கட்டாமல் மக்களின் எதிர்பார்ப்பையும் சரிக்கட்ட வேண்டும். ஒன்றோடொன்று போட்டி போடும் செலவினங்களைப் பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வரிசைப்படுத்தி அவற்றுக்குச் சரியான அளவு பணத்தை ஒதுக்கீடு செய்வதுடன் அப்பணம் திறம்படப் பல்வேறு அரசுத் துறையினரால் நிர்வகிக்கப்படவும் வழிவகுப்பதே சிறந்த பட்ஜெட்.

ஆங்கிலத்திலிருந்து

தமிழாக்கம்: சிதாரவி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran


லைப்பாய்
இருக்குமிடம்...
அதுவே
ஆரோக்கியம்
இருக்குமிடம்
போராடிப் பொழு-
தெல்லாம் உழைத்த
பின்...ஜோராக ஆடிய
பின், நீராடுவீர்
லைப்பாய் கொண்டு...
குளித்த உடம்பிலே
குலவக் காண்பீர்
சுத்தமே உருவான
ஆரோக்கிய மலர்ச்சி!
LIFEBUOY
for health
அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது லைப்பாய்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
LINTAS L 88 1516 TM



NEW!

CY-BAN*

Gets rid of lice overnight!

- Safe
- Effective
- Pleasantly perfumed
- Non-greasy

CYANAMID

Lederle

Cyanamid India Limited • Lederle Division

P.O.B. 9109 Bombay 400 025

* Registered Trademark of American Cyanamid Company.

கல்கி 11-3-84 இலவச இணைப்பு

ஆரோக்கியம் அழைக்கிறது பகுதி II

சிறப்பு மடலின் ஆசிரியர்: டாக்டர் வியாஸ் உதவி: சுப்ரபாலன், சாருகேசி

டாக்டர் எம். எஸ். லட்சுமி குமாரி அளிக்கும் பதில்கள்:–

1. மகப்பேறு மருத்துவர் என்ற முறையில், உங்களிடம் சிகிச்சைக்கு வரும் பெண்கள் பொதுவாகக் குறிப்பிடும் நோய் என்ன?

வெள்ளைப் போக்கு. இது கான்சராயிருக்குமோ என்று சிலர் பயப்படுவது உண்டு. அதற்கு அவசியமே இல்லை. ஏனென்றால் இது சகஜமாகவே சிலருக்கு இருக்கலாம். விலக்கு காலத்தில் அதிக ரத்தப் போக்கு. பின்–இடுப்பு வலி. சிறுநீர்ப் பாதையில் நோய்த்தொற்று (யூரினரி இன்ஃபெக்ஷன்) இவைதாம் பெரும்பாலும் குறிப்பிடப்படும் குறைகள்.

2. பேறு கால சமயங்களில்?

காலில் வலி என்பார்கள். சரியாக தூக்கவிட முடியவில்லை என்பார்கள். சரியாகத் தூக்கம் வரவில்லை என்பார்கள்.

3. மன அழுத்தி அல்லது மன வேதனை விஷயத்தில் பெண்கள் எப்படி?

ஆண்களைவிட, பெரிய விஷயங்களை நன்றாகவே, தாங்கிக் கொள்ளுவார்கள். ஆனால் சிறிய விஷயங்களுக்கு மனத்தைப்போட்டு உழப்பிக் கொள்ளுவார்கள்!

4. பெண்களுக்குச் சிறுநீரகப் பாதையில் நோய்த் தொற்று வரக் காரணம் என்ன?

சொந்த சுகாதாரங்களில் கவனமின்மை அல்லது அசிரத்தை. பிரசவ காலக் கோளாறுகள். சில சமயம் காத்திட்டர் உபயோகித்தாலும் இந்நோய் வருவதுண்டு. இதற்கு உடனேயே வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

5. ஏன் சில பெண்கள் அனேகச் சமயத்தில் சோர்ந்து போகிறார்கள்?

போதுமானதேகப்பயிற்சி அல்லது வேலை இல்லாமை. சில தாய்மார்கள் குழந்தைக்கு உணவு ஊட்டும் பொழுது, மீதியை எல்லாம் தானே சாப்பிட்டு விடுதலும் ஒரு காரணம்.

6. ஒரு பெண், விலக்கு தவறிவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

பயப்படாமல் போய்க் குடும்ப டாக்டரிடம் முதலில் தெரிவிக்க வேண்டும். சரியான காரணத்தைக் கண்டுபிடித்தபின், மேலே என்ன செய்ய வேண்டும்



டாக்டர் எம். எஸ். லட்சுமிகுமாரி

என்று அவரே ஆலோசனை சொல்லுவார்.

7. பின் – இடுப்பு வலி (Low back ache) வந்தால் என்ன செய்யலாம்?

பிஸியோ தெரபி மிகவும் உதவும். தவிர உப்பு ஒத்தடமும் கொடுக்கலாம். மூன்று வாரங்களுக்குள் பூரண குணமடையாவிடின் டாக்டரை ஆலோசிக்க வேண்டும்.

8. குழந்தை தேவையில்லை என்று நிர்மானிக்கும் ஆரம்ப கர்ப்ப நிலையிலுள்ள ஒரு பெண் என்ன செய்ய வேண்டும்?

தகுந்த மகளிர் மருத்துவ நிபுணரிடம் போகவேண்டும். பொதுவாக, அவரே அதைக் கலைக்க முற்பட்டாலும் அதை ஆபத்தின்றிச் சரிவரச் செய்து கொள்ள என்ன செய்யலாம் என்பது பற்றி ஆலோசனை அளிப்பார்.

9. கருக்கலைப்பு பயிற்சி அற்றவரிடம் போனால் என்ன ஆகும்?

சிறுநீர்ப் பாதைக் கோளாறுகள் வருவதுமட்டுமல்ல, கர்ப்பப்பையில் நோய்த் தொற்று ஏற்பட்டு அதன் காரணமாக, பிற்பட்ட பிரசவ காலங்களில் அவதி உண்டாகும். ஏன், கருக்கலைப்பின் போது மரணமே அடைய நேரிடலாம்.

10. டி. அண்ட் சி அடிக்கடி செய்துகொள்ளலாமா?

கூடாது. கருப்பையிலிருக்கும் லேயரின் மெம்பரேன் சேதமடைந்து பழுதடைந்து விடும். இதனால் தான், பிற்பட்ட பேறு காலத்தில் குழந்தை பிறந்தவுடன் அதிகமாக ரத்தப் போக்கு உண்டாகிறது. (இதை போஸ்ட் பார்ட்டம் ஹேமரேஜ் என்பார்கள்.)

11. முதல் தடவை சிஸேரியன் செய்து கொண்டால் எல்லாத் தடவையும் ஸிஸேரியன் தான் செய்து கொள்ள வேண்டுமா?

இல்லை. ஆனால் அடுத்தடுத்து இரண்டு ஸிஸேரியன் செய்து கொண்ட தாய்மார்களுக்கு, மூன்றாவது இயற்கையான பிரசவமாக இருக்க அனுமதிப்பதில்லை.

12. பிரசவத்திற்குப்பிறகு என்ன பயிற்சி செய்யலாம்?



மகளிர் நோய்கள்

வயிற்றுப் புறத் தசைகள் இறுகும்படியான சில லேசான தேகப் பயிற்சிகள் செய்யலாம். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு, வயிற்றுத்தசைகளுக்கு வலுவளிக்கும்படியான சில பயிற்சிகளைச் செய்யலாம்.

13. இப்போதெல்லாம் நல்ல நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்துப் பிரசவம் ஆகும்படிசெய்து கொள்ளுகிறார்களாமே. இது சாத்தியமா?

குழந்தை பிறப்புக்குநல்ல நேரம் பார்ப்பது, ஸெக்டிவ் ஸிஸேரியன் செய்யும் போது முடியும். அதாவது முன்கூட்டியே ரணசிகிச்சை முறையில் மகப்பேறு நிர்மாணிக்கப்பட்ட சில கேசுகளில் மட்டுமே இது சாத்தியம்.

14. உங்கள் அநுபவத்தில், ஒரே குடும்பத்தில் பல பெண்களுக்கு மகப்பேறு மருத்துவம் பார்ப்பதால் ஏற்படும் விளைவுகள் என்னென்ன?

பொதுவாக, நான் ஒரே குடும்பத்தில் பல பெண்களுக்கு மகப்பேறு மருத்துவம் செய்திருக்கிறேன். இதனால் இக்குடும்பத்தினர் என்னைத் தங்களில் ஒருவராகக் கருத ஆரம்பிக்கின்றனர். என்பால் அவர்களுக்கு அன்பும், அந்தக் குடும்பத்தின் மேல் எனக்குப் பாசமும் பிணைப்பும் ஏற்படுகின்றன. ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்கிறோம். இதனால் பேறு காலம் சுலபமாகவும் சந்தோஷமாகவும்அமைகிறது.

15. பேறு காலத்தில் தாய்மாரிடம் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

பேறு காலம் பெண்களைப் பொறுத்த வரை ஒரு முக்கியமான கட்டம். ஆகையால் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்கள் அன்பைச் செலுத்துவதோடு, மனம் புண்படாமல் நடந்து கொள்ள வேண்டும். மருத்துவரும் அவர்களிடம் கருணையுடனும் மனிதாபிமானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த அன்பின் மூலம் ஆயுள் பூராவுக்கும் நட்புறவு ஏற்படுகிறது. உதா



ரணமாக, ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்டுவிட்டு நான், "இவன் நல்ல பாடகனாக வருவான் போலிருக்கிறது. குரலே பாட்டு மாதிரி இருக்கிறது. பாட்டுக் கற்றுக் கொடுங்கள்!" என்று சொன்னேன். சில வருடங்கள் கழித்து அந்தத் தாய் என்னைச் சந்தித்த போது, பூரிப்புடனும் சந்தோஷத்துடனும் சொன்னார்: "நீங்கள் கூறியது மாதிரியே ஆயிற்றுடாக்டர்! இப்போது என் பையன் பெரிய பாடகனாக விளங்குகிறான்!" ஒரு சிறிய விஷயம், எவ்வளவு தூரம் நட்பை உறுதியாக்குகிறது பார்த்தீர்களா?

16. பேறு காலத்தில் வேறு ஏதற்கேனும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள நேர்ந்தால் என்ன மாதிரி விளைவுகள் ஏற்படும்?

வேறுவழியின்றி அறுவைச் சிகிச்சை செய்தால்தவிர, பொதுவாக இதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால், வயிற்றில் வளரும் சிசுவுக்கு அனஸ்தீஸியாவினால் நிச்சயமாகப்பாதிப்பு உண்டாகும். இதுபோலவே முதல் மூன்று மாதங்களில் முக்கியமாக எக்ஸ்—ரே எடுத்துக் கொள்ளக்கூடாது. சிலசமயம் அறியாமையினால் தவறு நேர்ந்து விடுவதுண்டு. உதாரணமாக – ஒரு தாய், ஒரு நண்பரின் குழந்தைக்கு எக்ஸ்ரே எடுப்பதற்கு அழைத்துக்கொண்டு போய், அருகிலிருந்தே உதவி செய்துவிட்டு வந்தார். இதுவே அவரது வயிற்றிலிருந்த குழந்தையைப் பாதித்து விட்டது!

17. மகப்பேறு முடிந்து எத்தனை நாட்களுக்குப்பிறகு சாதாரணமாக உடலுறவு கொள்ளலாம்?


40 அல்லது 42 நாட்களுக்குப் பிறகு. எல்லா மதத்தினருமே இட்டத் தட்ட இதைத்தான் பேறு கால முடிவின் கணக்காகக் கருதுகிறார்கள்.

தொகுப்பாசிரியர் குறிப்பு:

தாய்மை எல்லோருக்குமே அமைவதில்லை. ஆகவே மாமியார்களும் மருமகள்களும் ஒரு குடும்பத்தின் இன்னொரு மகிழ்ச்சியான காலம் ஆரம்பிப்பதாகக் கருத வேண்டும். நேரம்—காலம் இவற்றைக் கணித்து, ஓர் ஆண் அல்லது பெண்ணின் வாழ்க்கையைப் புறக்கணிப்பது தவறு. ஏனென்றால் மானிடராய்ப்பிறப்பதே அரிது: அதிலும் மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்ய வேண்டும் என்பார்கள். அதனால் நட்சத்திரங்கள், சகுனங்கள் இவையெல்லாம் குடும்பத்தினரின் மகிழ்ச்சிக்காக ஏற்பட்டதே தவிர, வாழ்வைக் குலைத்துக் கொள்வதற்காக அல்ல!



தலைவலி பலவகை உண்டு



சிகிச்சை ஒன்றே ஒன்று!

அனஸின்

இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

துரித நிவாரணம் அளிக்க, உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும், வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது — அனஸின்.

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ, முதுகு வலி, தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

அனஸின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்.



சக்தி வாய்ந்த நம்பகமான
மேனர்ஸ்
அனஸின்*

இப்போது பாதுகாப்பான ஃபாயில் உறையில்.

இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி மருந்து

* Licensed user of T.M. : Geoffrey Manners & Co.Ltd.

GM-2-83 TM

கேசத்துக்கு மென்மையும் பட்டுத்தன்மையும் தரும் இயற்கையான பராமரிப்பு

ஸ்வஸ்திக் சீக்காய்
சோப்பில் சுத்தமான
சீக்காயின் இயற்கையின்
எல்லா நற்குணங்களும்
நிரம்பியுள்ளன.
உபயோகிப்பது மிகவும்
சௌகரியமானது. திரவ
ஷாம்பூவைவிட மிகவும்
சிக்கனமானது.

வளமான நறுமணமிக்க
நுரை உங்கள் கேசத்திற்கு
மணமூட்டுகிறது, மென்மைய
முடன் கேசம் முழுவதையும்
சுத்தமாக்குகிறது. உங்கள்
கேசம் ஆரோக்கியமுடன்
பளபளக்கிறது, புதுமையான
மணம் வீசுகிறது.



ஸ்வஸ்திக் சீக்காய் சோப்

சீக்காய் அடங்கியது—இந்தியப் பெண்மணிகளின் எழிலோங்கும் கேசத்தின் பரம்பரை ரகசியம்!

shilpi dm 25/79 tam.

ஆபத்து எச்சரிக்கை



மாரடைப்பு

இந்த நோய் ஏற்படுவதற்குரிய ஆறு காரணங்களைத் தவிர்த்து விடுவதன் மூலம், நோய் அண்டாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

1. புகைப் பழக்கம் — பத்து வயதிலேயே புகை பிடிக்கத் தொடங்குகிறவர்கள் உண்டு. 10–15 வயது வரை பீடியோ, சிகரெட்டோ, சுருட்டோ, எதைப் பழகியிருந்தாலும் மற்றவர்களைவிட இவர்களுக்கு இரண்டு மடங்கு அதிகமாக நோய் ஏற்பட வாய்ப்புண்டு. நாற்பது வயதுக்குள் மாரடைப்பு வரக்கூடுமானால் இந்தப் புகைப் பழக்கம் ஒன்றுதான் காரணமாக இருக்கக் கூடும். ஃபில்டர் டிப் தானே, ஹுக்காத்தானே என்பதில்லை. எதுவானாலும் புகையும் விளைவும் ஒன்றே.

2. உடம்பில் அதிகமான கொழுப்புச் சத்து சேர்ந்து, எடை கூடினால் எச்சரிக்கை தேவை.

3. சர்க்கரை வியாதிக்காரர்களாக இருந்தாலும் கவனிக்க வேண்டும்.

4. ரத்தக் கொதிப்பு இருந்தால், மாரடைப்பு நோய் வரக் கூடும்.

5. வயது, உயரத்துக்கு ஏற்ப இருக்க வேண்டிய சரியான எடை இல்லாவிட்டாலும் ஆபத்துதான்.

6. கடைசியாக ஒரு காரணம், பாரம்பரியம். பெற்றோரில் ஒருவருக்கு நோய் இருந்தாலும், பிறக்கும் குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

தவிர்க்க முடியாத ஒரு காரணம் முதுமையடைவது. வயதானவர்களுக்கு இருதயத்துக்குப் போகும் ரத்தக் குழாய்கள் குறுகலாகி, இரத்த ஓட்டம் ஒரே சீராக இல்லாமல் தடைப்பட்டு, இருதயத்துடிப்பைப் பாதிக்கும்.

முன்பெல்லாம் இதயம் என்பது காதல், அன்பு சம்பந்தமான ஒரு விஷயமாகத்தான் நினைக்கப்பட்டது. இப்போது அப்படியெல்லாம் இல்லை. பாமர மக்களிடையேயும் கூட இது ஒரு



உடலியல் சம்பந்தமான உறுப்பு... ரத்தத்தை உள்ளே வாங்கி 'பம்ப்' செய்து வெளியே அனுப்புகிற ஒரு இயந்திரம் என்பது நன்கு உணரப்பட்டுவிட்டது. இதயம் சீரான முறையில் துடித்துக் கொண்டிருந்தால் தான் உடம்பின் எல்லாப் பகுதிகளுக்கும் இரத்தம் நன்றாகப் பாய்ந்து கொண்டிருக்கும்.

வேகமாக நடந்தால், அல்லது சாப்பிட்டவுடன் அல்லது, படி ஏறிமாடிக்குப் போகும் போது அல்லது கனமான பொருள்களைத் தூக்கும் போது மார்பின் மீது யாரோ ஏறி நின்று அமுக்குவது போன்ற உணர்ச்சி ஏற்படுமானால்—அதுதான் நோயின் அடையாளம்.

எப்போதுமே, இப்படி வலி ஏற்படுகிறபோது, வியர்த்துக் கொட்டவேண்டும் என்கிற அவசியமில்லை. சர்க்கரைநோய் உள்ளவர்களுக்கு, மற்றவர்களைப் போல் வலி ஏற்படாது. ஏற்பட்டாலும் தெரியாது. மார்பு, இடது தோள் பட்டையிலிருந்து விரல் நுனி வரை உட்புறமாக வலி ஏற்படும். ஓய்வு எடுத்தால் உடனே வலிகுறைந்து விடும். நெருக்குத்தாடையில் வலியேற்படும். இரத்த அழுத்தம், சர்க்கரைநோய் உள்ளவர்களுக்குத் தொண்டைக்குள், விழுங்கக் கடினமான வலியேற்பட்டால் உங்கள் குடும்ப டாக்டரை உடனே அணுக வேண்டும்.

மாரடைப்பு நோய் வந்து விட்டது என்பது நிச்சயமானால் வாழ்க்கை முறைகளை எப்படி மாற்றிக் கொள்வது?

எந்தத் தொழில் செய்பவர்களானாலும் உடலை வருத்திக் கொள்கிற வேலைகளைக் குறைத்துக்கொண்டு, உட்கார்ந்த இடத்தில் செய்கிற வேலைகளாக முடிந்த வரை பழகிக் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 10-ம் பக்கம்






சில உடற்பயிற்சி மு

இங்கே தரப்பட்டுள்ள சில உடற்பயிற்சி முறைகள், உங்கள் உடலின் தசைகள் வலுவுடன் உள்ளனவா அல்லது சோர்வுடன் உள்ளனவா என்பதைக் கண்டறிய உதவும்.

படம் 1: சுவரோரமாக முதுகையும் குதிகாலையும் ஒட்டி நின்றுகொண்டு, பிறகு சற்றுத்தளர்த்தி, மறுபடியும் நேராக நின்று பழகுங்கள். முழங்கால் மடியாமல் முன்புறம் குனிந்து தரையைத் தொடமுயலுங்கள்.

படம் 2: மல்லாந்து படுத்து மார்பில் கைகளை வைத்துக் கொண்டு அடிவயிற்றுத் தசைகளைச்சுருக்கித் தளர்த்துங்கள். அடித்தொடைத் தசைகளை வலுவாகச் சுருக்கித் தளர்த்துங்கள். இரண்டையும் பதினைந்து வினாடிகளுக்கு ஒரு முறை மாறி மாறிப் பதினைந்து முறைகளாவது செய்யவும். கார் ஓட்டும்போது கூட இதைச் செய்து பழகலாம்.

படம் 3: முதல் படம் போலவே மல்லாந்து படுத்து, முழங்காலை வளைத்து






எழுந்து உட்காரவும். இரண்டு கைகளாலும் காலை மடக்காமல் கட்டைவிரலைத் தொடமுயலவும். மீண்டும் மெல்லப் பழையநிலைக்கு வரவும்.

பள்ளிக்கூடங்களும் கல்விமுறையும்

தினசரி காலையில் ஒரு முட்டையும் டோஸ்ட்டும் சாப்பிட்டுவிட்டு அலுங்காமல் காரில் போய்ப் பாடம் படித்து விட்டு வருகிற வசதியான வீட்டுப்பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி நாற்பது வயதை எட்டுகிற போது இருதய நோய் தாக்கக் கூடும். உடல் உழைப்பு, போதுமான உடற்பயிற்சி எல்லாம் வேண்டும். இல்லாவிட்டால் முட்டையிலுள்ள முந்நூறு மில்லி கிராம் கொழுப்புச் சத்து(கொலஸ்ட்ரால்) தன்னுடைய வேலையைக் காட்டிவிடும்.


மிகவும் பிரபலமான பள்ளிக்கூடங்களில் ஒரு கோளாறு உண்டு. பாடத்திட்டப்படி விளையாட்டு வகுப்பு என்று ஒன்று உண்டு. இந்த நேரத்தில் விளையாட்டுப் பயிற்சி நடைபெற விட மாட்டார்கள். ட்யூஷன், ஸ்பெஷல் கிளாஸ் என்று நடக்கும். பெரிய பள்ளிக்கூடங்களில் குழந்தைகளின் படிப்பைப் பற்றியோ, ஒழுக்கம், ஆரோக்கியம் பற்றியோ கவலைப்படுவதில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பணக்காரப் பெற்றோர்களிடமிருந்து கறக்க முடிகிற நன்கொடைகள் மட்டும்தான்.





...கைகள்

படம் 4: கைகளைத் தலைப்பக்கம் அணைத்து வைத்துக் குப்புறப்படுத்து. இடுப்பைத் தூக்காமலும், முழங்காலை வளைக்காமலும் வலப்புறக்காலையும் இடப்புறக்காலையும் மாறி மாறித் தூக்கவும். பதினைந்து வினாடிகள் இப்படியே இருந்து சற்று ஓய்வு கொள்ளவும்.

படம் 5: கைகளை நேராக நீட்டி நிற்கவும். அப்படியே முதுகு வளையாமல் உட்காரவும். தேவையானால் ஒரு நாற்காலியைப் பற்றிக்கொள்ளலாம். மீண்டும் நிற்கவும். திரும்பச் செய்யவும்.







படம் 6: கைகளை மடக்காமல் மல்லாந்து படுக்கவும். முழங்கால் மடங்காமல் ஒவ்வொரு காலாக மாற்றி மாற்றி இடுப்பு வரை மடக்கி உயர்த்திப் பழகவும்.

படம் 7: மல்லாந்து படுக்கவும். கைகளை நேராக நீட்டவும். மெல்ல முழங்கால்களை மடக்கி உட்காரவும். முன்புறம் வளைந்து முழங்கால் மேல் முகத்தை வைத்துக் கைகளைப் பாதம் வரை மடக்காமல் நீட்டவும். மீண்டும் பழைய நிலைக்கு வரவும்.

குறைந்த அளவு தேவையான உடைகளுடன், அல்லது தொளதொளப்பான படையுடன் தான் இவற்றைச் செய்ய வேண்டும். பயிற்சிகளுக்குத் தரைவிரிப்பு அவசியம். பயிற்சிகளை ஒன்று இரண்டுமுறை என்று மெல்லத் தொடங்கிப் பதினைந்து முறைகள் வரை செய்யலாம். வலியெடுத்தால் பயிற்சியை முடித்துக் கொள்ளலாம்.

ஊட்டச் சத்து நிறைந்த உணவு வகைகள்

பிரான்ஸ் நாட்டிலிருந்தோ பிரிட்டனிலிருந்தோ பிரமுகர்கள் வருகிறார்கள்.

விருந்து கொடுக்கிறோம். தட்டு நிறைய அழகாகத் துண்டுதுண்டாகப் பழத்தை நறுக்கி ஜோடனை பண்ணி வைக்கிறோம்.



செவேலென்று கண்ணைப் பறிக்கும் அந்தப் பழத்துண்டுகளை 'அந்நியர்கள்' ஆசையோடு வாயில் போட்டுச் சுவைத்து மகிழ்கிறார்கள். இந்தப் பழம் ஒன்றும் விலை உயர்ந்த ஆப்பிளோ வேறு எதுவோ என்று மலைக்க வேண்டாம். குப்பை மேட்டில் விளைகிறது என்று நாம் அலட்சியப்படுத்துகிற பப்பாளிப்பழம்தான் அது.

பப்பாளிப் பழமா... நெருப்பு ஆயிற்றே. கர்ப்பம் கலைந்து விடுமே என்றெல்லாம் இங்கே மிரட்டுகிறார்கள். நாமும் மிரளுகிறோம். ஆனால் இதே பப்பாளிப்பழம் 'பப்பிடா' என்று என்ஸைம் மாத்திரையாக உருமாறி வந்தால் எண்பது காசு ஒருரூபாய் என்று கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறோம்.

நம்ம ஊர் நிலக்கடலை, கொத்துக் கடலைகளில் உள்ள ஊட்டச் சத்து நமக்குப் புரிவதே இல்லை. 'ஆஃப்டர் ஆல் நிலக்கடலை' என்கிற மாதிரி ஓர் அலட்சியம்.

அன்னாசிப்பழம், பப்பாளிப்பழம், கடலை வகைகள், கருப்பட்டி இவற்றிலிருந்து எல்லாம் பெற முடியாத எந்த ஊட்டச்சத்தை டானிக்குகளும் ஆப்பிள்களும் தந்துவிட முடியும்?

செய்ய வேண்டியவை, கூடாதவை

1. உணவில் கொழுப்புச் சத்து அறவே விலக்கப்பட வேண்டும். ஸனோலா, பாம் ஆயில் போன்ற கொழுப்பு இல்லாத எண்ணெய் வகைகளை உபயோகிக்கலாம்.

2. மூக்கு முட்டச் சாப்பிடுவது தவறு. வயிற்றில் கொஞ்சம் காலியிடம் விட்டே உணவை முடித்துக் கொள்ள வேண்டும்.

3. சிறுசிறு அளவுகளில், அடிக்கடி உணவு கொள்ளலாம். இது நல்லது.

4. சாப்பிட்டவுடன் அரை மணி முதல் ஒரு மணி வரை கண்டிப்பாக ஓய்வு கொள்ளவேண்டும்.

5. இரவு நீண்ட நேரம் சென்று சாப்பிடுவதை அறவே தவிர்க்க வேண்டும். இரவு ஏழு மணிக்குள் சாப்பிட்டு விட வேண்டும். உணவு செரிமானமாகப் போதிய அவகாசம் தரப்பட வேண்டும்.

6. மலச்சிக்கலை ஏற்படுத்தக் கூடிய உணவுப் பண்டங்கள் ரவை, பருப்பு, எண்ணெய்ப் பண்டங்களை ஒதுக்குங்கள். பொதுவாக உணவில் உப்புசத்தின் அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

காபியை விடத் தேநீர் சாப்பிடுவது நல்லது. அவசியமானால், டிகாக்ஷன் குறைவாகப் பால் அதிகமாக விட்டுக் காபி சாப்பிடலாம். முழுவதும் தவிர்ப்பதே நல்லது.

பழ வகைகள் எதுவானாலும் சாப்பிடலாம்.

குதிரைப் பந்தயங்கள் பார்க்கும் போது, லாட்டரி ரிஸல்ட் பார்த்து.. என்று ஏற்படும் அதிர்ச்சி மரணங்களைப் பற்றிப் படிக்கிறோம். இதுபோன்று உணர்ச்சிப்பரபரப்பை ஏற்படுத்தக்கூடிய விவகாரங்களைத் தவிர்க்க வேண்டும். துயரம் தருவதான, மகிழ்ச்சியூட்டுவதான செய்திகளைப் 'பட்' டென்று சொல்லிவிடாமல் நிதானமாகச் சொல்வது நோயாளிக்கு நன்மைதரும்.

கொஞ்சம் கொஞ்சமாக, சாதாரணமான உடற்பயிற்சிகள் பயன்தரும். ஆற அமர, அனுபவித்து நடந்து செல்வது — தினசரி காலையில் அரைமணி, மாலையில் அரைமணிக்குக் குறையாமல் நடப்பது மிகவும் நல்லது.

இருதய நோயாளிகள் சாதாரணமாக உடலுறவு கொள்வதில் தவறில்லை. FORE PLAY எனப்படும் முன் அனுபவிப்பில் அதிக நேரம் செலவிட்டு நிதானமுடன் இருப்பது நல்லது.

இருதய நோயாளிகள் தங்களுக்கு நோய் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டவர்கள். மற்றவர்கள் தமக்கு இருதய நோய் உள்ளதா இல்லையா என்பதை அறியாதவர்கள். இதுதான் வித்தியாசம்.

எப்போதும் மருந்து கைவசம் இருப்பது நல்லது. 'இனிசரில் ட்ரை நைட்ரேட்' போன்ற மார்புவலிதடுப்பு மாத்திரைகளை, டாக்டரின் ஆலோசனைபெற்று வைத்திருந்துபயன்படுத்தவேண்டும்.

பயணிகளை ஏற்றிச்செல்லும் வண்டி, வாகனங்களை ஓட்டுகிறவர்கள் இருதய நோய்க்காரர்களாகஇருக்கக் கூடாது. முக்கியமாகப் போக்குவரத்து வாகனங்கள் பள்ளிக்கூட பஸ்கள் இவற்றின் டிரைவர்கள் இருதய நோய் இல்லாதவர்கள் என்று சோதனை செய்யப்பட்ட பின்னரே நியமிக்கப்பட வேண்டும். நீங்கள் சொந்தத்தில் கார் வைத்திருப்பவரானாலும் உங்கள் செலவிலேயே டிரைவரின் உடல்நலத் தகுதியை, இ. ஸி. ஜி. பார்த்து அறிந்து கொள்வது, உங்களுக்கு மட்டுமின்றி சமூகத்துக்குமான தொண்டாகும்.

இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தவறாமல் இ. ஸி. ஜி. சோதனை பண்ணிக் கொள்ளவேண்டும். இருதய நோயாளிகள் கண்டிப்பாகச் செய்து கொள்ள வேண்டிய சோதனைகள்:

1. மாதம் ஒருமுறை இரத்த அழுத்தச்சோதனை.
2. ஆறு மாதத்துக்குஒரு முறை இ. ஸி. ஜி., சர்க்கரை, கொழுப்புச்சத்துச் சோதனைகள்.
3. ஆண்டுக்கு ஒருமுறை ஒரு கார்டியாலஜிஸ்ட்டிடம் சென்று பொதுவான நிலவரம் அறிந்து கொள்ள வேண்டும்.

கால் ஆணிகள் (PRESSURE CORNS)

சாதாரணமாகப் பாதத்திலோ, குதிகாலிலோ அழுத்தம் ஏற்பட்டால் (அதாவது ஒரு குறிப்பிட்ட பாகத்தில் அழுத்தம் ஏற்பட்டால்) அங்கே ஆணி தோன்றுகிறது. உதாரணமாக, தேய்ந்து போன செருப்பையோ, அல்லது பூட்சையோ உபயோகிப்பதால் உண்டாகும்; சரியான அளவில்லாமல் காலை பூட்ஸின் மேல் பாகம் அழுத்துவதாலும் உண்டாகும். இது ஒரு சிலருக்குத்தான் உண்டாகிறது.

இந்த ஆணிகளை அமிலங்கள் மூலமாக, அல்லது மின்சாரத்தை உபயோகித்து (எலக்ட்ரோ காட்டரி) எடுத்துவிடலாம். ஆனால் அதே இடத்தில் அநேகருக்கு மறுபடி வரும்.

பொதுவாக, கால் ஆணிகள் விளையாட்டு வீரர்களைத்தான் தொந்தரவு செய்கிறது. இதை எடுக்க, காலணிகள் விற்கும் பெரிய கடைகளில் CORN CAPS என்ற பெயரில் விற்பனை செய்கிறார்கள். மருந்துக்கடைகளிலும் இது கிடைக்கிறது. இதைக் குணமாக்க—

டிரை—க்ளோரர் — அஸடிக் ஆஸிட்,
கார்பாலிக் ஆஸிட்

ஆகியவற்றையும் உபயோகித்துப் பயனடையலாம்.

பாதத்துக்குச் சரியான காலணிகளை அணிந்தாலே வெகுவாகத் தடுத்து விடலாம்.

செய்யக் கூடாதவை:

பிளேடினாலோ அல்லது கூர்மையானமுனை உள்ள கருவியாலோ இவற்றை அறுத்தெறிய முயல்வது தவறு. ஏனென்றால் இவற்றினால் நோய்த் தொற்று ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து நேரிடலாம்.



பண்டைக்காலம் முதல் பிரசித்தமான கிராம்புத்
தைலத்தின் குணுதிசயங்களின் பயனைப்பெற ஆயிரக்
கணக்கான குடும்பங்கள் இப்பொழுது
கிராம்புத் தைலம்
கொண்ட
ப்ராமிஸ்
உபயோகிக்கிருர்கள். நீங்களும் உபயோகியுங்கள்
அதிசயம்தான்! இதற்குமுன் யாருக்கும் இந்த யோசனை தோன்றவில்லையே!
ப்ராமிஸ்
• பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது.
• வாய்க்குப் புத்துணர்ச்சி தருகிறது.
• துர்நாற்றத்தை அகற்றுகிறது.
Promise
Promise
Promise
Pr
Promise
TOOTH POWDER
with time-tested Clove Oil
சர்வதேச கோல்ட் மெடல் பெற்ற தயாரிப்புகள்
ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சி மிக்க மூச்சு
பல்ஸாரா தயாரிப்பு
CHAITRA-BLS-668 TAM

"Mummy, I hate nights because I can't see your face".



40,000 children in India go blind every year from malnutrition. Night-blindness is the first stage.

This tragedy can easily be prevented — with an inexpensive diet of green leafy vegetables. Or with adequate doses of Vitamin A.

Vitamin A is produced in India. Capability to meet the country's full requirements already exists.

Government agencies and voluntary organisations are trying to educate parents on the value of green leafy vegetables in the diets of children. But it's hardly enough.

What is now needed is nation-wide determination, a new nation-wide commitment — the forging of a "national will" as it were — to fight the disease of blinding malnutrition (Xerophthalmia).

India eradicated smallpox with a national campaign. We can eradicate Xerophthalmia too: we MUST.

Get involved. Write today for a free leaflet on Xerophthalmia.

Organisation of Pharmaceutical Producers of India
Cook's Building, Dr D N Road, Bombay 400 001

RADIUS OPP. 1-88

சிறுநீர் சிறுநீரக நோய்கள்

டாக்டர் கே. ரவிசங்கர் பதிலளிக்கிறார்:

1. சாதாரணமாக, நிவாரணம் கேட்டு வரும் சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய் குறி என்னென்ன?

சிறுநீருடன் திடீரென்று ரத்தம் போகும்பொழுது, அதிர்ச்சி அடைகிறார் ஒருவர். தமக்குத் தெரிந்த டாக்டரிடம் போய் இதைச் சொல்லுகிறார். டாக்டர் உடனே, 'உங்கள் உடம்பிலிருக்கும் சூடுதான் இதற்கு காரணம்' என்கிறார். டாக்டர்கள் மட்டுமல்ல, வீட்டிலுள்ள பெரியவர்களும் இப்படித்தான் சொல்லிவிடுகிறார்கள். இதைக்கேட்டுவிட்டு அசிரத்தையாக இருந்து விடுகிறார் அவர். என்ன காரணத்தினால் சிறுநீருடன் ரத்தமும் கலந்து போயிற்று என்று கண்டுபிடிக்க முயலுவதில்லை. பல வித காரணங்களால் இது ஏற்படுகிறது.

2. அப்படியானால் அவர் என்ன செய்ய வேண்டும்?


ரத்தத்தின் நிறம் சிவப்பு. சிவப்பு எதைக் குறிக்கிறது? அபாயத்தை. இல்லையா? உடனே செயல்படு என்று இது காட்டுகிறது. சிறுநீரில் ரத்தம் வெளிப்பட்டால் தேவையான பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். முக்கியமாக, புற்று நோய், சிறுநீர்ப்பையில் இருக்கிறதா இல்லையா என்று இச்சோதனைகளில் தெரிய வரும். பரிசோதனைகளின் முடிவு நல்லதாகவே இருக்கும் பட்சத்தில் நீங்கள் கவலைப்படவே வேண்டாம்.



✖ சிறுநீரகத்தின் உட்புறத் தோற்றம்

3. இதற்கு என்ன காரணம் என்று சொல்லுகிறீர்கள்?

குழந்தைகளைப்பொறுத்தவரை, சிறுநீர் கழிக்கும் உறுப்பின் முன்புறத் தோலில் உண்டாகும் புண், அல்லது கீறல்கள். பள்ளிச் சிறுவர்களாயிருந்தால், சிறுநீரகப் பையில் (Bladder) நோய்த் தொற்று ஒரு காரணம். பருவத்திற்கு வந்த ஆண் அல்லது பெண்ணாயிருந்தால், பாலுறவு காரணமாகச் சிறுநீர் நோய்த் தொற்று ஏற்பட்டு அதன் விளைவாக, சிறுநீரில் ரத்தம் வரலாம். வயதானவர்களாயிருந்தால், சிறுநீரகத்திலோ, சிறுநீர்ப்பையிலோ கான்சராயிருக்கலாம். சிறு



நீர்ப் பாதையில் அடிக்கடி நோய்த் தொற்று (யூரினரி டிராக்ட் இன்ஃபெக்ஷன்) வந்தால், சிறுநீர் ரத்தம் கலந்துபோகும். இப்படி எத்தனையோ காரணங்கள்.

4. சிறுநீரகத்தில் ஏன் கற்கள் வருகின்றன?

நம் எல்லோருக்குமே, உடலுக்குத் தேவையான தாது உப்புக்கள் நம் உடலில் இருக்கின்றன. சில குறிப்பிட்டுச் சொல்ல முடியாத காரணங்களால், அல்லது சில சந்தர்ப்பங்களில் இந்த உப்பு, கற்களாக மாறிவிடுகிறது.



○ டாக்டர் கே. ரவிசங்கர்

இதற்குச் சுற்றுப்புறச் சூழலும் ஒரு காரணம். (மலைப் பிரதேசத்தில் உள்ளவர்கள் அல்லது மலையடிவாரத்தில் இருந்து கொண்டு ஓடும் நீரை உபயோகிப்பவர்கள், இவர்களை இது பாதிக்கிறது.) பாதுகாக்கப்பட்ட குடிநீரை உபயோகிப்பவர்களுக்கு இது வருவதில்லை என்று சொல்லலாம்.

தக்காளி, ஆரஞ்சு, காரட், இவற்றை அதிகமாக, தினசரி தொடர்ந்து உபயோகிப்பவர்களின் சிறுநீரகத்தில் கற்கள் உண்டாவதுண்டு. குழந்தைகள் விஷயத்தில் கோகோ சாக்லேட் அதிகம் சாப்பிடுவதால் கற்கள் உண்டாகின்றன. மேற்படி காய் – கனி வகைகளில் அதிகபட்ச ஆக்ஸிலேட் இருப்பதுதான் காரணம்.

5. வயதானவர்களுக்கு வரும் நோய் என்ன?

ப்ராஸ்டேட் க்ளான்டுகள் வீக்கம். அதனால் சிறுநீர் கழிப்பதே தடைப்பட்டுப் போகும். அடிக்கடி சிறுநீர் கழிக்கும் பழக்கம் உள்ள, அறுபது வயதுக்கு மேற்பட்டவர், டாக்டரை அணுக வேண்டும். இரவில் ஒருமுறை அல்லது இருமுறை சிறுநீர் கழித்தால் தவறில்லை. மாரிக் காலம் அல்லது குளிர் காலத்தில் மூன்று முறை

அதிலும் ஒவ்வொரு முறை போகும்பொழுதும், தாமதித்து, சற்றுப் பொறுத்துச் சிறுநீர் வெளிப்பட்டால் ப்ராஸ்டேட் கிளான்டு வீங்கியிருக்கின்றது என்பதன் அறிகுறியாகக் கொள்ள வேண்டும்.

6. எந்தச் சந்தர்ப்பத்தில் அறுவைச் சிகிச்சை தேவை?

சிறுநீர்ப் பாதையில் நோய்த் தொற்று இருந்து, சிறுநீர்ப் பையில் புண் இருந்தால் Benign என்று சொல்லப்படும் சாதாரண வகையாயிருந்தால் அறுவை சிகிச்சை நிச்சயம் தேவை. புற்று நோய் வகையைச் சேர்ந்ததாயிருந்தால் தேவையில்லை; கதிரியக்கச் சிகிச்சைக்குக் கட்டுப்பட்டுவிடும்.

7. வயதானவர்களுக்கு அப்படி அறுவைச் சிகிச்சை செய்யலாமா?

அவர்களது ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் இருக்கிறதா இல்லையா, பொதுவாக அவர்களது தேக ஆரோக்கியம், ஈ. சி. ஜி. எல்லாம் பார்த்து, எல்லாம் திருப்திகரமாயிருந்தால் மட்டுமே அறுவை சிகிச்சை செய்யலாம். அதிலும் இப்போதெல்லாம் சிறுநீர்ப் பாதைவழியே கம்பி போன்று செலுத்தப்படும் நவீன கருவிகள் வேலையை எளிதாக்கிவிட்டன. ஆபரேஷன் செய்து கொண்டவர்கள் கூட ஐந்தாறு தினங்களில் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குப் போய்விடலாம்.

8. பெண்கள் விஷயத்தில்?


பெண்களைப் பொறுத்தவரை, சிறுநீர்ப்பையிலிருந்து வரும் குழாயில் சுருக்கு (Stricture) அல்லது அடைப்பு சாதாரணமாக இந்த நாட்களில் ஏற்படுவதுண்டு. முன்பெல்லாம் ஆண்களுக்கு மட்டுமே இது வரும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். இதற்கும் தகுந்த முறையில் சிகிச்சை அளித்துக் குணப்படுத்தலாம்.



இப்போதெல்லாம் குடும்ப டாக்டர் என்கிற முறையே மாறிவிட்டது. எந்த நோயானாலும் அதற்காக என்று உள்ள நிபுணரிடம் நோயாளிகள் தாங்களே சென்று ஆலோசனை பெறுகிறார்கள். பொதுவாக நடுத்தரக் குடும்பதினருக்கு ஏற்படக் கூடிய நல்வாழ்வுப் பிரச்னைகளை அவர்களே தீர்த்துக் கொள்ள முடியும். எளிமையான கைவைத்திய முறைகளிலேயே குணம்பெறலாம். அலோபதி முறைதான் சிறந்தது என்றோ, வேறு விதமான வைத்திய முறைகளால் பலனில்லை என்றோ நாமே கணித்துக் கொள்வது தவறு. நாள்பட்ட எந்த நோயானாலும் பலவிதமான வைத்திய முறைகளையும் பயன்படுத்தியாவது குணம் பெற முயல வேண்டும். தவிர இந்த முறை தான் சிறந்தது, மற்ற முறைகள் உதவாது என்று டாக்டர்களே கூறினாலும் அது நோயாளிகளுக்கு இழைக்கும் அநீதிதான். திறந்த மனத்தோடு எப்படியேனும் நோய் தீர ஆவன அனைத்தையும் செய்யவேண்டும் என்று கருதுகிறவர்களே நல்ல டாக்டர்களாவார்கள்.

அறிவுரையாகச் சில வார்த்தைகள்

இந்தத் திறந்த மனமுடைய டாக்டர்கள் தங்கள் பணியில் சிறந்தோங்க, உங்கள் ஒத்துழைப்பும் அவர்களிடம் நீங்கள் வைக்கும் முழு நம்பிக்கையும் அத்தியாவசியமானவை. தினசரி ஒரு டாக்டர் என்று போய்க் கொண்டிருக்கும் உறுதியற்ற தன்மையும் உதவாது, நோயும் குணமாகாது. எல்லாவற்றுக்கும் மேலாக, 'வருமுன் காத்தல்' என்னும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதும், தன்னம்பிக்கையுடன் செயல்படுவதும், எப்போதும் உற்சாகம் குன்றாமல் இருக்கப் பழக்கப்படுத்திக் கொள்வதுமே நிறைவான ஆரோக்கிய வாழ்வை அளிக்கும்.



இவர், டாக்டர் சுரேஷ் பாட்டியா

(எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., எஃப்.ஆர்.ஸி.எஸ்.)

உயர்நிலை கல்வி பெறுவதற்கு ஸ்டேட் பாங்க் கல்வித் திட்டம் உதவுகிறது.

ஸ்டேட் பாங்க்

பாதுகாப்பு ஒரு
நிம்மதியான மன நிலை.

CHAITRA-SBI-1065 TAM



ULKA-HCG- 4 -84 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

